கோகுலம்

GOKULAM

பிப்ரவரி '96 ரூ. 5.00



பிப்ரவரி 1996
மலர் : 14 இதழ் : 1



கோகுலம்

அருமைச் சிறுவர்
சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம். புத்தாண்டு, பொங்கல் வாழ்த்து அனுப்பிய தம்பி தங்கைகள் எல்லோருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் அன்புக்கு நன்றி.

உங்கள் கோகுலத்திற்குப் பதிமூன்று வயது முடிந்து இந்த இதழில் பதினான்காம் ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது. சிறுவர் பத்திரிகை என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாக கோகுலம் திகழ்கிறது என்று பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்டுகிறார்கள். சிறுவர் படித்துப் பயன் பெற வேண்டிய முன் மாதிரிப் பத்திரிகை என்று சிறுவர் இலக்கியத்தின் திறனாய்வாளர்கள் புகழ்கிறார்கள். இவர்களது புகழுரைக்கும் பாராட்டுரைகளுக்கும் தலை வணங்கி நன்றி செலுத்துகிறது கோகுலம். இதே நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.


பாராட்டுரைகளும், புகழுரைகளும் மட்டும் ஒரு பத்திரிகையை வளர்க்கப் போதுமானவை அல்ல. மற்றவர்களையும் காசு கொடுத்து வாங்கி இதைப் படிக்க வைக்கும் வழக்கம் இன்னும் பெருக வேண்டும். தமிழ் அறிந்த பெற்றோர் எல்லோரும் தமிழ் கோகுலத்தைத் தங்கள் குழந்தைகளுக்கு வாங்கித் தந்து படிக்க வைக்கும் வழக்கத்தைப் பெருமையாக எண்ண வேண்டும். கோகுலத்தின் 13 ஆண்டு வளர்ச்சிக்குக் காரணமாக உள்ள வாசகர்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் கோகுலம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

புவனா தேடிய புதையலில் இந்த இதழில் ஒரு புதிய திருப்பம். இது கதைக்கு மேலும் விறுவிறுப்பூட்டுவது உறுதி.

கோகுலத்தின் பேட்டிகளில் பங்கேற்க சென்னையில் உள்ள சிறுவர்களுக்கு மட்டுமே வாய்ப்புத் தருகிறீர்கள். வெளியூர்களில் உள்ள எங்களுக்கும் வாய்ப்புத் தாருங்கள் என்று ஏராளமான தம்பி தங்கைகள் எழுதிக் கேட்கிறார்கள். அவர்களை உற்சாகமூட்ட இதோ ஓர் முயற்சி. வெளியூர்களில் இருக்கும் சிறுவர் சங்கங்கள், கோகுலத்தின் சார்பில் பேட்டிகள் எடுத்து அனுப்ப விரும்பும் ஆசிரியர்கள் தங்களைப் பற்றிய விவரங்களை எங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறோம். புகைப்படம் எடுக்கக்கூடிய வசதி உள்ளவர்கள் இதைப் பற்றியும் தெரிவிக்கவும். ஆனால், கோகுலத்தின் முன் அனுமதி பெறாமல் யாரும் கோகுலம் சார்பில் பேட்டி எடுக்கக் கூடாது.

உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதானே? ரம்சான் கொண்டாடும் அனைவருக்கும் ஈத் பெருநாள் வாழ்த்துகள்.

அன்புடன்,
ரேவதி
(கௌரவ ஆசிரியர்)



> உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
> உண்மையென்று தானறிதல் வேண்டும்.
> — பாரதியார்


கோகுலம் பிப்ரவரி மாத இதழ்


இந்த இதழில்...

• கமலம் போட்ட சபதம்! (படக்கதை) பக்கம் 45



• காட்டில் நடந்த கண்தான விழா பக்கம் 69






• தையற்சிட்டுக்கு நீண்ட வால் உண்டா? பக்கம் 22


• எல்லாப் பெருமைகளும்! பக்கம் 26





''அந்த மீன் சின்ன மீனா இருந்தாலும் அது ரொம்ப 'செல்'ஃபிஷ்தான்...!''

- ஜி.பி. சுப்ரஜா,
குடியாத்தம்.



"எங்க போயிட்டு வரே...?"

"ஒரு ஆபரேஷனுக்கு ரத்தம் கேட்டாங்க... கொடுத்துட்டு வரேன்.

- மு. செந்தில்குமார்,
கும்பகோணம்.



"என் தங்கைக்கு 'பல்லி'ன்னு சொன்னாலே பயம்."

"உனக்கு?"

" 'பள்ளி'ன்னு சொன்னா பயம்!"

- ஆரணி அம்புலி.

பொங்கல் பரிசு!

மலையடிவாரத்தில் உட்கார்ந்திருந்த முருகனின் கண்கள் கலங்கியிருந்தன.

பொங்கலுக்கு ஒரு மாதமே இருந்தது...

அவனுடன் எட்டாவது வகுப்பில் படிக்கும் சக மாணவர்கள் அனைவரும் பொங்கலுக்கு விதவிதமான பேண்ட்... சட்டைகள் வாங்கிக் கொண்டதாகக் கூறியபோது அவன் மட்டும் வாய்மூடி இருக்க வேண்டியிருந்தது.

காரணம்... அவனுடைய அப்பாவுக்கு விவசாயத்தில் பலத்த நஷ்டம் ஏற்பட்டதால், பொங்கலுக்கு வீட்டில் உள்ளவர்களுக்குத் துணிமணிகள் வாங்கப் போவதில்லை எனக் கூறிவிட்டார்!

அதை எண்ணி அழுது அழுதுதான் அவன் கண்கள் கலங்கியிருந்தன.

அப்போது...

அவனுடைய பார்வை... சற்றுத் தள்ளியிருந்த ஒரு சிறு குகையை நோக்கிச் சென்றது. அதன் வாசலில், ஒருவன் முரட்டு மீசையுடன், கைலி கட்டிக் கொண்டு, படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

யார் இவன்? மூளையைக் கசக்கிக் கொண்டான் முருகன்.

முருகனுடைய பள்ளியில் தினமும் காலையில் செய்திகள் வாசிப்பது வழக்கம். அதன்படி நேற்று வாசித்தபோது, ஒரு பிரபல ரவுடி சிறையிலிருந்து தப்பிவிட்டதாகப் படித்தது நினைவுக்கு வந்தது. அத்துடன் அந்தச் செய்தி தூண்டிவிட்ட ஆர்வத்தால் இடைவேளையில் பள்ளி நூலகத்திற்குச் சென்று அன்றைய நாளிதழில் அந்த ரவுடியைப் பற்றி படத்துடன் விரிவாகச் செய்தியைப் படித்ததும் நினைவுக்கு வந்தது.

பூனைபோல் சப்தம் எழாமல் குகை அருகில் சென்றான்.

நாளிதழின் புகைப்படத்தில் பார்த்த அதே ரவுடிதான். படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

கவடு தெரியாமல் நழுவிய முருகன். போலீஸ் ஸ்டேஷனை நோக்கி விரைந்தான்.

போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடம் தான் பார்த்ததைக் கூறினான்.

"அப்படியா..! நன்றாகப் பார்த்தாயா...?" என்ற சப்-இன்ஸ்பெக்டர் துப்பாக்கியைக் கையில் எடுத்துக் கொண்டு முருகனுடன் புறப்பட்டார்.

மலையடிவாரத்தில் சற்று தூரத்திலேயே ஜீப்பை நிறுத்திவிட்டு, முருகன் காட்டிய இடத்திற்கு ஓசையெழாமல் சென்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

அங்கு அந்த ரவுடி இன்னமும் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான். சப்-இன்ஸ்பெக்டரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

"தம்பி! நாங்கள் தேடிக் கொண்டிருந்த பயங்கர ரவுடி இவன்தான்! இவன் ஒளிந்திருக்கும் இடத்தை அடையாளம் காட்டிய உன் சமூகப் பொறுப்புணர்வைப் பாராட்டுகிறேன்... ஆனால், தம்பி..." என்று இரகசியமாகத் தொடங்கி முடிக்காமல் இழுத்தார் சப்-இன்ஸ்பெக்டர்.

முருகன் வியப்புடன் பார்த்தான்.

"தம்பி! இவனை நான் தேடிப் பிடித்ததாகச் சொன்னால் எனக்குப் பதவி உயர்வு கிடைக்கும். நீ விட்டுக் கொடுத்தால்... இது நடக்கும். இதற்கு உன் அனுமதி வேண்டும்..." என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"அதற்கு என்ன ஐயா...? தாராளமாக



நீங்கள் அப்படியே சொல்லிக் கொள்ளுங்கள். நான் ரவுடி இருக்குமிடத்தைச் சொன்னாலும் அவனைப் பிடிக்கப் போவது நீங்கள்தானே? நீங்கள் பதவி உயர்வு பெற, என்னால் உதவ முடிந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்" என்றான் முருகன்.

இருவரும் மீண்டும் குகைக்குத் திரும்பினர்.

ரவுடி இன்னும் அசந்து தூங்கிக் கொண்டிருந்தான்... தூக்க மருந்து சாப்பிட்டிருப்பானோ?

தூங்கிய நிலையிலேயே அவன் கைகளில் விலங்கைப் பூட்டினார் சப்-இன்ஸ்பெக்டர். பிறகு அவனைத் தட்டி எழுப்பினார்.

திடுக்கிட்டு விழித்த அவன், எதிரில் துப்பாக்கியோடு சப்-இன்ஸ்பெக்டரைக் கண்டதும் திகைத்தான். கையில் விலங்கு பூட்டியிருந்ததும்

ராஜி ராதா

அதிர்ச்சியாக இருந்தது.

அவனை ஏற்றிய பிறகு, போலீஸ் ஸ்டேஷன் நோக்கி ஜீப் புறப்பட்டது.

நாட்கள் ஓடின.

பயங்கர ரவுடியைப் பிடித்ததற்காக சப்-இன்ஸ்பெக்டருக்குப் பதவி உயர்வு வந்தது. அவர் இன்ஸ்பெக்டராகிவிட்டார்.

தன் பதவி உயர்வுக்காகப் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்த முருகனைத் தேடிப் போனார்.

முருகன் வழக்கம் போல அந்த மலையடிவாரத்தில் மாலையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டரைக் கண்டதும் எழுந்து ஓடிவந்து சல்யூட் அடித்தான்.

பதிலுக்கு அவனுக்கு சல்யூட் செய்த இன்ஸ்பெக்டர், அவனை ஜீப்புக்கு அழைத்துச் சென்று ஒரு பரிசுப் பொட்டலத்தை எடுத்து, "இது என் பொங்கல் பரிசு" என்று நீட்டினார்.

ஆவலாக அதைப் புரட்டிப் பிரித்தான்.

அழகான புத்தாடைகள்!

அவனுக்கு மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தினர் அனைவருக்குமே அழகழகான புதிய உடைகள் இருந்தன.

நன்றி உணர்வில் இருவருக்குமே பேசத் தோன்றவில்லை.




போம்மா, இதே வேலை!

முரளியின் அம்மா அடுக்களையிலிருந்து குரல் கொடுத்தாள். "முரளி... அலமாரியில புது ஸ்டவ் பின் இருக்கு, கொஞ்சம் எடுத்துகிட்டு வா ராஜா..."

விளையாடிக் கொண்டிருந்த முரளி "போம்மா... உனக்கு இதே வேலை! எனக்கு நிறைய வேலை இருக்கு" என்றான்.

அம்மா பதில் பேசாமல் ஹாலுக்கு வந்து, அலமாரியில் இருந்த ஸ்டவ் பின்னைத் தேடி எடுத்துக் கொண்டு போனாள்.

சிறிது நேரம் கழித்து "முரளி.. தெருக்கோடியில் இருக்கற 'நர்மதா ஸ்டோருக்கு' போய் ஒரு கிலோ ரவை வாங்கிகிட்டு வா" என்றாள் அம்மா மறுபடியும்.



"ஐயோ, போம்மா. எனக்கு போரடிக்குது. நான் வெளியே போய் விளையாடறேன்"- என்று சொல்லி விட்டு வெளியே ஓடினான் முரளி.

அன்று மாலை எதிர்பாராத விதமாக ஸ்டவ் ரிப்பேர் கடையில் அம்மா, முரளியின் வகுப்பு டீச்சரைச் சந்திக்கும்படி இருந்தது.

முரளியைப் பற்றி பேச்சு வந்ததும் அம்மா சொன்னாள்.

"படிப்பு பற்றி பிரச்சினையே இல்லை. எல்லாவற்றிலும் முதல்தான். ஆனால், அவங்கிட்ட கீழ்ப்படிதலே இல்லை மேடம். ஒரு சின்ன வேலையைக் கூட சொன்னா செய்ய மாட்டேன் என்று போய்விடுகிறான்."

"இதை ஏன் நீங்க எங்கிட்டே முன்னாடியே சொல்லலை...? சரி, இந்த விஷயத்தை எங்கிட்ட விட்டுடுங்க. நான் பாத்துக்கறேன்"-என்றார் ஆசிரியை.

மறுநாள் காலை முரளி, ஆசிரியையின் வீட்டுக்குச் சென்றான். அவரே வரச் சொல்லி இருந்தார்.

டீச்சர் பூஜை அறையிலிருக்கவே, எட்டிப் பார்த்தான். முரளியைக் கண்டதும் டீச்சர், "வா முரளி... பூஜையை முடிச்சிட்டு வந்துடலாம்னா 'பூவே' கிடைக்கல. சரி இந்தக் காகிதப் பூவை வச்சே பூஜை பண்ணிடலாம்னு நெனைச்சேன். அதுக்குள்ள நீயே வந்துட்டே" என்றார்.

"என்ன டீச்சர் நீங்க! காகிதப் பூவையெல்லாம் பூஜைக்குப் பயன்படுத்தக் கூடாது. சாமிக்கு காகிதப்பூ பிடிக்காது டீச்சர்" - முரளி சொன்னான்.

"ஏன்? போட்டா என்ன முரளி? நிஜப் பூவைவிட காகிதப் பூ இன்னும் அழகா இருக்குமே?"

"என்னதான் காகிதப் பூ அழகா இருந்தாலும், அதுல மணம் இருக்காதே? மணமில்லாத பூ பூஜைக்கு உதவாது டீச்சர்."

"அப்படியா! என்னதான் நல்லா படிச்சு முதல் மதிப்பெண் வாங்கினாலும் அப்பா, அம்மாவுக்குக் கீழ்ப்படிஞ்சி, சொல்ற வேலையைச் செய்யாதவங்க, இந்தக் காகிதப் பூ மாதிரித்தான். அழகிருந்தும், மணம் வீசாத மலர்தான் அவங்க. இதை ஏன் சொல்றேன்னு புரியுதா முரளி...?" என்று சொல்லி நிறுத்தினார் டீச்சர்.

டீச்சர், தன்னை ஏன் வீட்டுக்கு அழைத்தார்கள் என்பதை மட்டுமல்ல, தன் தவறையும் உணர்ந்து கொண்டான் முரளி.

— கேலக்ஸி மா. சுரேஷ்



எங்கள் ஊரில் நடந்தது

குமரி முதல் கிழவி வரை!

ஒருநாள் எங்கள் ஆசிரியர் கரும் பலகையில் 'இந்தியா, குமரி முதல்....'என்று எழுதிவிட்டு மீதியை மாணவர்களிடம் கேட்டார்.




ரமேஷ் என்ற மாணவன் எழுந்து "இந்தியா, குமரி முதல் கிழவி வரை அனைவரையும் உள்ளடக்கி உள்ளது" என்றானே பார்க்கலாம்! வகுப்பே சிரிப்பொலியில் மூழ்கியது.

பூண்டி, பாசி. கோகுலன்

தம்பிக்குப் பிடித்த காலண்டர்

ஆங்கிலப் புத்தாண்டின்போது நான்



என் அம்மா என் தம்பி மூவரும் கடைத் தெருவிற்குச் சாமான்கள் வாங்கச் சென்றோம். அப்பொழுது புது வருட காலண்டர் வாங்கலாம் என்று எண்ணி, காலண்டர் கடைக்குப் போனோம். கடைக்காரர் காலண்டர் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்க, அதற்கு என் தம்பி, "விடுமுறை அதிகம் உள்ளதா இருக்கணும்"என்று கூற அங்கு இருந்தவர்கள் அனைவரும் சிரித்தனர்.

கார்மேஷன் நகர், எஸ். தட்சணாமூர்த்தி.

எப்படி வாங்கினாலும் கடிக்கும்...!

ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர்,



"இப்படி வாங்கினாலும் கடிக்கும். அப்படி வாங்கினாலும் கடிக்கும். அது எது...?" எனக் கேட்டார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் பதில் தெரியாமல் விழித்தோம்.

பிறகு ஆசிரியரே பதில் கூறினார்:

"குறைந்த விலையில் செருப்பு வாங்கினால் மட்டமான தோலாக இருக்கும். அதனால் காலைக் கடிக்கும். உயர்ந்த விலையில் செருப்பு வாங்கினாலோ, பணம் கையைக் கடிக்கும்..."

திருச்சி -14, இரா. திலீப்



எது வாங்கினாலும் இலவசம்!

நானும் எனது தம்பியும் கடைத் தெருவிற்குச் சென்றிருந்தோம். ஒரு கடையில் அறிவிப்புப் பலகையில் 'எங்கள் கடையில் நூறு ரூபாய்க்கு ஏதாவது வாங்கினால் ஒரு பேனா இலவசம்' என்று எழுதியிருந்தது. உடனே என் தம்பி என்னிடம் நூறு ரூபாய் வாங்கி, அந்தக் கடைக்காரரிடம் சில்லரை கேட்டு வாங்கினான். பிறகு "பேனா கொடுங்கள்" என்றான் கடைக்காரர் புரியாமல் விழிக்க, "நீங்கதானே நூறு ரூபாய்க்கு எதுவாங்கினாலும் பேனா இலவசம்னு போட்டிருக்கீங்க?" என்றான் தம்பி. கடைக்காரர் என் தம்பியின் புத்திசாலித்தனத்தை வியந்து உடனே உண்மையாகவே ஒரு பேனாவை அன்பளிப்பாகத் தந்து விட்டார்.

வந்தவசி, பா. ஜெயக்குமார்.




நல்லவேளை, எருமை பறக்கவில்லை!

எங்கள் தமிழ் ஆசிரியரும் கணக்கு ஆசிரியரும் நடந்து வந்து கொண்டிருந்த போது, மேலே பறந்த காகம் தமிழ் ஆசிரியர் மீது அசுத்தம் செய்து விட்டது. அதனைக் கண்ட கணக்கு ஆசிரியர் மிகவும் வருத்தப்பட்டார். "பரவாயில்லை, விடுங்க சார், எருமைக்கு பறக்கும் சக்தியை ஆண்டவன் கொடுக்கவில்லை என்பதை நினைத்து மகிழ்ச்சியடையலாம்" என்றார் தமிழாசிரியர். அதனைக் கேட்ட நாங்கள் ஆசிரியரின் நகைச்சுவை உணர்வை வியந்து சிரித்தோம்.

–அனந்தபுரம், ராஜேஷ்குமார்.


மனசு வைத்தால்

நான், என் அம்மா, அப்பா, தம்பி, தங்கை ஆகியோருடன் உட்கார்ந்து டி.வி பார்த்து கொண்டிருந்த பொழுது, அதில் ஒரு பெரிய பங்களா வந்தது. அதைப்



பார்த்த என் தம்பி, அப்பாவிடம், "நான் பெரியவனாக ஆனதும், சம்பாதித்து இதே மாதிரி பெரிய வீட்டைக் கட்டு வேன்"என்றான். தம்பிக்கு அப்பாவிடம் அதிகச் செல்லமாதலால், ''நீ மனது வைத்தால் கட்டி விடுவாய்''என்றார் அப்பா. உடனே என் தம்பி, ''மனசு வைத்தால் கட்ட.. முடியாதுப்பா. செங்கல் வச்சாத்தான் கட்ட முடியும்" என்றான். அவனது சாதுரிய பதிலைக் கேட்டு நாங்கள் எல்லோரும் சிரித்து விட்டோம்.

சோழன்மாளிகை, கு. கருணாநிதி



குடையின் மறுபக்கம்

அடைமழை பெய்த சமயத்தில் நண்பர் ஒருவர் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போது எங்கள் பேச்சு இப்போது புதிதாக வந்துள் மூன்றாக மடிக்கக் கூடிய மடக்குக் குடை பற்றித் திரும்பியது. "இந்த மாதிரிக் குடையைப் பிடித்துச் சென்றால் தலை நனையாமல் செல்வதே சிரமம். பெரிய காற்று அடித்தால் குடை மடிப்பு திரும்பிக் கொள்ளும்; சிறு தூரலுக்கும், வெயிலுக்கும் தான் லாயக்கு''என் றெல்லாம் பேசிக் கொண்டிருந்தபோது அங்கு வந்த எங்கள் இன்னொரு நண்பர் "ஆனால், ரோடில் எவராவது அறுவை கேஸ் வந்தால் அவர்கள் பார்க்காமல் இருக்க இந்தக் குடையைத் திருப்பி வைத் துக் கொள்ளலாம்''என்றார். இதுவும் சரிதானே!

திருவாரூர், மு. தனகோபாலன்



கடிதங்கள் கிடைத்தன!

சில மாதங்களுக்கு முன்பு எங்கள் ஊர் தபால் ஆபீஸில் தொடர்ந்து இரண்டு வாரங்களாக இன்லெண்ட் லெட்டருக்கு மிகவும் தட்டுபாடாக இருந்தது. எனது நண்பர் ஒருவர் வெளியூரில் உள்ள அவரது உறவினருக்கு "அவசரமாக ஒரு பத்து இன்லெண்ட் லெட்டர் அனுப்ப வும்" எனக் கடிதம் எழுதினார். உறவின ரும் அவசரம் என்றவுடன் அவசரமாகப் பத்து இன்லெண்ட் வாங்கி அட்ரஸ் எழுதி தபாலில் அனுப்பி விட்டார். நண்பருக்கு பத்து இன்லெண்ட் கடிதங்களும் தனித் தனியாகத் தபால் முத்திரையோடு வந்து சேர்ந்தன. நண்பர் அவசரமாகக் கடிதங் களைப் பிரிக்க எதிலுமே ஒன்றுமே எழுதி யிருக்க வில்லை. பிறகுதான், நண்பருக்கு எனக்கு எழுத பத்து இன்லெண்ட்டை வாங்கி அனுப்பவும் என்று தெளிவாக எழுதாதது நினைவுக்கு வந்தது. எப்படி இருக்கு இந்த வேடிக்கை!

களக்காடு, சு. குமார்.

இறந்த மன்னருக்கு பொம்மைப் படைகள்!

1974 ஆம் ஆண்டு. வடமேறகு சீனாவின் சியான் நகருக்கு அருகே, கிராம மக்கள் கிணறு தோண்டிக் கொண்டிருந் தார்கள். சில அடிகள் தோண்டியதும், நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை போய் விட் டது. வேறு ஏதேதோ பொருள்கள் கிடைக்க ஆரம்பித்தன. அவை எல்லாம் மண் பொம்மைகள். களிமண்ணால் செய் யப்பட்ட கலைநுணுக்கம் நிறைந்த பொருள்கள்!

அரசுக்குச் செய்தி போயிற்று. அகழ் வாராய்ச்சி நிபு ணர்களும், வர லாற்று ஆராய்ச்சி யாளர்களும் குழுமி னர். நவீன கருவி களின் துணையால் பூமிக்குக் கீழே புதையுண்டு கிடக்கும் பொருள் கள் என்னவென்று பார்க்கப்பட்ட போது எல்லோரும் திகைத்தனர். புதை பொருள் ஆராய்ச்சித் துறையில் 19-ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய கண்டு பிடிப்பு என்று உலகமே வியந்து கவனித் தது.

காரணம், இங்கு அகழ்ந்து எடுக்கப் பட்ட இடம் மிகப் பெரிய நிலவறை. இதன் நீளம் 210 மீட்டர். அகலம் 60 மீட் டர். இந்த நிலவரையில் ஆயிரக்கணக் கான சுட்ட சிவப்புக் களிமண் உருவங்கள் இருக்கின்றன. குதிரைகள், காலாட்படை கள், படைவீரர்கள், தளபதிகள் என்று ஒரு முழு படையே இதில் அடங்கியுள்ளது! இந்த உருவங்களின் உயரம் உயிருள்ள மனிதர்களின் உயரமே! கவசம், சேணம், ஈட்டி ஏந்தி எல்லோரும் போருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் தோற்றம்! அந்த அவசரம், பரபரப்பு, கம்பீரம் எல்லாம் நிறைந்த அழகுப் பெட்டகங்களாக சிலை கள் காட்சியளிக்கின்றன!

இந்த சேனை, சீனப் பேரரசர் குவீன் ஷிஹுவாங்கின் படையின் சிறப்பையும் வலிமையையும், நேர்த்தியையும் கதைக ளாகக் கூறுகின்றன. படை வீரர்களின் உச் சிக் கொண்டை, கொம்பு தாடி, விரல்



மோதிரங்கள் எல்லாம் அழகு கொஞ்சும் கோலத்தில். மன்னர் குவின்ஷிஹுவின் காலத்தில், கலைகள் எவ்வளவு சிறப்புற்று இருந்தன என்பதற்கு இந்தச் சேனை வீரர்களின் அணிவகுப்பு ஓர் எடுத்துக் காட்டு! இந்தச் சேனை அணிவகுப்பில் கம்பீரமான தேர் இழுக்கும் குதிரைகள் கூட உண்டு.



இந்தக் களிமண் சேனைப் படையின் வரலாறு என்ன? சீன மன்னர்கள் மரணமடைந்ததும், அவர்களது ஈமச் சடங்குகளின் போது, இப்படிப்பட்ட களிமண் பொம்மை சேனையோடு புதைப்பார்கள். இந்தப் படையினர் உயிர் பெற்று மேலுலகில், இறந்த மன்னர்களுக்குப் பணியாற்றுவார்கள் என்பது அக்கால நம்பிக்கை. இதே போல், இறந்த மன்னர்கள் விரும்பும் போது மீண்டும் உயிர் பெற்று வருவார்கள். அப்பொழுது இந்த களிமண் சேனைக்கு அவர்கள் தங்கள் சக்தியால் உயிர் தந்து எழுப்பிப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்பதும் அவர்கள் நம்பிக்கை. இதன்படி சீனமன்னர் குவின்ஷிஹுவாங்குக்கும் இந்தக் களிமண் பொம்மைப் படை செய்யப்பட்டது. இந்த மன்னரின் காலம் கி.மு. 259-210. மன்னர் காலமாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்த களிமண் பொம்மைப் படையைச் செய்யத் தொடங்கி விட்டார்களாம். கலைச் சிறப்புடன் இவை செய்யப்பட்டன. அளவுகள் கூட உயிருள்ள மனிதர், குதிரைகளின் அளவுதான். உயிரில்லாதது மட்டுமே குறை! அதை அவர்களால் தர முடியவில்லை. அவ்வளவுதான்! மன்னர் இறந்ததும் உரிய மரியாதைகளுடன் மிகப் பெரிய நிலவறைக்குள் இந்த பொம்மைப் படை புதைக்கப்பட்டது. இத்தனை பெரிய நிலவறை மக்களின் பார்வையில் இருந்து எப்படி இத்தனை ஆண்டுகள் தப்பி இருந்தது என்பது மிகப் பெரிய அதிசயம். பல ஆண்டுகளுக்குப் பின் நிலவறையின் கூரை தீ விபத்தால் சரிந்த போது பல சிலைகள் சிதைந்து போய் விட்டன. ஆனாலும் கூட 1974-ஆம் ஆண்டில் தான் இவை தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டு, மிகுந்த கவனத்துடன் அகழப்பட்டு பெருஞ்செலவு செய்யப்பட்டு தனியான ஓர் அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளன. சீனா என்றதும் அதன் புகழ் பெற்ற பெருஞ்சுவர்தான் நினைப்பு வரும். இனி இந்த குவின்ஷிஹுவாங்கின் சிவப்புக் களிமண் படையும் சேர்ந்து கொள்ளும். 19-ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய அகழ்வாராய்ச்சி அதிசயம் இது என்பது சரிதானே?

தகவல் புகைப்படம் : நன்றி :
யுனெஸ்கோ (தமிழ்) கூரியர்

கேளுங்கள் சொல்லப்படும்



● பொங்கல் என்பது தமிழ்நாட்டுப் பல காரமா?

- சுப. இராமலிங்கம், கோட்டையூர்.

எந்தப் பொங்கலைக் கேட்கிறீர்கள்? சர்க்கரைப் பொங்கலையா, இல்லை வெண் பொங்கலையா? சர்க்கரைப் பொங்கல் அக்கார வடிசில் என்றும், வெண் பொங்கல் கும்மாயம் அல்லது பயிற்றுப் பொங்கல் என்றும் 10 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த இரண்டு பொங்கலையும் செய்ய என்ன பொருள்கள் தேவை, அவை எந்த விகிதத்தில் சேர்க்கப்பட வேண்டும் எப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதையும் வரகுண பாண்டியனின் (10 ஆம் நூற்றாண்டு) பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.



● காந்தியடிகளுக்கு முன்பே தக்ளியும் ராட்டையும் இருந்தனவா? இல்லை, இவைகளை அறிமுகப்படுத்தியதே காந்தியடிகள்தானா?

- மு. முத்துக்கனி, சிவகங்கை

பண்டைக் காலத்தில் இருந்தே தமிழ்நாடு உட்பட இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் நெசவுத் தொழில் சிறந்தோங்கி வந்திருக்கிறது. பருத்தி விளைச்சலும், பருத்தியையும் கொட்டையையும் பிரிக்கும் வில் அடிக்கும் முறைகளையும், நூல் நூற்கும் வழிகளையும், தறியால் நெய்யும் முறைகளையும் மக்கள் நன்கு அறிந்திருந்தனர். நெசவுத் தொழிலுக்கு நூல் நூற்கும் முறையும், நூல் சுற்றும் முறையும், தறியும் இன்றியமையாதவை. எனவே, தக்ளி, ராட்டை, தறி ஆகிய மூன்றும் அந்தந்த வட்டார மொழிகளில் ஏதாவது ஒரு பெயரில் கண்டிப்பாகப் பழக்கத்தில் இருந்திருக்க வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை இரும்புத் தக்ளி, அரிக்கமேடு நாகரீக காலத்தில் இருந்தே உள்ளது. இராட்டையைப் பற்றிய பல குறிப்புகள் புறநானூற்றில் உள்ளன. ஆங்கில ஆட்சியில் நமது நெசவுத் தொழில் நலிந்ததால், அதற்குப் புத்துயிர்தர காந்தியார் தக்ளியையும் இராட்டையையும் மீண்டும் மக்களிடையே பரப்ப ஒரு பேரியக்கமே நடத்தினார். தக்ளியும் இராட்டையும் காந்தியாருக்கு முன்பே ஏற்கெனவே இருந்தவைதான்.

சைனா என்ற பெயர் எப்படி வந்தது?

● *இந்திய எண் கணித வழி காட்டி நூலான லீலாவதியை, பாஸ்கராச்சாரியார்தான் எழுதினார் என்பதற்கு ஆதாரம் ஏதாவது உள்ளதா?*

- சைமன். பாக்கியநாதன், பேட்டுப்பாளையம்



இப்படிப் பின்னாளில் யாராவது கேட்பார்கள் என்று தெரிந்து தானோ என்னவோ, அக்பர் சக்ரவர்த்தி ஓர் அருமையான ஏற்பாட்டைச் செய்தார். தனது அவையில் இருந்த கணிதத் தில் ஆர்வம் கொண்ட ஃபைஸி என்ற அறிஞரைக் கொண்டு 'லீலாவதியை' பாரசீக மொழியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்தார் (கி.பி. 1587). இந்த அறிஞர் முகமது ஃபைஸி, லீலாவதி நூலை மட்டும் மொழி பெயர்த்ததுடன் நின்றுவிடாமல், பாஸ்கராசார்யாவின் வரலாற்றுக் குறிப்புகளையும் எழுதி வைத்துள்ளார். இதன்படி பாஸ்கராசார்யா பிறந்த ஊர் பிஜ்ஜபீடு என்ற கிராமம். இது ஸஹ்ய மலைத் தொடரில் உள்ளது. ஆண்டு 1114. தந்தையார் மகேஸ்வரர் என்ற கணித மேதை. தமது 36வது வயதில் பாஸ்கரா சித்தாந்த சிரோமணியை எழுதி முடித்தார்.



இது நான்கு பிரிவு களைக் கொண் டது. இதில் ஒரு பிரிவுதான் இன்று உலகே வியக்கும் லீலாவதி என்ற எண் கணிதம். மற்ற மூன்றும் பீஜ கணிதம், கோளாத்யாயம், கிரக கணிதமாகும். பாஸ்கரா இந்தியரின் கணித அறிவுக்குச் சான்று பகரும் ஒரு வரலாற்றுப் பேரறிஞர். இலக்கிய அல்லது புராண பாத்திரம் அல்ல.

● *சைனாவுக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது?* *- மா. அழகர்சாமி, பொன்மலை.*

பரதன் ஆண்டதால் நமது நாட்டுக்கு பாரதம் என்று பெயர் ஏற்பட்டதைப் போல், சின் **(Chin)** மரபினர் ஆண்டதால் சைனா என்று பெயர் பெற்றது.

● *விண்வெளி ராக்கெட்டில் லைகா நாய் அனுப்பப்பட்டு புகழடைந்ததைப் போல் வேறு நாய் ஏதாவது புகழ் பெற்றுள்ளதா?*

- பா. ஜாபர் அலி, தரங்கை.



சேரநம்பி



முதன் முதலில் பாராசூட்டில் அனுப்பப்பட்டதும்கூட ஒரு நாய்தான். அதன் பெயர் தெரியவில்லை. இதைப் பறக்க விட்டவர் ஜெ. பி. பிளான்ஷார்டு என்ற பிரெஞ்சுக்காரர். ஆண்டு 1785.

● *எரியும் கட்டைமேல் தண்ணீரை விட்டதும் அணைவது ஏன்? அறிவியல் விளக்கம் தேவை!*

- பா. சின்னத்தம்பி, வேலூர்.

எரிகின்ற கட்டை காற்றில் உள்ள வெப்பத்தை ஈர்த்துக் கொள்வதால் அதிகமாக எரிகிறது. நீரை ஊற்றியதும், வெப்பமும் நீரும் இணைந்து நீராவி மேலே எழும்புகிறது. இந்த நீராவி, காற்றில் உள்ள வெப்பத்தை ஏற்க தீ, மேலும் பரவ வழியின்றி அணைகிறது.

● *கம்பளி ஸ்வெட்டர் போட்டுக் கொண்டால் குளிர் அதிகம் தெரிவதில்லையே! ஏன்?*

- க. வெற்றிவேலன், சக்கரவாண்டி.

கம்பளி வெப்பத்தை மெதுவாகத்தான் வாங்கும், கடத்தும். அதனால், ஸ்வெட்டர் போட்டுக் கொண்டதும் வெளிக் குளிர் ஸ்வெட்டருக்குள் புகுவதில்லை. அதேபோல், உடம்பில் உள்ள வெப்பத்தையும் ஸ்வெட்டர் வெளிவிடுவதில்லை. எனவே உடம்பு கதகதப்பானது போல் உணர்கிறோம்.

● *தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் எங்கு மறைந்தார்? அவர் வசித்த சென்னை திருவல்லிக்கேணியிலா, இல்லை உத்தமதானபுரத்திலா?*

- சி. கல்வராயன், வரகுப்பட்டு.

தமிழ்த் தாத்தா சாமிநாதய்யர் அவர்கள் மறைந்தது உங்கள் ஊருக்கு அருகே உள்ள திருக்கழுக்குன்றத்தில்தான்.

● *அம்மானைப் பாடல்கள் இந்துக்களுக்கு மட்டுமே உரித்தானதுதானே?*

- இ. இன்னாசித்தம்பி, கன்னாகம்.

இல்லை. கிறித்துவ மதத்தின் பெருமைகள், கிறித்துவின் அருமை பெருமைகளைக் கூறும் தமிழ் அம்மானைகளும் உள்ளன. வீரமாமுனிவரே கூட ஓர் அம்மானையை இயற்றியுள்ளார். இதன் பெயர் அர்ச். கித்தேரியம்மாள் அம்மானை. முதலில் ஓலைச் சுவடியாக இருந்த இதை 1849 ஆம் ஆண்டில், சென்னை ஞானோதயா என்ற பதிப்பகம் அச்சிட்டது.

● *மின்னல் வெளிப்படுத்தும் மின் ஆற்றல் அளவிடப்பட்டுள்ளதா?*

- தா. சிவராமன், கிரனூர்.

மின்னல் தோன்றும்போது அது வெளிப்படுத்தும் மின் சக்தியின் அளவு மின்னலுக்கு மின்னல் மாறுபட்டது. இருப்பினும் அதிக அளவு 5 கோடி வோல்ட் மின் அழுத்தம். மின்னோட்டத்தின் அளவு 2 லட்சம் ஆம்பியர்கள்.



● *உலகக் கால்பந்து கோப்பைப் போட்டிகள், முதலில் எங்கு நடத்தப்பட்டன?*

- மு. சாமுவேல், பானை.

உருகுவே நாட்டில்தான் முதல் உலகக் கால்பந்துக் கோப்பைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

● *பெங்களூரில் உள்ள இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயன்ஸை சர் சி.வி. இராமன் தானே ஆரம்பித்தார்?*

- மு. தேவப்பிரியா, பெரம்பலூர்.

இல்லை. இந்த **I.S.S.**ஐத் தொடங்கிய பெருமைக்கு உரியவர் ஜே. என். டாட்டா. இதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருந்தவர் சர் சி.வி. இராமன்.

● ***Hunch Back Of Notre Dame** நாவலைப் படித்தபோது என்னையே மறந்துவிட்டேன். இதில் கூனன் இழுக்கும் மணி, இன்னமும்*



இருக்கிறதா?

- து. பொன்னுசாமி, பழவேற்காடு.

இந்த உலகப் புகழ்பெற்ற **Notre Dame** தேவாலயத்தில் **(Church)** உள்ள மணி புதுப்பிக்கப் பட்டு இன்னமும் அதே இடத்தில்தான் உள்ளது. ஆனால், கூனனைப் போல் யாரும் இழுக்க அவசியம் இன்றி மின்சாரத்தால் இந்தப் பழமையான மணி இயக்கப்படுகிறது.

● *விளையாட்டு வீரர்கள் போதைப் பொருளைப் பயன்படுத்தி வெற்றி பெற்றதைக் கண்டுபிடித்து விலக்கப்பட்ட செய்திகளில் 'Dutch Courage' என்று ஒரு சொல்லை அடிக்கடி படிக்கிறேன். இதற்கு என்ன பொருள்?*

- வி. சித்ததாதன், திருவண்ணாமலை.

இந்த 'Dutch Courage' என்பதற்கு மயக்க மருந்தால் ஏற்படும் துணிவு/வீரம் என்பது பொருள்.

● *வானில் பறந்து காட்டி உலகப் பெருமை பெற்ற ரைட் சகோதரர்களின் முதல் வான் பயணம் எத்தனை மணி நேரம் நடைபெற்றது?*

- மா. ஜெயசீலன், புதுக்கோட்டை.

எத்தனை மணிநேரமா? 1903 ஆம் ஆண்டு, டிசம்பர் 17 ஆம் தேதி நடைபெற்ற இந்த வான் பயணத்தின் நேரம் பன்னிரண்டே செகண்டுகள்தான்! இருப்பினும் அது சாதனைதானே?

● *டச்சுக் காலனியாகிய 'New Amsterdam' என்பதன் இன்றைய பெயர் என்ன?*

- மா. தேம்பவாணி, காரணி.

இன்றைய நியூயார்க் நகரத்தின் பழைய டச்சுக் காலனிப் பெயர்தான் நியூ ஆம்ஸ்டர்டாம் என்பது.

வையாபுரி என்பது தமிழ்ப் பெயர்தானா? இது எந்தத் தெய்வத்தின் பெயர்?

- கா. வையாபுரி, சாத்தூர்.

வையம் என்பது தூய தமிழ். இதை ஒட்டி எழுந்த பெயரே வையாவி. இது



பழனியில் உள்ள முருகனுக்கு உரிய சிறப்புப் பெயர்களில் ஒன்று. கடையேழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனுக்கு உரிய சிறப்புப் பெயர்களுள் வையாவி என்பதும் ஒன்று. வையாவி புரி என்பதே காலப் போக்கில் வையாபுரி ஆகியிருக்கக் கூடும்.

சம்ஸ்கிருதத்தில் "புர்" என்பது ஊரைக் குறிக்கும் சொல். உதாரணம்: நாக்பூர், ஜோத்பூர். இது தமிழாக்கப்படும்போது, நாகபுரியாகவும், ஜோத்புரியாகவும் ஆன மாதிரி, இந்த புரி ஒட்டிக் கொண்டது. உன் பெயர் தமிழ்ப் பெயரே என்று பெருமை கொள்ளலாம் வையாபுரி!



● *பிரபல ஆங்கில நாவலாசிரியர் சிட்னி ஷெல்டனின் நாவல் இந்தியில் படமாக்கப் பட்டிருக்கிறதாமே? என்ன நாவல் அது?*

- கு. தாமோதரன், காளஹஸ்தி.

சிட்னி ஷெல்டனின் **The Rage Of The Angles** என்ற நாவல் கன்வர்லால் **(Kanwarlal)** என்ற பெயரில் இந்திப் படமாக வந்திருக்கிறது. இதில் நடித்தவர் ஜிதேந்திரா.

அறிவும் உடலும் கூட...

கோபி நான்காம் வகுப்பில் படிக்கும் மாணவன். சுத்த சோம்பேறி. எந்த வேலையையும் சுறுசுறுப்பாகச் செய்ய மாட்டான். படிப்பிலும் சுமார்தான்.

கோபி இப்படி இருப்பது குறித்து அவன் அம்மாவிற்கு மிகவும் கவலை! இப்படியே இருந்தால் அவன் எதிர்காலம் பாழாகிவிடுமே என்று வருந்துவாள்.

அம்மாவும் கோபியின் சோம்பேறித்தனத்தைப் போக்க எவ்வளவோ முயன்று பார்த்தாள். பலன்தான் இல்லை.

கோபிக்கு எதைப் பற்றியும் கவலை கிடையாது.

அன்று பள்ளிக்கு விடுமுறை.

சாப்பிட்டுவிட்டு, கும்பகர்ணன் மாதிரித் தூங்கிவிட்டு மாலையில் தான் எழுந்தான் கோபி.

அம்மா தோட்டத்தில் வேலையாய் இருந்தாள். அங்கிருந்த மரத்தின் கிளை ஒன்று தலையை இடிப்பது போன்று இருந்தது. அதனால் அதை வெட்டிவிடுவது என்று முடிவெடுத்தாள். அதற்கு அரிவாள் தேவைப்பட்டது.

"கோபி! அரிவாளை எடுத்துக்கிட்டு வா!" என்று குரல் கொடுத்தாள் அம்மா.


சிறிதுநேரம் கழித்து, அரிவாளை எடுத்துக் கொண்டு வந்தான் கோபி.

அதை வாங்கிய அம்மா,

"என்னடா! புது அரிவாளை எடுத்திட்டு வந்தா என்ன? இது துருப்பிடிச்ச அரிவாள்டா!" என்றாள்.

கோபி பேசாமல் நின்றான்.


"கோபி! இந்த அரிவாளை உபயோகப்படுத்தாம, ரொம்ப நாளா தோட்டத்திலேயே விட்டுட்டோம். மழையிலயும், வெயில்லேயும் கிடந்து ஒரேயடியாத் துருப்பிடிச்சுப் போச்சு! எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு பொருளைப் பயன்படுத்தறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதன் திறன் அதிகமாகும்! மனிதனின் அறிவும் உடலும் கூட அப்படித்தான் கோபி. இப்ப சோம்பேறித்தனமா இருந்தா, காலப்போக்கில் நீயும் இந்தத் துருப்பிடிச்ச அரிவாள் மாதிரி உபயோகமில்லாம ஆயிடுவே. நீ இப்பப் படிக்காம அறிவைத் துருப்பிடிக்க விட்டே, பிற்காலத்துல மத்தவங்க உன்னை 'முட்டாள்'னு சொல்றப்ப ரொம்ப வருத்தப்படுவே!" என்று தனது கடைசி அஸ்திரத்தை வீசினாள் அம்மா.



"அம்மா! என்னை மன்னிச்சிடுங்க! இனி சுறுசுறுப்பா இருந்து நல்லாப் படிப்பேன்!" என்று அரிவாளோடு தன் அறிவையும் பட்டை தீட்டத் தொடங்கினான் கோபி.

— கவிதா வீராசுவாமி

சுட்டிக் கதை!



கண்ணாடி பீரோ மர்மம்

கனகா டீச்சருக்கு மாணவ மாணவியர் இடையே தனியான செல்வாக்கு உண்டு. அதற்குக் காரணமும் இருந்தது.

கணக்குப் புரியவில்லை என்று யார், எத்தனை முறை கேட்டாலும் கனகா டீச்சர் அலுத்துக் கொள்ளவே மாட்டார். திரும்பத் திரும்ப அதைப் பல விதங்களில் விளக்கி, புரிந்து கொள்ளும் வரை விடமாட்டார். அப்படியும் புரியாமல் தவிக்கும் ஒரு சிலருக்கு, பள்ளி இடைவேளையின்போதோ, இல்லை பள்ளி முடிந்த பிறகோ, தனியாக வகுப்பு எடுத்து விளக்குவார்.

வகுப்பில் கணக்கைச் சொல்லிக் கொடுக்கும்போதே, "செம்மறி ஆடு மாதிரித் தலையாட்டாதீர்கள். புரியவில்லை என்றால் வாயை விட்டுக் கேளுங்கள். எத்தனை தடவை கேட்டாலும் விளக்கிப் புரிய வைக்கக் காத்திருக்கிறேன். இதற்காகத்தான் எனக்குச் சம்பளம் தருகிறார்கள்" என்று கூறுவார்.

கனகா டீச்சர் இப்படிப் படாதபாடு பட்டதற்குப் பலனும் இருந்தது. ஆறு, ஏழு, எட்டாவது வகுப்புகளில் ஒருவர் கூட கணக்கில் ஐம்பது விழுக்காடுகளுக்குக் குறையுவில்லை! மாணவ மாணவியரிடையே கனகா டீச்சருக்குத் தனித்த செல்வாக்கும், மரியாதையும், அன்பும் இருந்ததில் அதிசயமே இல்லை.

இத்தனை பெருமை வாய்ந்த கனகா டீச்சர் ஏதோ கவலைக்கு ஆளாகியிருக்கிறார் என்று தெரிந்தால் மாணவமணிகள் விடுவார்களா?


"டீச்சர், இன்றைக்கு வகுப்பு எடுக்க வேண்டாம். நீங்கள் ஆசிரியர் ஓய்வு அறைக்குப் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள். தலைவலி மாத்திரையும், காப்பியும் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்றாள் உமா. அவள்தான் வகுப்புத் தலைவி.

"எனக்கு எதுவுமே இல்லை. தலைவலி இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் இப்போது இல்லை. கணக்கைக் கவனியுங்கள்" என்று சாக்பீசோடு போர்டுக்கு நகர்ந்தார் டீச்சர்.

கணக்குப் புத்தகத்தைக் கூடப் பிரிக்காமல், கணக்கை நினைவுபடுத்தி, போர்டில் கணக்கைப் போட்டு விளக்கும் திறமை மிக்க கனகா டீச்சர், அதிசயமாக இரண்டு இடங்களில் கூட்டலில் தவறு செய்த புதுமையை மாணவமணிகளால் காண முடிந்தது.

"டீச்சர், உங்களுக்கு உடம்பு இன்னும் சரியில்லை என்று நினைக்கிறேன். உடனடியாக உங்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது.

சின்ன பாபு



போய் ஓய்வெடுங்கள்" என்று எழுந்து வந்தான் பீட்டர்.

கனகா டீச்சரின் நெற்றியில் வியர்வை துளிர்த்திருந்தது. கீதா எழுந்து டீச்சரிடம் போனாள்.

"டீச்சர், என்ன சொன்னாலும் நீங்கள் ஓய்வெடுக்கப் போக மாட்டீர்கள் எனபது எங்களுக்கு நன்கு தெரியும். நீங்கள் இப்படியே நாற்காலியில் உட்கார்ந்து பாருங்கள். உங்களுக்குப் பதிலாக நானே இந்தக் கணக்கைப் போர்டில் போட்டு விளக்குகிறேன். தவறு இருந்தால் மட்டும் குறிப்பிடுங்கள்'' என்று டீச்சரின் கையில் இருந்து சாக்பீசை வாங்கிக் கொண்டாள் கீதா.

நாற்காலியை இழுத்து ஓரமாகப் போட்ட சாதிக் அலி, "உட்காருங்க டீச்சர்" என்றான்.

வேறு வழி இல்லாது கனகா டீச்சர் நாற்காலியில் உட்கார்ந்து கவனிக்க, கீதா கணக்கை போர்டில் செய்து கொண்டே போனாள். ஒவ்வொரு நிலையிலும், நிறுத்திய கீதா, "ஏதாவது சந்தேகம் இருக்கா? கேளுங்க. எத்தனை முறை கேட்டாலும் விளங்க வைக்கத் தயாரா இருக்கேன். செம்மறி ஆட்டுக் கூட்டம் மாதிரித் தலையை ஆட்டாதீங்க" என்று கேட்டதும் கனகா டீச்சர் உட்பட எல்லோரும் சிரித்து மகிழ்ந்தனர். கணக்கு முடிந்தது. "வெல்டன் கீதா" என்று வாய் விட்டுப் பாராட்டி விட்டு டீச்சர் எழுந்து கொண்டார். மாணவமணிகளின் தேர்ச்சியையும், அன்பையும்விட ஆசிரியர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருவது வேறு என்ன இருக்க முடியும்?

சாட் பீட் கீத் மூவருக்கும் பொதுத் தொண்டில் தனி ஆர்வம் இருந்தது. தினமும் மாலையில் பள்ளி முடிந்ததும் மூவரும் அருகில் உள்ள அரசு பொது மருத்துவமனைக்குப் போவார்கள். வெளியூர்களில் இருந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களுக்கும், மற்றவர்களுக்கும் எத்தனையோ தேவைகள் இருந்தன. உறவினர்களுக்கு டெலிபோன் பண்ணுவது, படிக்கப் புத்தகம் வாங்கி வருவது, கடிதம் எழுதுவது போல் பல வேலைகளைச் செய்ய முடியாமல் திண்டாடுபவர்கள் பலர் அங்கே இருந்தனர். அவர்களைச் சந்தித்துப் பேசி, அவர்களுக்குத் தேவையானவற்றை மூவரும் செய்து வந்தார்கள்.

அன்றும் அப்படித்தான் மூவரும் மருத்துவமனைக்குப் போய்விட்டுத் திரும்பிவந்து கொண்டிருந்தார்கள். வழியில் ஒரு பஸ் நிறுத்தம். அங்கே நின்று கொண்டிருந்தது... சந்தேகமே இல்லை, கனகா டீச்சரேதான்! மூவரும் அருகே சென்றனர்.

"பீட்டர், நீ கூறியது உண்மைதான். எனக்கு மனமே சரியில்லை. அதனால்



ஏற்பட்ட தலைவலியில்தான் உங்கள் எல்லோரையும் துன்பப்படுத்திவிட்டேன்" என்று சிரித்தார் கனகா டீச்சர்.

"டீச்சர், மாணவர் நலனில் அளவில்லாத அக்கறை கொண்ட உங்களைப் போன்றவர்கள், எங்களுக்காகவாவது உடல் நலத்தைக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும்,'' என்றாள் இதா.

"உங்களைப் போன்ற மாணிக்கங்களை, மாணவர்களாகப் பெற்ற எனக்கு என்ன உடல்நலக் குறைவு ஏற்படப் போகிறது இதா?" என்று சிரித்தார் டீச்சர்.

"டீச்சர், நாங்கள் உங்களைக் கட்டாயப் படுத்தவில்லை. எங்களிடம் கூறக் கூடியதாக இருந்து, எங்களிடம் உங்க



ளுக்கு நம்பிக்கையும் இருக்குமானால் கூறுங்கள்?" என்றான் பீட்டர்.

"ஆமாம் டீச்சர். நீங்கள் இந்த அளவுக்கு மனஅமைதி இழக்க என்ன காரணம் என்பதைக் கூறினால் எங்களால் இயன்றதைச் செய்ய முயல்வோம்" என்றான் சாதிக்பாட்சா.

நால்வரும் அருகே இருந்த பூங்காவில் சென்று அமர்ந்து கொண்டனர். மூவரும் ஆவலாகக் காத்திருக்க, கனகா டீச்சர் தொடங்கினார்.

"ஆசிரியர் ஓய்வறையில், எல்லா ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக மர பீரோ இருப்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதற்கு ஒரு பூட்டு சாவி கூட எல்லோரும் தனித்தனியாக வைத்திருக்கிறோம். தேர்வில் நீங்கள் எழுதும் விடைத்தாள்களை எல்லாம் திருத்த, நான் வீட்டுக்குக் கொண்டு போவதில்லை. பீரோவுக்குள் வைத்துப் பூட்டிவிடுவேன். இரண்டொரு நாட்களில் அங்கேயே வைத்துக் கொண்டு திருத்திவிடுவேன். போன மாதம் நடைபெற்ற தேர்வில் கணக்கு விடைத்தாள்களை வழக்கப்படி வைத்துப் பூட்டினேன். அடுத்த நாள் நான் வந்து பூட்டைத் திறக்க முயன்றபோது பூட்டு திறக்கவில்லை. சாவி மக்கர் பண்ணியது. மிகவும் கஷ்டப்பட்டுத் திறந்தேன். யாரோ மறு சாவி போட்டுத் திறக்க முயன்றிருக்கிறார்களோ என்று சந்தேகம் தோன்றியது. ஆனால், பீரோவில் இருந்த விடைத்தாள்கள் எல்லாம் சரியாக இருந்தன. ஸ்கேல், சாக்பீஸ், டஸ்டர் கட்டை கூட எல்லாம் சரியாக இருந்தன. இருந்தாலும் நான் வேறு பூட்டு வாங்கிப் பூட்டினேன்."

"தலைமையாசிரியரிடம் கூறினீர்களா டீச்சர்?" என்றாள் கீதா.

"இல்லை. எதுவுமே காணாமல் போகவில்லை. பிறகு எதற்காக அவரிடம் கூறுவது என்று பேசாமல் விட்டுவிட்டேன். நேற்றுத்தானே கணக்குத் தேர்வு? இப்போது மறுபடியும் அதே மாதிரி ஆகியிருக்கு. ஆனால், எதுவுமே திருட்டுப் போகவில்லை. எல்லாம் சரியாக இருந்தன."

"ஒரே மர்மமாக இருக்கே?"

"போன முறையும், கணக்குத் தேர்வுக்கு மறுநாள்தான் இப்படி ஆனது இல்லையா?"

"ஆமாம் கீதா. ஆனால் ஒரு விடைத்தாள் கூடத் திருட்டுப் போகலே. எந்தப் பொருளுமே காணாமப் போகலே!"

மறுநாள் பள்ளி தொடங்க இரண்டு மணி முன்பே சாத் பீட் கீத் பள்ளியில் இருந்தனர். கனகா டீச்சர் முன்பே வந்திருந்தார். நால்வரும் ஆசிரியர் ஓய்வறையில்.

"கணக்குத் தேர்வுக்கும் இதற்கும் ஏதோ புரியாத ஒரு தொடர்பு இருக்க வேண்டும்," என்றான் பீட்டர்.

சாதிக், பீரோவின் பூட்டை வாங்கிப் பார்த்தான். அது புத்தம் புதிய நல்ல டிரேட்மார்க் பூட்டு!

"போன மாதம்தானே வாங்கினேன்?" என்றார் டீச்சர்.

கீதா பூட்டை வாங்கிக் குலுக்கிப் பார்த்தாள். உள்ளே இலேசாக ஏதோ ஆடியது. ஆட்டி ஆட்டிக் கவிழ்த்தாள். சாவியின் ஓட்டை வழியாக ஏதோ விழுந்தது. மெல்லிய கம்பி போன்ற சின்ன இரும்புத் துண்டு அது.

பீட்டரும், சாதிக்கும் அதை உள்ளங்கையில் வைத்து வியப்புடன் பார்த்தனர்.

"டீச்சர், பீரோவின் பழைய பூட்டு இருக்கா?"

"இருக்கே. அதைக் கூட இங்கே வைச்சுட்டுத்தான் புதுசைப் பூட்டினேன்" என்று பழைய பூட்டை பீரோவில் இருந்து எடுத்துக் கொடுத்தார் டீச்சர்.

கீதா, அதை வாங்கி அசைத்துப் பார்த்தாள். உள்ளே என்னவோ மெல்லியதாக

"நீ 'மிருதங்கம்' வாசிப்பியா?"

"ஓ! தமிழிலே எழுதினா வாசிப்பேனே கரெக்டா!"

!?!?!/!?


- விபு



ஆடியது. ஆட்டி ஆட்டிக் கவிழ்த்தாள் உள்ளங்கையில். சாவி ஓட்டை வழியாக ஒரு பொருள் விழுந்தது. ஆமாம். அதுவும், முந்தியதைப் போல் மெல்லிய ஓர் இரும்புத் துண்டே!

''இதை வைத்து என்ன ஆராய்ச்சி பண்ணுகிறீர்கள்?'' என்று கேட்டார் டீச்சர்.

''டீச்சர், இவை இரண்டும் சாதாரண இரும்புத் துண்டுகள் இல்லை. தையற்காரர்கள் பயன்படுத்தும் கூர் முனையில் காது வைத்த ஊசிகளின் உடைந்த துண்டுகள்'' என்றாள் கீதா.



''நமது வகுப்பில் சங்கருடைய அப்பாதான் பெரிய தையற்கடை வைத்திருக்கிறார்'' என்றான் பீட்டர்.

''எந்த சங்கர்! கணக்கில் சென்டம் வாங்குவானே, அவனா?'' என்று கேட்டார் டீச்சர்.

''அவனேதான். ஆனால், காலாண்டுத் தேர்வு வரை அவன் கணக்கில் பெயில் மார்க்தான் வாங்கிக்கிட்டிருந்தான். இப்பத் தான் திடீரென்று இரண்டு மாதத் தேர்விலும் சென்டம் வாங்குகிறான்'' என்றான் சாதிக்.

''டீச்சர், இப்ப எதையுமே கண்டு கொண்ட மாதிரிக் காட்ட வேண்டாம். அடுத்த மாதத் தேர்வில் சங்கருடைய விடைத்தாளை மட்டும் ஜெராக்ஸ் பண்ணி வைத்துவிடுங்கள். நடப்பதை ஒளிந்திருந்து பார்ப்போம்.''

அடுத்த மாதம். கணக்குத் தேர்வு முடிந்தது. கனகா டீச்சர் தனது வழக்கப்படி விடைத்தாள்களைக் கட்டி பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டுக் கிளம்பினார். இரவு மணி எட்டு. சுவர் ஏறிக் குதித்த சங்கர், தையல் ஊசியைப் போட்டு பீரோவின் பூட்டை நெம்பினான். பூட்டு திறந்து கொண்டது. ஊசியின் முனை வழக்கப்படி பூட்டுக்குள் சிக்கி உடைந்தது. உடைந்த முனை உள்ளேயே சிக்கிக் கொண்டது.

விடைத்தாள் கட்டில் இருந்து தனது விடைத்தாளை மட்டும் உருவி எடுத்த சங்கர், சுவர் ஏறிக் குதித்து வெளியே போனான்.

''எட்டுப் பக்க விடைத்தாள் புக்கில், இவன் நான்கு பக்கங்கள்தான் எழுதியிருக்கிறான்,'' என்று கிசுகிசுத்தார் டீச்சர்.

''நான் நினைப்பது சரியாக இருந்தால், காலியாக உள்ள மீதி நான்கு பக்கங்களில் இவன், தேர்வின் போது போடத் தவறிய கணக்குகளைப் போட்டு திரும்பக் கொண்டு வந்து வைத்து சென்டம் வாங்கப் போகிறான்'' என்றான் சாதிக். அதுவே நடந்தது.

இரண்டு மணி நேரத்தில் சங்கர் திரும்பி வந்தான். கணக்குப் போட்ட விடைத்தாளை அவன் வைக்கப் போன போது பிடித்துவிட்டனர்.

''சாட் பீட் கீத்... நீங்கள் உண்மையாகவே கிரேட்தான்'' என்றார் டீச்சர்.

பாபு டேப்ரெக்கார்டரை இயக்கி, ஜன்னல் விளிம்பில் வைத்து விட்டு மறைந்து கொண்டான்.

"ட்விட்...ட்விட்...ட்விட்..."

பறவையின் தாளந்தப்பாத குரலுக்கு, தாளந்தப்பாத பதில் குரல் கேட்டது.

"ட்ட்ட்விட்...ட்ட்விட்..."

பாபு ஒளிந்தபடி பைனாகுலரை வைத்துப் பார்த்தான்.

தோட்டத்தில், மாடி அறையை ஒட்டியிருந்த ஜன்னலுக்கு

தையற் சிட்டுக்கு நீண்ட வால் உண்டா?

நேர் எதிரில், வானை முட்டுவது போல் ஓர் அசோகமரம் உயர்ந்து நின்றது. அதில் ஒரு தையற் சிட்டு அரும்பாடு பட்டுக் கூடு கட்டிக் கொண்டிருந்தது.

மெல்லிய நீண்ட அலகில் நார் போன்ற நீண்ட தாவரப் பொருட்களைக் கொண்டு வந்தது. கோணிச் சாக்குமூட்டையின் வாயைக் கோணி ஊசியால் தைப்பது போல் மூன்று இலைகளை நெருக்கி வந்து, நீளமாக அவைகளின் விளிம்புகளைச் சேர்த்து அழகாகத் தைத்தது. இலைகளை ஒன்று சேர்ப்பது அத்தனை எளிதாக இருக்க வில்லை. முதலில் கொண்டு வந்த நார், இலையின் நுனிவரை தைக்கப் போதவில்லை. அதனால் வேறு நார் தேடி எடுத்து வந்தது. இரண்டாவது நார் கொஞ்சம் விரைப்பாக இருந்ததால், வளைத்த வளைப்புக்கு வரவில்லை. உமிழ் நீரை வழிய விட்டு நாரை ஈரமாக்கி, மெல்லியதாக வளைக்க வரும்வரை பொறுமையாகக் காத்திருந்தது. இலைகளின் காம்பிலிருந்து நுனிவரை அழகாகத் தைத்தது. முதல் இலையையும், மூன்றாவது இலையையும் சேர்த்துத் தைக்கும்போது, ஏற்கனவே தைத்த இடம் பிரிந்து கொண்டு விட்டது. மிகவும் கவனத்துடன், நாரின் நுனியைக் காம்பில் சுற்றி, பூத் தொடுக்க முடிவதுபோல் முடிந்து, பிரியாமல் இருக்க வைத்து, தைத்து முடித்தது. எத்தனை பொறுமை! இப்பொழுது மூன்று நீண்ட இலைகளால் ஆன அந்தக் கூடு, ஒரு நீண்ட இலைக் கோப்பை மாதிரியே இருந்தது. பஞ்சுத் துண்டுகள்,





பூமொட்டுகள், துணித் துண்டுகளைக் கொண்டு வந்து கூட்டை நிரப்பியது தையற்சிட்டு.

பக்கத்து வீட்டில் இருந்து ஏதோ தாம்பாளம் விழுந்த சத்தம் பெரிதாகக் கேட்டு அதிர வைத்தது. கூடுகட்டிக் கொண்டிருந்த பறவை 'விசுக்'கென்று ஓடிப்போய் விட்டது!

தாம்பாளத்தைத் தவறவிட்டவர்களை மனதிற்குள் திட்டிக் கொண்டே மறைவிடத்தைவிட்டு வெளியே வந்தான் பாபு. எதிரே ஜன்னல் திரைக்குப் பின்னால் இருந்து பூமா!

"நீ எப்போ வந்தே பூமா?"

''தையற்சிட்டு இரண்டாவது நார் கொண்டு வந்தப்பவே வந்துட்டேன் அண்ணா. என்னமா, அற்புதமாய் இலைகளைச் சேர்த்துக் கூடு கட்டுது! எத்தனை தடைகள்! எத்தனை விடா முயற்சி!'' -பூமா வியந்தாள்.

"ஏதாவது பாடுமாக்கும்னு டேப்ரிக்கார்டரை வைத்தேன். முதலில் 'ட்விட்' சத்தம் போட்டதோடு சரி"என்று டேப்ரிக்கார்டரை எடுத்தான் பாபு.

''அண்ணா, இந்த தையற்சிட்டை ஓவியமாக வரைப் போறேன்,''என்று உள்ளே ஓடினாள் பூமா. சொன்னபடியே மூன்று நாட்களுக்குள் தையற்சிட்டு கூடு கட்டும் காட்சியை அழகாக அப்படியே வரைந்து விட்டாள்.

"கீழே மொட்டையா இருக்கே! ஏதாவது நாலு அடி பாடல் எழுதேன் பூமா?"என்றான் பாபு.

"நூலோ ஊசியோ இல்லாமல்
நண்பர் உதவி இல்லாமல்
அழகுக் கூட்டினைக் கட்டிடவே
அக்கா யாரிடம் பயின்றாயோ!"

என்று தயாராக எழுதிவைத்திருந்த பாடலைக் காட்டினாள் பூமா.

"பாட்டு நன்றாகத்தான் இருக்கு. ஓவியத்தின் கீழேயே எழுதிவிடு. பொருத்தமாக இருக்கும்!"என்றான் பாபு.

ரேவதி

அறிவியல் உண்மைகள்

● தையற்சிட்டு என்கிற Tailor Bird உலகம் முழுவதும் இதே பொருளில்தான் பெயர் வழங்கி வருகிறது.

● இலைகளை அழகாகத் தைத்து இணைக்கும் கலை இயற்கையின் பேரதிசயங்களில் ஒன்று. இலைகளை இணைக்க பூநார், தாவர தண்டுநார், சிலந்தி இழைகளைக் கூட இது பயன்படுத்துகிறது. ஊசியாக இதன் கூரான அலகு பயன்படுகிறது. தைக்கத் தேர்ந்தெடுக்கும் இலைகள் பசுமையானவை. இறுக்கமான பிணைப்புடன் இருக்கும்.

● ஆண் சிட்டுக்கு வால் பக்கத்தில் இருந்து இரண்டு இறகுகள் ஒவ்வொரு வசந்த காலத்திலும் செங்குத்தாக உயர்ந்து நிற்கும். கூடு கட்டி குடும்பம் நடத்த ஆரம்பித்ததும் இது மறைந்து விடும். ஒரே காலத்தில் இது நாலைந்து கூடுகள் கட்டி குடும்பம் நடத்தும்.

● பெண் சிட்டு கூடுகட்டுவதில்லை. ஆண் சிட்டு கூடு கட்டுவதை எல்லாச் சிட்டுகளும் வரிசையாக அமர்ந்து வேடிக்கை பார்க்கும்.

● ஒரு கூட்டில் நான்கு முட்டை வரை இடும். இரை- பூந்தாதுக்கள், பூச்சிகள், தானியங்கள் எல்லாம்.

● தையற்சிட்டுகளில் ஐந்து பிரிவுகள். எங்கும் நிறைந்திருப்பவை.

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம் கேட்டது. பக்கத்துத் தெருவில் இருந்த புவனாதான் வந்திருந்தாள். பூமாவும் அவளும் ஒரே பள்ளி, ஒரே வகுப்பு.

"பூமா, உன்னுடைய வாட்டர் கலர் பாக்ஸை கொஞ்சம் தாயேன்"என்றாள் புவனா.

"என்ன விஷயம் புவனா! நீயும் ஏதாவது ஓவியம் வரைந்திருக்கியா?"என்று கிண்டலடித்தான் பாபு.

"ஆமாம். அதற்குக் கலர் அடிக்கத்தான்."

"என்ன படம்?"

"ஒரு தையற் சிட்டின் படம்."

மறைத்து, சுருட்டி வைத்திருந்த ஓவியத்தை எடுத்துக் காட்டினாள் புவனா. பென்சில் ஸ்கெட்சில் ஒரு சிட்டு. உருவம், அமைப்பு எல்லாம் பூமாவின் தையற் சிட்டைப் போலவேதான். ஆனால் வால் பக்கம் தாழ்வாக இல்லாமல் நுனிச் சிறகுகள் இரண்டு மட்டும் குத்திட்டு நின்று கொண்டிருந்தன!

"இதென்னது! வால் சிறகு ஆகாசத்தைப் பார்த்துக்கிட்டிருக்கு! இது உண்மையாகவே தையற்சிட்டு தானா?"என்று கேட்டாள் பூமா.

"ஆமாம் பூமா. எங்க தோட்டத்துல வந்து எத்தனை அழகாய் மூன்று இலைகளை, நுனியைச் சேர்த்து கூரிய அலகினால் தைச்சது தெரியுமா? அதைப் பார்த்து வரைந்ததுதான் இது."

"அப்படியா! எங்க வீட்டு அசோக மரத்தில்கூட ஒரு தையற்சிட்டு கூடு கட்டித்து. அதை நான் வரைந்திருக்கேன் பார்"என்று பூமா தனது ஓவியத்தைக் காட்டினாள்.

"இது என்ன இப்படி இருக்கே! நான் பார்த்த தையற்சிட்டோட வால் இப்படி மொட்டையா இல்லையே!"

இருவருக்குள் விவாதம் சூடு பிடித்தது.

"உன் ஓவியம் உனக்குப் பெரிசு, என் ஓவியம் எனக்குப் பெரிசு. உன்னிடம் கலர் பாக்ஸ் கேட்க வந்ததால்தானே இப்படிக் கூறுகிறாய்? எனக்குக் கலர் பாக்சே வேண்டாம்"என்று புவனா கிளம்பியபோது, எதிரே பூமாவின் மாமா வந்து விட்டார். அவருக்கு புவனாவையும் நன்றாக தெரியும்.

"நல்ல காலம் மாமா. நீங்க வந்தீங்க"என்று பெரிய வரவேற்பளித்த பாபு, விஷயத்தை விளக்கினான். மாமா, புவனாவை உட்காரச் சொன்னார். இருவரது ஓவியங்களையும் வாங்கிப் பார்த்தார்.

"மாமா, யார் வரைந்தது தப்பு?"

"இருவருமே சரியாகத்தான் வரைந்திருக்கிறீர்கள்."



சுட்டுத் தள்ளு!

இராணுவத்தில் பணியாற்றும் ஒருவர் இரண்டு மாத விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்திருந்தார். அவரின் இராணுவ உடை, மிடுக்கான நடை, வாளிப்பான உடல்வாகு இவற்றைப் பார்த்து அந்த கிராமத்திலிருந்தவர்கள் எல்லாம் ராணுவ வீரனிடம் வந்து அவரது அனுபவங்களைக் கதை கதையாகக் கேட்டுச் செல்வார்கள்.

ஒருநாள் கதை சொல்லிக் கொண்டிருக்கும் போது, ஒரு பெரியவர் "உங்களுக்கு மறக்க முடியாத நாள் எது?" என்று கேட்டார்.

அதற்கு அந்த ராணுவ வீரர், "ஒருநாள் நள்ளிரவு, திடீரென்று சுடு... என்று மேலதிகாரி உத்தரவிட்டார். விரைவில் சுட்டுத் தள்ளு என்று போர் முகாமிலிருந்து மீண்டும் மீண்டும் தகவல் வந்தது. எப்படி என்னால் சும்மா இருக்க முடியும்? ஒரேயடியாகச் சுட்டுத் தள்ளி விட்டேன். அந்த இருட்டில் என்னுடைய கையையும் சுட்டுக் கொண்டேன்" என்று சொல்லித் தன் கையை தடவிக் கொடுத்துக் கொண்டார்.

கதை கேட்ட ஒருவர், "அப்படியா தம்பி... நீ சுட்டது எதனால் தம்பி? துப்பாக்கியா? பீரங்கியா? எதிரிக்கு பலத்த சேதமா?" என்று வியப்போடு கேட்டார்.

"துப்பாக்கியாவது! பீரங்கியாவது! நான் சுட்டுத் தள்ளியது நூற்றுக்கணக்கான சப்பாத்திகளை. இராணுவத்தில் சமையல்காரனாக அல்லவா இருக்கிறேன். துப்பாக்கி கருப்பா, சிவப்பா என்று கூட எனக்குத் தெரியாதே" என்றான் அந்தப் பொல்லாத இராணுவப் பணியாளர்.

- மேலப்பாதி எஸ். நாகராஜன்.

"அப்ப, நம்ம தோட்டத்துல நாங்க பார்த்த தையற்சிட்டுக்கு இப்படி நெட்டுக்குத்தலா வால் இல்லையே!

"பருவம் வந்த ஆண் சிட்டுகளுக்கு, வசந்த காலத்தில் இந்த மாதிரி வால் பக்கம் இரண்டு சிறகுகள் வானை நோக்கி செங்குத்தாக நிற்கும். இது குடும்பம் நடத்தத் தயார் என்பதற்கான அறிவிப்பு."

"அப்போ, பெண் சிட்டுக்கு இந்த மாதிரி இருக்காதா மாமா?"

"இருக்காதும்மா. ஆண் சிட்டுக்கு மட்டுமே இது முளைக்கும்."

"அப்போ நம்ம தோட்டத்துல கூடு கட்டினது பெண் சிட்டா மாமா?"

"இல்லேம்மா. ஆண் சிட்டுதான் கூடுகட்டும்."

"அப்போ, நம்ம தோட்டத்து சிட்டுக்கு வால் இருக்கலையே!"



"பாடம் நடத்தும்போது யார் 'டொக், டொக்'னு சத்தப் படுத்துறது?"

"இவர்தான் சார் வெத்தலை பாக்கு இடிக்கிறார்!"

-சீர்காழி வி.ரேவதி

"இந்த ஆண் சிட்டு வசந்த காலத்தில் நான்கைந்து கூடு கூடக் கட்டும். முதல் கூடு கட்டி, குடும்பம் நடத்தினதும் அதன் நெட்டை வால் குறுகி, பழையபடி ஆகி விடும்."

"புவனா, நான் தவறா ஏதாவது பேசியிருந்தால் மன்னித்து விடு" என்றாள் பூமா.

"அதேதான் நானும் கேட்டுக் கொள்கிறேன் பூமா"என்றாள் புவனா. இருவரும் சிரித்தனர்.

"பூமா உன் பாடல் என்று இழுத்தார் மாமா."

" என் தப்பு புரிஞ்சு போச்சு மாமா. அக்கா யாரிடம் பயின்றாயோ என்பதற்குப் பதில் யாரிடம் கலையைப் பயின்றாயோ என்று மாற்றி விடுகிறேன் மாமா"என்று சிரித்தாள் பூமா.

காட்சி – 1

இடம் : வீதி

காலம் : மாலை நேரம்.

(பாத்திரங்கள் : இப்ராஹீம், மோகன், அழகுமலை)

மோகன் : நாளைக்கு ரம்ஜானுக்காக நம்ம பள்ளிக்கூடத்துக்கு லீவு விட்டாச்சே! ஜாலியா ஊர்சுத்தலாம். ஆமா அழகுமலை, நீ மட்டும் ஏன் அழுகை மலை மாதிரி உம்முன்னு வர்ரே?

அழகுமலை : லீவு முடிஞ்சு பள்ளிக்கூடம் திறந்தவுடனே நம்ப கணக்கு சார், சாய்சதுரம் நடத்தறேன்னு சொல்லியிருக்காரே?

மோகன் : காலாண்டுக்கு முக்கோணம் நடத்திட்டாரு. இப்ப சாய் சதுரம்தானே பாடப்பகுதி! உனக்குப் பிடிக்கலேன்னா சாயாத சதுரத்தை நடத்தச் சொல்லுவோம்.

இப்ராஹீம் : (பாதையில் கிடைக்கும் லாடத்துண்டு ஒன்றை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டே) வடிவியல் பாடத்திலே சுளையாகப் பத்து மார்க் இருக்கே. அப்புறம் ஏன் கவலைப்படறே?

அழகுமலை : நான் இன்னும் ஜியாமெட்ரி பாக்ஸ்' வாங்கலே. சாரும் ரெண்டு மாசமா... சொல்லிக்கிட்டுத்தான் இருக்காரு.

மோகன் : பாக்ஸ் வாங்கலேன்னா... சார் வெளியே நிக்க வச்சிடுவாரே?

அழகுமலை : அதான்டா பயமா இருக்கு. நானும் எங்க அப்பாகிட்டே கேட்டுக் கேட்டு அலுத்துட்டேன். முப்பது ரூபா முழுசா வேணுமே. நான் எங்கேடா... போவேன் அவ்வளவு ரூபாய்க்குன்னு இட்டறாரு.

மோகன் : டேய் இப்ராஹீம்... நாங்க ரெண்டுபேரும் சீரியஸா பேசிக்கிட்டு வாரோம்... நீ மட்டும் எதையுமே காதுல வாங்காம... தெருவுல கிடக்கிற ஆணி, தகர டப்பா, இரும்புத்துண்டு... இப்படியா



பொறுக்கிக்கிட்டு வர்ரியே! உனக்கே இது நல்லாயிருக்காடா? உங்கூட வரவே எங்களுக்கு அவமானமா இருக்கு.

அழகுமலை : மோகன், அவன் இன்னிக்கு நேத்தா இப்படிப் பொறுக்கிக்கிட்டு வரான்? வருஷம் பூராத்தானே பொறுக்கிக்கிட்டிருக்கிறான்? அவன் பேரையே "இரும்புத்துண்டு இப்ராஹீம்"னுதானே நம்ப வகுப்புப் பையன்கள்ளாம் வச்சுட்டாங்க!

இப்ராஹீம் : சிறு துரும்பும் பல்குத்த உதவும். துரும்பே உதவறப்போ இரும்பு பயன்படாதா என்ன!

மோகன் : கரும்பு கிடைச்சாலாவது கடிச்சு சுவைக்கலாம். இரும்பை எப்படிச் சாப்பிடறது?

இப்ராஹீம் : மோகன், இந்த மாதம் புனிதமான ரமலான் மாதம். நாங்க... எல்லாருமே நோன்பு இருக்கிறோம். இப்பப் போயி... சாப்பாடு அது இதுன்னு நினைவு படுத்தாதே.

அழகுமலை : நோன்பு எதுக்காக இருக்கணும்?

மோகன் : என்னைப் பொறுத்தவரை நோன்புன்னா என்ன தெரியுமா? மூணு வேளையும் மூக்கைப் பிடிக்க சாப்பிடணும். அதோட... இடை இடையே

கமலவேலன்



எல்லாப் பெருமைகளும்...

ஐஸ்கிரீம், பகோடா, பஜ்ஜி, வடைன்னு உன்ன தள்ளிக்கிட்டே இருக்கணும். இது தான் நோன்புக்கு என்னோட விளக்கம்.

இப்ரஹீம் : இது உன்போல சாப்பாட்டு ராமன்களின் உண்ணும் நோன்புக்கான விளக்கம். நோன்பு மனிதனை எதையும் தாங்கும் இதயம் உடையவனாக மாற்றுகிறது. அதேசமயத்திலே ஏழை மக்களின் பசி உணர்வைப் பிறருக்கு உணர்த்தவும் நோன்பு துணை புரிகிறது. பசி, பட்டினியை உணர்ந்து பார்த்தவனால் தானே அடுத்தவனிடம் அனுதாபம் காட்ட முடியும்?

அழகுமலை : நோன்புல இவ்வளவு மகிமையிருக்குதா?

இப்ரஹீம் : அதுமட்டுமல்ல... ரமலான் என்னும் அரபிச் சொல்லுக்கு என்ன அர்த்தம் தெரியுமா மோகன்?

மோகன் : என்னைப் பொறுத்தவரை குலோப்ஜாம் நினைப்புதாம்பா வரது.

இப்ரஹீம் : சாப்பாட்டு ராமன்களுக்கு அந்த நினைப்புகள்தான் வரும். ஆனால் குலோப்ஜாம் குஸ்கா, பிரியாணி எல்லாம் பெருநாள் அன்னிக்கு நாங்களும் சாப்பிடறதுதான். ஆனால், ஈத் பெருநாள்னா ஈகைத் திருநாள்ன்னுதான் பொருள். இருக்கின்றவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுக்கணும்ங்கறதுதான் இந்தப் பண்டிகையின் நோக்கம்!

அழகுமலை : இப்ரஹீம், ரமலான் என்ற சொல்லுக்கு இன்னும் நீ அர்த்தம் சொல்லலே...

இப்ரஹீம் : பாத்தியா... அதைச் சொல்ல மறந்துட்டேன். ரமலான் என்றால் எரிப்பது என்று பொருள். மனிதனிடம் மண்டிக்கிடக்கும் மாசுகளை சுட்டெரித்து அவனது பாவங்களைக் களைந்து மனிதனை மனிதனாக வாழச் செய்ய வந்த மாதம்தான் ரமலான்.

மோகன் : ரமலான் மாசத்துக்கு இவ்வளவு சிறப்பு இருக்குதா? டேய் இப்ரஹீம்... என்னடா இது மறுபடியும் இரும்புத்துண்டைப் பொறுக்க ஆரம்பிச்சுட்டே! எனக்கு அசிங்கமா இருக்குடா. எனக்குத் தெரிஞ்சவங்க வேற வராங்க!

அழகுமலை : எங்க அப்பா... ஆடுமாடு மேய்க்கிறப்போ சாணி பொறுக்குவாரு. அவர் சாணி பொறுக்குறாரு. இவன் ஆணி பொறுக்குறான்.

மோகன் : சரி... நாளைக் கழிச்சு ஸ்கூல்ல சந்திப்போம்.

அழகுமலை : ஐயோ... ஸ்கூல்னதும் உடனே 'ஜியோமெட்ரிபாக்ஸ்' ஞாபகம் வருதுடா... பயமாயிருக்குடா.

இப்ரஹீம் : அச்சம் வேண்டாம். அல்லாதுணை நிற்பார்.

காட்சி : 2

இடம் : இப்ரஹீம் வீடு.

காலம் : இரவுப் பொழுது

(பாத்திரங்கள் : இப்ரஹீம், சம்சுதீன், மும்தாஜ்.)

சம்சுதீன் : டேய் இப்ரஹீம் நான் கேள்விப்பட்டறதெல்லாம் உண்மைதானா!

இப்ரஹீம் : என்னப்பா.. கேள்விப் பட்டீங்க...?

சம்சுதீன் : பள்ளிக்கூடத்துல உனக்குப் பேரே "இரும்புத்துண்டு இப்ரஹீம்" மாம்லே! நாங்க உனக்கு என்னடா குறை வச்சிருக் கிறோம்?

மும்தாஜ் : ரோட்டுல கிடக்கிற இரும் புத் துண்டைப் பொறுக்கி என்னடா செய் யறே? உங்க அப்பா ராப்பகலா தோல் ஷாப்புல உழைக்கிறதே உன்னோட உயர் வுக்காகத்தானே.

இப்ரஹீம் : அப்பா, உங்க மகனும் உங் களை மாதிரி உழைப்புக்கு மதிப்புக் கொடுக்கறவன்தான். உழைப்பு உயர்வைத் தரும்'னு எங்க சார் அடிக்கடி சொல்லு வாரு.

சம்சுதீன் : உழைக்கப்படி. அதுக்காகத் தெருப் பொறுக்கியா இருந்தா எப்படி? நாலு பேர் நீ பொறுக்கறதைப் பார்த்து என்னிடம் சொல்லும் போது கேவலமா இருக்குடா. உருப் படற வழியைப் பாரு.

மும்தாஜ் : சரிங்க. விடிஞ்சா பெருநாள். பிள்ளையைத் திட்டா தீங்க. தொழுகைக்கு நேரமாச்சு. கிளம்புங்க.

காட்சி : 3

இடம் : பள்ளிக் கூடம்

காலம் : காலை நேரம்

பாத்திரங்கள்: ஆசிரியர், இப்ரஹீம், சம்சுதீன், மோகன், அழகுமலை.

சம்சுதீன் : சார்... இந்த எட்டாம் வகுப்பு 'இ' பிரிவுக்கு ஆசிரி யரைப் பார்க்கணும்.

ஆசிரியர் : எட்டாம் வகுப்பு 'இ' பிரிவு ஆசிரியர் நான்தான். நீங்க யாரு?

சம்சுதீன் : சார் வணக்கம். நான் இப்ரஹீமோட அப்பா. அவன் எப்பப் பார்த்தாலும் தெருவுல இரும்புத் துண்டு பொறுக்கிக்கிட்டு இருக்கிறான். அதைக் கொஞ்சம் நீங்க கண்டிச்சு வையுங்க. நான் எத்தனையோ தடவை கண்டிச்சாச்சு. அவன் கேட்கறதா இல்லே.

ஆசிரியர் : ஆமாம்... வகுப்புப் பசங்க கூடச் சொல்லுவாங்க. (இப்ரஹீம் வர, அவனைப் பார்த்து) ஏம்ப்பா.. இப்ரஹீம்... நல்லாப் படிக்கிற பையன்... இப்படி ஏன் நடந்துக்கறே?

(அந்த நேரம் அழகுமலையும், மோக னும் வருதல்)

இப்ரஹீம் : சார் இந்த ஜியாமெட்ரி பாக்ஸை உங்க கையால... அழகுமலைக்குக் கொடுங்க சார்.

ஆசிரியர் : இந்தா அழகுமலை. இனிமே நீ வெளியே நிக்கத் தேவை யில்லை.

அழகுமலை : ஜியாமெட்ரிபாக்ஸ் ரொம்ப அழகாயிருக்குடா. ரொம்ப தாங்க்ஸ்டா. இது முப்பது ரூபா விலை ஆச்சே! எங்க அப்பாகிட்டே சொல்லி பத்து நாள்ல காசை வாங்கித் தந்துட



றேன்டா.

இப்ராஹீம் : பணம் வேண்டாம் அழகு மலை. இது நான் ஊருக்குத் தரும் என்னோட ஈத் பெருமாள் பரிசு.

சம்சுதீன் : உனக்கு ஏது இவ்வளவு பணம்? வரவர உன் போக்கே சரியில்லே.

ஆசிரியர் : நல்ல பையன் நீ. இப்படி மாறிட்டியேப்பா!

இப்ராஹீம் : சார். உங்க அறிவுரைகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்கிறவன் நான். எல்லாருக்கும் உதவணும். அப்பா அம்மாவுக்கு அதிகம் தொந்தரவு கொடுக்கக் கூடாதுன்னு நீங்க அடிக்கடி சொல்லுவீங்க. இல்லையா?

ஆசிரியர் : ஆமா... அதுக்கென்ன இப்போ?

இப்ராஹீம் : தெருவுல சாணி பொறுக்கி... அதை வரட்டியாத் தட்டி விக்கிற பாட்டி ஒருத்தங்க எங்க தெருவுல வாழ்றாங்க. அவங்களைப் பார்த்ததும் தான் எனக்கு இப்படி ஒரு யோசனை தோன்றியது. தெருவுல யாரோ தூக்கி எரியற பழைய இரும்பு சாமான்களை பொறுக்கி சேர்த்து, மொத்தமா கடையில போட்டால் கணிசமான பணம் கிடைக்குமேன்னு நினைச்சேன். உடனே காரியத்துல இறங்கினேன். எல்லோரும் என்னை இரும்புத் துண்டு இப்ராஹீம்னே கூப்பிட்டு கேலி பண்ணினாங்க. நண்பர்கள் என் கூட நடந்து வரக் கூட வெட்கப்பட்டாங்க. ஆனால் நான் எதுக்கும் சளைக்கலே. தெருத் தெருவா அலைஞ்சு, துண்டு துண்டா வேண்டாம போட்டிருக்கும் இரும்பு சாமான்களைச் சேர்த்தேன். சேர்த்த பழைய இரும்புகளை, கடையில விலைக்குப் போட்டு, அந்தக் காசை... அப்படியே நம்ப, ஸ்கூல் சஞ்சாயிகாவில (சிறு சேமிப்பு வங்கி) சேமிச்சு வர்றேன். அந்தப் பணத்துலதான் நம்ப அழகுமலைக்கு இப்போ ஜியாமெவ்ரீ பாக்ஸ் வாங்கிக் கொடுத்தேன். இது தப்பா சார்?

ஆசிரியர் : இப்ர ஹீம் உன்னோட உயர்ந்த பண்பை நானே தவறா... புரிஞ்சுகிட்டேனே...



சம்சுதீன் : இப்ர ஹீம்.. உன்னை மக னாப் பெற்றதற்கு அல் லாவுக்கு நன்றி சொல்லணும். என்னை மன்னிச்சுடுப்பா.

மோகன் : பணம் இருக்குங்குற மமதை யிலே நான் உன்னை பல சமயம் "பொறுக் கின்னு" கேலி கூடப் பண்ணியிருக்கேன். உண்மையிலேயே நீ எங்களுக்கெல்லாம் வழிகாட்டி இப்ராஹீம்!

அழகுமலை : இப்ராஹீம் உன் எதிர்ல நின்னு பேசக் கூட எனக்கு அருகதை கிடையாது.

இப்ராஹீம் : எல்லாரும் ரொமபப் புகழ்றீங்க. பெரியவங்க காட்டிய நன்னெறியில் வாழணும்னு எல்லோரும் பேசறோமே தவிர, அது என்ன வழி எப்படி வாழ்ந்தா அது நல்ல வழின்னு யோசிப்பதில்லே. நான் யோசிச்சேன். அவ்வளவுதான். எல்லாப் பெருமைகளும் அல்லாவுக்கே.

ஆசிரியர் : நல்லாச் சொன்னே இப்ராஹீம்.

(பள்ளி மணி அடிக்கிறது)

நட்பு வென்றது!

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டு வந்த சமயம். இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருந்தது.

நாட்டுக்குள் காந்திஜி தலைமையில் விடுதலை இயக்கம் தீவிரம் அடைந்தது. 'செய் அல்லது செத்து மடி' என்ற முழக்கம்! 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நாடு முழுதும் தீவிரம் அடைந்தது.

அந்தச் சூழ்நிலையில், வேறொரு இந்தியத் தலைவருக்கு, ஆங்கிலேயரிடம் கெஞ்சிக் கேட்டு விடுதலை பெறுவதில் விருப்பம் இல்லை. 'கேட்டுப் பெறுவது பிச்சை; அடித்துப் பிடித்து உரிமையுடன் நாமே எடுத்துக் கொள்வதுதான் உண்மையான சுதந்திரம்' என்றார் அவர்.

இதன் காரணமாகக் காந்திஜிக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு. எனவே, தலைமறைவாகி இந்தியாவை விட்டு அவர் வெளியேறினார். ஜெர்மனி, ஜப்பான் நாடுகளுடன் பேசி, அவர்களின் ஒத்துழைப்புடன், இந்தியா மீது படையெடுத்து வந்து, நம் பாரதத்தை ஆங்கிலேயரிடமிருந்து விடுவிக்க முயன்றார். அவர்தான் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!

அவர் இந்தியாவுக்கு வெளியில் வாழ்ந்த இந்தியர்களை ஒன்று திரட்டினார். ஏற்கெனவே, ஜப்பானால் கைது செய்யப்பட்டிருந்த பிரிட்டிஷ் ராணுவத்தின் இந்தியச் சிப்பாய்களுக்கு, ஜப்பானுடன் பேசி, விடுதலை பெற்றுத் தந்தார். அவர்களைக் கொண்டு ஒரு விடுதலைப் படையை அமைத்தார். அதற்கு 'இந்தியன் நேஷனல் ஆர்மி - இந்திய தேசியப்படை' என்று பெயர்.

அப்படைக்குத் தானே தலைமை தாங்கிப் பர்மாவின் தலைநகர் ரங்கூனிலிருந்து இந்தியாவை நோக்கி முன்னேறினார் நேதாஜி. வழியெங்கும் வெற்றிமேல் வெற்றி!

நேதாஜி இந்தியாவின் வடகிழக்கு எல்லையை அடைந்து விட்டார். அங்கு வந்ததும் மேலும் முன்னேற முடியாமல், அவரிடம் ஒரு பெரும் குழப்பம்.

என்ன அது?

கண் முன்னால் இந்தியாவில் நுழைய இரண்டு பாதைகள். ஒரு பக்கம் சிட்டகாங் வழி. இன்னொரு பக்கம் கொஹிமா வழி. இரண்டிலும் ஆங்கிலேயரின் படைகள் குவிக்கப்பட்டிருந்தன. எந்த வழியில் நுழைந்தால் வெற்றி பெற்று இந்தியாவினுள் நுழைவது எளிது?

நேதாஜியால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. குழம்பினார். திக்குமுக்காடினார்.

அப்போது ஓர் இரகசியச் செய்தி கிடைத்தது. அதன் சாரம் இதுதான்.

"சிட்டகாங் வழியில் எதிரியின் படைபலம் அதிகம். என் தலைமையில் உள்ள மாபெரும் கொரில்லாப் படையிடம் இந்தியத் தேசியப்படை தோற்பதை நான் விரும்பவில்லை. அப்படி நடந்தால், இந்திய விடுதலை என்ற கனவு சின்னா பின்னமாகி விடும். எனவே, கொஹிமா வழியில் முன்னேறவும்...."

இச்செய்தி நேதாஜியை அதிர்ச்சியில் ஆழ்த்தியது. சிட்டகாங்கில் உள்ள பிரிட்டிஷ் கொரில்லாப் படையின் தளபதியே அல்லவா செய்தியை அனுப்பியுள்ளார்? ஒரு சமயம் எதிரியின் சூழ்ச்சியோ?

நேதாஜி இன்னும் பலவாறு எண்ணினார். அப்போது அவருக்கு ஒரு உண்மை பளிச்சென்று நினைவுக்கு வந்தது. என்ன அது?

அந்தப் படைத்தளபதி, யார் என்பது நேதாஜிக்குப் புரிந்து விட்டது. அவர் ஒரு தேசப்பற்று மிக்க இந்தியர். நேதாஜியுடன் சிறுவயது முதல் ஒன்றாகப்

படித்த உற்ற நண்பர்.

இருவர் வீடும் அருகருகில் தான். இருவரும் ஒன்றாகவே ஐ.சி.எஸ். என்ற ஆட்சி முறைப் படிப்பில் தேர்ச்சி அடைந்தனர். பயிற்சிக்காக இருவரும் ஒன்றாகவே லண்டன் சென்றனர்.

அங்கு சென்றதும்தான், அந்தப் படிப்பு தம்மை ஆங்கிலேயருக்கு அடிமையாக்கிவிடும் என்ற எண்ணம் நேதாஜிக்கு ஏற்பட்டது. எனவே பாதியிலேயே படிப்பை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பி, அரசியலில் ஈடுபடலானார். அதன் தொடர்ச்சியாகத்தான், அவர் இந்தியத் தேசிய ராணுவத்தை நிறுவியதும், அதற்குத் தலைமையேற்று இந்தியா மீது படையெடுத்ததும்.

இன்னொருவர் தம் பயிற்சியைத் தொடர்ந்து முடித்தார். பிற்பாடு, பிரிட்டிஷ் ராணுவத்தின் ரகசியப் படை யில் சேர்ந்து, நாளடைவில் உயர் அதிகாரி ஆனார்.

இரண்டாம் உலகப் போரின் போது, சிட்டகாங் பகுதியில் அவர் கொரில்லாப் படையின் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

சுபாஷ்போசுக்கு எல்லாம் விளங்கி விட்டது. தனது உயிர் நண்பனை அவர் மனம் வாழ்த்தியது. அத்துடன், தான் காவல் காத்து நிற்கும் வழியாக வந்தால் தானே இந்தியப் படையைத் தோற்கடித்து விடுவேன் என்பதையும் சூசகமாகத் தெரிவித்த அந்த நண்பனுடைய கடமை உணர்வையும் அவர் பாராட்டினார்.


அடுத்த கணம் சுபாஷ் கொஹிமா வழியாக முன்னேறுமாறு தன் வீரர்களுக்கு உத்தரவு இட்டார்.

வெற்றி சுபாசுக் குத்தான். அப்பகுதி விடுதலை பெற்றது. அங்கு 'மொய்ரங்' என்ற இடத்தில் தன் கையால் இந்திய மூவண்ணக் கொடியை ஏற்றிப் பறக்க விட்டார். இது நடந்தது 1944 ஏப்ரல் 14 ஆம் நாள். அதாவது நமக்கு விடுதலை கிடைப்பதற்கு மூன்று ஆண்டுகள் முன்பே!

நேதாஜிக்கு உதவிய அந்த உற்ற நண்பர் 'சௌதேந்திர குமார் கோஷ்' என்பவர்!



பயப்படத் தேவை இல்லை!



மரத்தின் மீது ஒரு சிட்டுக்குருவி உட்கார்ந்திருந்தது. அந்தச் சமயம் அப்பக்கமாக குள்ள நரி ஒன்று வந்தது. குருவியைப் பார்த்து "வணக்கம், நண்பனே! உன் குரலைக் கேட்டதும் உன்னைக் காண ஓடோடி வந்தேன்" என்றது நரி.

"உன் அன்பான வார்த்தைக்கு மிக்க நன்றி" என்றது குருவி.

ஆனால் அதைக் கேட்காததுப் போல் பாவனை செய்தது நரி. "நீ என்ன கூறுகிறாய்? எனக்கு எதுவும் கேட்கவே இல்லையே! இங்கே வா. நான் உன்னோடு பேச விரும்புகிறேன். நீ மரத்திலிருந்து பேசுகிறாய். நீ பேசுவது என் காதில் விழவில்லையே?" என்றது தந்திரக்கார குள்ள நரி.

"ஐயோ, தரைக்கு வர பயமாயிருக்கிறது. என்னைப் போன்ற பறவைகள் தரைக்கு வருவது எப்போதுமே ஆபத்தானது" என்றது குருவி.

"ஐயய்ய! என்னைக் கண்டா பயப்படுகிறாய்?" என்றது நரி.

"உன்னிடம் எனக்குப் பயமில்லை. ஆனால், மற்ற மிருகங்கள் உள்ளனவே" என்றது குருவி.

"நண்பனே பயப்படாதே. உலகில் சமாதானம் நிலவ வேண்டும் என்று இப்போது தான் நாட்டில் சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இனிமேல் மிருகங்கள் ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ளாது. ஆகவே நீ பயப்படத் தேவையில்லை. கீழே இறங்கி வா" என்றது குள்ள நரி.

"அப்படியா! அது உண்மையானால் நல்லதுதான். இதோ வருகிறேன். அதோ பார். ஓநாய்கள் கூட்டமாக இப்பக்கம் ஓடி வருகின்றன. அவைகளைப் பார்த்து நீ ஓட வேண்டிய அவசியமே இல்லை. நீ இங்கேயே இருக்கலாம்" என்றது குருவி.

ஓநாய்கள் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே "ஓநாய்களா? என்று சொல்லி ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது நரி. அதைப் பார்த்த குருவி, "நீ எங்கே ஓடுகிறாய் நண்பனே? உலகில் அமைதி நிலவ வேண்டும் என்ற சட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னாயே? பிறகு ஏன் ஓடுகிறாய்? ஓநாய்கள் உன்னை ஒன்றும் செய்யாது" என்றது.

"யாருக்குத் தெரியும்? அந்த அறிவிப்பை ஓநாய்கள் இன்னும் அறிந்திருக்காமல் கூட இருக்கலாம் இல்லையா? அதான் ஓடறேன்," என்று கூறிக் கொண்டே ஓட்டம் பிடித்தது குள்ள நரி.

தந்திர மிக்க குள்ள நரியையே ஏமாற்றி விட்ட பெருமையில் துள்ளி மகிழ்ந்தது சிட்டுக்குருவி.

தக்கோலம் அ. முஸ்தபா


சிரிப்ooo
"டைப் மிஷன் கண்டுபிடிச்சவருக்கு A,B,C,D...யே தெரியாதுடா. பாரேன், A,B,C,D...யை வரிசையா வைக்காமல் கன்னாபின்னான்னு வச்சிருக்காங்களே!" – சீர்காழி வி.ரேவதி
"அப்பாவைப் பாருடா...இந்த வயசுலேயும் படிக்கிறாங்க." "நானும் அப்பாவா ஆனபிறகு படிக்கிறேனே...!" – சீர்காழி வி.ரேவதி
"ஏன்டா உன் 'பர்த்டே'வுக்கு எனக்கு 'கேக்' கொடுக்கலே?" "நீ 'கேக்'கல...அதனால நான் கொடுக்கல!" – கே. சோமசேகர்
"சாமி பரீட்சையில பாஸ் பண்ணா மூணு தேங்கா உடைக்கிறேன்!" "தேங்காய் பழைய ஸ்டைல்! மூணு லிட்டர் பால் கொண்டா!" – கே. சோமசேகர்
"அம்மா... என்னை காலையில கோழி கூவும் போது எழுப்பி விடு...!" – சீர்காழி ஜே. பலராமன்

• புனுகுப் பூனையை பற்றி எங்களுக்கு இருந்த எல்லா சந்தேகங்களையும் கௌரவ ஆசிரியர் போக்கி விட்டார். - சிதம்பரம் மா. சாமியப்பன், காட்டுராஜா கோவில் சி. வேங்கை வேல், தேவ னாங்குறிச்சி பா. வடிவேல், எலந்தகுடி டி. யாஸ்மின் நிலோபர், கருமத்தம்பட்டி ஆர். அருண்பிரகாஷ், பவித்ரமாணிக்கம் டி. முருகன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

• அறிவியல் துணுக்குகளை எழுதி அனுப்பலாமா? - மேட்டுப்பாளையம் பி. ராஜாக்கண்ணு, விழுப்புரம் இரா. அருண்மொழி மற்றும் பலர். (தாராளமாக அனுப்பலாம். ஆனால் தமிழகத்தில் இருந்து ஆங்கிலத்தில், தமிழில் வெளி வரும் நாளேடு/பத்திரிகைகளில் வெளியாகும் தகவல்களைத் தர வேண்டாம். ஆதாரங்களைத் தவறாது குறிப்பிட வேண்டும். - ஆசிரியர்.)

• ஆழியின் "தொலைபேசி" பக்கங்கள் அறிவுக் களஞ்சியத் தொகுப்பு! - கொடுமுடி பா. முத்து மணி, கள்ளக்குறிச்சி இ. தேவாம்சம், தேவனாங் குறிச்சி பா. வடிவேல், நரியங்குடி பா. சிவக் குமார், கடலூர் இ. கணேஷ்ராம், சென்னை-116 இ. சிவா, கருமத்தம்பட்டி ஆர். அருண்பிரகாஷ், பவித்ரமாணிக்கம் தி. மனோகரன்.

• 'இளைஞனை விழுங்கிய மலைப்பாம்பும்' 'பிர மிக்க வைக்கும் அங்கோர்வாட்'டும் உண்மையாகவே பிரமிக்க வைத்தன! - சேலம் மா. சத்தியகீர்த்தி, விழுப்புரம் வே. சின்னம் மிணி, ஆண்டார்குப்பம் தா. பூபதி, விருதுநகர் மா. கனகராஜன், கடலூர் கணேஷ்ராம்.

• சிறுவர்களுக்கு அதிக அளவில் எழுத வாய்ப் பளிப்பது கோகுலம்தான். உதாரணம் எங்கள் ஊரில் நடந்தது. கோகுலத்தின் தொண்டு வாழ்க! - சின்னசேலம் இரா. பிரசன்னகுமார்.

• பரிசுக் கதை, ஆசிரியரின் பெருமைக்கு கட்டியம் கூறியது. ஆசிரியப் பெருமக்களுக்கு பெருமை சூட்டும் கோகுலம் சிறுவர் உலகின் தாரகை. - மேலூர் மா. சபரிராஜ், திருத்தணி வா. இப்ராஹீம், நசரத் வா. இன்னாசி, கடலூர் இ. கணேஷ்ராம்.

• 'செய்யவும் அருமை அனுப்பவும் பெருமை!' கட்டுரை குறைந்த செலவில் வாழ்த்து அட்டைகளை நாங்களே பண்ணை அருமையான வழி காட்டி. இந்த வழி காட்டலை வைத்து நான் செய்த வாழ்த்து அட்டையை அனுப்பியுள்ளேன். வாழ்த்துங்கள்! - குடவாசல் மா. நாராயணமூர்த்தி, சின்ன தாராபுரம் வா. வேதவல்லி, திண்டிவனம் வி. சாமுவேல், மல்லசமுத்திரம் மீ. மாரியப்பன், பொய்பாக்கம் தே. சஞ்சய் காந்தி.

(கிடைத்தது. நன்றி, பாராட்டுகள்.)

• 'புலி'யார் நடத்திய புத்தாண்டு விழா!' படிக்கப் படிக்க மீண்டும் படிக்கத் தூண்டியது. ஜிங்லிக்குக் கிடைத்த தண்டனை சிரிக்க வைத்தது. ஆமாம் சார், இதை எழுதியவர் பெயர் தரவில்லையே! - புவனகிரி வி. சாமிநாதன், சின்ன மலை தே. மாணிக்கம், ராணிப்பேட்டை மி. தஸ்தகீர் மற்றும் பலர்.

• புத்தாண்டு உறுதி எடுத்த சிறுவர் சிறுமியருக்கு எங்கள் வாழ்த்துகள் - நெய்வேலி இ. கன்னை பிரான், தாசராயப்பட்டி வா. மாதேஸ்வரன், வண்டியூர் இ. கண்ணம்மா.

அறிவியல் துணுக்கு எழுதலாமா?

• 'பதை பதைக்க வைக்கும் புவனா தேடிய புதையல்' என்று தலைப்பை மாற்றிவிட விரும்பு கிறோம். அத்தனை சஸ்பென்ஸ்! - திருவரங்கம் மா. சின்னகேசவன், திண்ணனூர் வி. சுந்தர் சாமி, விழுப்புரம் இரா. அருண்மொழி, கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

• ஆங்கிலப் பத்திரிகை களில் வரும் ஜூனியர் கதாநாயகர்கள் மாதிரி தமிழில் யாருமே எழுதவில்லையே என்ற ஏக்கம் நெடுநாளாக இருந்தது. 'சாட்பீட்'த் அந்த ஏக்கத்தைத் தணித்தது. ஒவ்வொரு கதையையும் அதே இதழில் முடிப்பது மிக அருமை! - மன்னார்குடி தா. சேதுமாதவன், காங்கேயம் மா. முத்திருளன், பெரும்பாக்கம் கு. சின்ன மருது, மதுரை முகமது சாப், காரை மா. தேக தாஸ், கபிஸ்தலம் என். வினோத்பாபு.

• 'ஆனந்தன் கற்ற மந்தரம்' படக்கதை தற் பெருமைக்காரக் கலைஞர்களுக்கு ஒரு சவுக்கடி. ஜெயராஜின் படங்கள் அருமை! - வேல்பாளையம் தா. சாதிக்பாட்சா, பவித்திரமாணிக்கம் மா. சுப் பிரமணி, திருப்பூர் வி. லலிதா, புதுகை மா. சிக் கல ராஜன், நரியங்குடி பா. சிவக்குமார், கருமத்தம் பட்டி ஆர். அனிதா ராஜப்பன், திருவண்ணாமலை எஸ். உமாதேவி, சித்தம் பூண்டி கே.சி. சோருபன், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

• பிருந்தாவனக் கவியரங்கம் இயற்கையான சந்த அழகுடன் பாட்டுப்பாட வைத்தது. - லால்குடி கு. சித்னாம்பருக், சாத்தூர் மா. எல்லம்மாள், சென்னி மலை, அண்ணாமலை நகர் வா. சிவ காமி, பூனா மா. தத்தாத்ரேயன், சின்னசேலம் ஆர். பிரசன்னகுமார், கபிஸ்தலம் எஸ். வினோத்பாபு.

பன்னிரண்டே வயது நிறைந்திருந்த அந்தச் சிறுமி லிம்காவின் உலகச் சாதனையாளர் புத்தகத்தில் இடம் பெறுவது உறுதியாகிவிட்டது. வெகு விரைவில் கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடிக்கப் போகிறாள் என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைப் படித்ததும், கோகுலத்திற்காகப் பேட்டி காணப் போனோம்.

சென்னை பரங்கிமலை பகுதியில், இராணுவ அதிகாரிகளின் குடியிருப்பில் சிறுமியின் வீடு. வாகனங்களின் இரைச்சல், மக்கள் நெருக்கடியிலிருந்து விலகி, அமைதியான சூழல். குடும்பமே எங்களை வரவேற்க ஆவலாகக் காத்திருந்தது.

யாரைப் பேட்டி காணப் போனோம் என்பதைக் கூறவில்லையே? ஜலசந்திகளை நீந்திக் கடப்பதில் உலகசாதனை புரிந்துள்ள சிறுமி சவ்வி மதனைத்தான் பேட்டி காணச் சென்றிருந்தோம்.

ஏழு கடல் நீந்திய எட்டாம் வகுப்பு மாணவி!

உலகம் முழுவதும் பரந்துள்ள கடல்களில் எவ்வளவோ ஜலசந்திகள், கால்வாய்கள், தீவுகள் உள்ளன. இவைகளுள், சவாலாக நீந்திக் கடக்கக் கூடியவை என்று ஒரு சில வற்றைத்தான் உலக ஜலசந்தி நீச்சல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஜனவரி முதல் டிசம்பர் முடிய ஓர் ஆண்டில், எத்தனை ஜலசந்திகளை நீந்திக் கடக்கிறார்களோ அதை வைத்து இந்தச் சாதனை, முடிவு செய்யப்படுகிறதாம். ஒவ்வொரு ஜலசந்தியையும் குறிப்பிட்ட சில மாதங்களில்தான் நீந்திக் கடக்க இயலும். அதற்குள் அந்த ஜலசந்தி அமைந்துள்ள நாட்டிற்கு எழுதி, முன் அனுமதி பெற்று, அவர்கள் குறிப்பிடும் நாளில் நீந்திக் கடக்க வேண்டும். இதுதான் மிகப் பெரிய பிரச்னை.

1995 ஆம் ஆண்டில் சவ்வி மதன் நீந்திக் கடந்துள்ள ஜலசந்திகள்;

ஜனவரி 23 ஆம் நாள் நெய்ல் (NEIL) தீவிலிருந்து போர்ட் பிளெய்ர் வரையிலான 33 கி.மீ. தொலைவை, பதினோறு மணி, ஐம்பத்திரண்டு நிமிடம் ஐம்பத்தெட்டு செகண்டுகளில் நீந்திக் கடந்தது.

மார்ச் 28 ஆம் நாள் 32 கி.மீ. நீளமுள்ள பாக் ஜலசந்தியை ஸ்ரீலங்காவின் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு பதினோரு மணி, ஏழு நிமிடங்களில் நீந்திக் கடந்தது.

போஸ் பொரஸ் (BOS PHORUS) கடலை ஆசியாவின் கரையிலிருந்து, ஐரோப்பியக் கரைக்கு (ISTANBUL - TURKEY) ஜூலை 23 ஆம் நாள் ஒரு மணி ஆறு நிமிடங்களில் நீந்தியது.

ஸ்விட்சர்லாந்தில் உள்ள 26.5 மீ. நீள ஜூரிச் ஏரியை ஆகஸ்ட் 5 ஆம் நாள், ரேப்பர்ஸ்வில் (Rapperswill) இருந்து பத்து மணி நாற்பந்தைந்து நிமிடங்களில் நீந்தியது.

28 கி.மீ. நீளமுள்ள ஜிப்ரால்டர் ஜலசந்தியை ஆகஸ்ட் 23 ஆம் நாள் ஐந்து மணி பத்து நிமிடங்களில் ஸ்பெயினிலிருந்து மொரோக்கோ வரை நீந்திக் கடந்தது.

தெற்கு ஹம்டன் (South Humpton) னிலிருந்து Isle of Wight வரையிலான 22 கி.மீ. சாலெண்ட் கால் வாயை (Solent Channel) போகவர ஐந்து மணி இருபத்தேழு நிமிடங்களில் செப் டெம்பர் 5 ஆம் நாள் நீந்திக் கடந்தது.

போக வர 9.5 கி.மீ. நீளமான இத்தாலி சிசிலியில் உள்ள மெஸ்ஸினா (Messina) ஜலசந்தியை செப்டெம்பர் 13 ஆம் நாள் இரண்டு மணி இருபத்தைந்து நிமிடங்களில் நீந்திக் கடந்தது.

Isle of Zannone முதல் Saw Felice Circeo (Italy) வரையிலான 28 கி.மீ. தொலைவை ஒன்பது மணி முப்பது நிமிடங்களில் செப்டெம்பர் 18 ஆம் நாள் நீந்திக் கடந்தது.

ஒரே ஆண்டில் இவ்வளவு ஜலசந்திகள், கால்வாய்களை நீந்திக் கடந்த சாதனையாளர் என்ற பெருமையோடு, மிகச் சிறிய வயதில் இதைச் சாதித்தவள் என்ற சிறப்பும் சிறுமி சவ்வி மதனுக்கு உண்டு.

நாம் போன போது, அப்பொழுதுதான் பயிற்சி முடிந்து வந்திருந்த களைப்பு இருந்த போதிலும், இன்முகத்துடன் வரவேற்றாள் சவ்வி மதன்.

நம்மை அறிமுகப்படுத்திக் கொள்ளு முன்பே, "கோகுலம் பத்திரிகை எனக்கு ஏற்கெனவே தெரியும். குற்றாலீஸ்வரனை அட்டைப்படம் போட்டு எழுதியிருந்தீர்களே? அதுதானே?" என்றாள்.

எங்களுக்குப் பெருமை யாக இருந்தது. குற்றாலீஸ்வரன் அன்று நிகழ்த்திய சாதனையை இப்பொழுது முறியடித்திருக்கும் பெருமைக்கு உரியவள் இந்தச் சிறுமி.

"எத்தனையோ விளையாட்டுகள் இருக்க, நீச்சலைத் தேர்ந்தெடுக்க என்ன காரணம்? உங்க குடும்பத்தில் யாருக்காவது நீச்சலில் ஆர்வம் இருக்கிறதா?" - கேள்வியைத் தொடங்கினோம்.



"அப்படிச் சொல்வதற்கு இல்லை. பொதுவாகவே உடற்பயிற்சி, விளையாட்டில் எல்லோருக்கும் ஆர்வம் உண்டு. எனக்கு பூப்பந்தாட்டம் ரொம்பப் பிடிக்கும். கராத்தே கூடக் கற்றுக் கொண்டேன். பச்சை பெல்ட் கூட வாங்கியிருக்கேன். ஆனால் மிகவும் பிடித்தது நீச்சல்தான். இதில் கூட என்னமாவது வித்தியாசமாகப் பண்ண வேண்டும் என்றுதான் ஜலசந்தி, கால்வாய் நீச்சல்களில் பழக ஆரம்பித்தேன். இன்னும் கேட்டால் இதில் நன்கு பயிற்சி பெற வேண்டும் என்றுதான், தமிழ் நாட்டுக்கு, சென்னைக்குக் குடி வந்தோம்."

"சென்னைக்கு எப்போ வந்தீர்கள்?"

"ஒரு வருஷமாகிறது.. நீச்சலில் பயிற்சியளிப்பதில் நிபுணரான ஆர்.வி. வீரபத்திரன் அவர்களிடம்தான் பயிற்சி பெற்று வருகிறேன். இந்த சாதனைகளெல்லாம் என் வெற்றி என்று எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஆனால் இந்தச் சிறப்பு களின் பெருமைகளுக்கு உரியவர் அவர்தான். அவருடைய வழி காட்டல், பயிற்சி இல்லையென்றால் என்னால் எதுவுமே செய்திருக்க முடியாது. நிகழ்ச்சி நிரல் போட்டுக் கொடுத்து உலகத்தை சுற்றி வந்த பெருமை கூட அவருடைய முயற்சிதான்" - கூறும் போதே சவ்வி மதனின் முகத்தில் நன்றிப் பெருக்கு நிறைந்தது.

"தினமும் பயிற்சி உண்டா?"

"இல்லை. ஒரு நாள் விட்டு ஒரு நாள். காலை ஆறரை மணிக்கு எழுந்தால், எட்டரைக்கு பள்ளிக்குச் செல்லவே சரியாக இருக்கும். திரும்பிவர மாலை ஐந்தரை ஆகிவிடும். பிறகு நீச்சல் பயிற்சி முடித்து விட்டு வந்து, சாப்பிட்டுப் படுக்கவே பத்து மணியாகி விடும்."

சவ்வி மதன் ஐ.ஐ.டியில் உள்ள கேந்திரிய வித்யாலயாவில் ஏட்டாவது படித்து வருகிறாள்.

"படிப்பை சரியாக கவனிக்க முடிகிறதா?"

"கவனித்தாக வேண்டும். இல்லாவிட்டால் சும்மாவிட மாட்

டார்கள்" என்று சிரித்த சிறுமி "என் பள்ளி ஆசிரியர்களையும் பள்ளி முதல்வரையும் நான் கண்டிப்பாக நினைத்தாக வேண்டும். தேர்வு நாட்களில் என்னால் கலந்து கொள்ள முடியாவிட்டால், தனியாக எனக்குத் தேர்வு நடத்துவார்கள். நான் வராதபோது நடந்த பாடங்களை எனக்கு மறுபடி நடத்திப் புரிய வைப்பார்கள். நான் அங்கே படிப்பதைப் பெருமையாக எண்ணி எனக்கு எல்லாம் செய்து வருகிறார்கள். அவர்கள் கண்டிப்பாக இருந்திருந்தால் என்னால் எதுவுமே செய்திருக்க முடியாது" என்றாள்.

கண்களை மூடித் தனது பள்ளி முதல்வர், ஆசிரியப் பெருமக்களை நன்றியுடன் நினைத்துப் பார்த்தாள் சவ்வி மதன்.

"இதே போல், சுருதி, ஸ்வேதா, சில்பா, தினா, திவ்யா, ரஞ்சனி, அபிஷேக், அக்ஷயா போல எண்ணற்ற சிநேகிதிகள் நான் சோர்வடையாதபடி என்னை உற்சாகமூட்டி, சாதனை படைக்கத் தூண்டி வருகிறார்கள். பள்ளிக் கல்வி எனக்குப் பெரும் சுமையாக இருக்காமல் இருப்பதற்கு இவர்களின் அன்பும் உதவியும் பெரிய காரணம்."

"இத்தனை வெளிநாடுகளுக்குப் போயிருக்கிறாயே, அங்கு நடந்த சுவையான நிகழ்ச்சி ஏதாவது கூறேன்?"

சில வினாடிகள் யோசித்த சவ்வி மதன், "நான் ஜிப்ரால்டர் ஜலசந்தியை நீந்த ஸ்பெயினுக்குப் போயிருந்தப்ப, கடல்ல நீந்திப் பயிற்சி பண்ணிட்டிருந்தேன். திடீர்னு பார்த்தா என்னமோ காலைத் தொட்டது. முதல்ல சுறா மீனோன்னு நடுங்கினேன். அப்புறம் பார்த்தா கூட்டமா டால்பின்கள்! பயத்துல நான் சுத்தி அமர்க்களம் பண்ணி பதறியடிச்சு நீந்தினேன். அதை அதுங்க ரொம்ப ரசிச்சது போல இருக்கு. என்னை சுத்தி வந்து விளையாட ஆரம்பிச்சுடுத்துங்க. புதுமையான ஒரு டால்பின் வேடிக்கைக் காட்சியை என்னையறியாமல் நடத்தி விட்டேன்!"

"உன் இலட்சியம் என்ன?"

"இதில் இன்னும் பல உலக சாதனைகளைச் செய்ய வேண்டும். அதோடு எனக்கு மெரின் இஞ்சினியராக ரொம்பவும் ஆசை."



• தம்பியுடன்

"சென்னைக்கு வந்து ஒரு ஆண்டுக்கு மேலாகிறதே, தமிழ் தெரியுமா?"

"மிகவும் கொஞ்சம். சென்னையை, தமிழ்நாட்டை நான் மிகவும் விரும்புகிறேன். இதன் கலைகள் என்னை மிகவும் கவர்ந்து விட்டன."

"இங்கே, வேறு எதுவும் பிடிக்கவில்லையா?"

"ஏன் பிடிக்காமல்? நட்புறவுடன் பழகும் மக்கள், உணவு வகைகள், இனிப்பு எல்லாமே எனக்குப் பிடித்தமானவைதான்."

"ஆமாம். சதாசர்வகாலமும் நீச்சலைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாயே! அம்மா, அப்பா ஒன்றும் சொல்வதில்லையா?

"என்னுடைய நீச்சல் ஆர்வம் இந்த அளவுக்கு வளர்ந்துள்ளதற்குக் காரணமே

என்னுடைய பெற்றோர்கள்தான். அவர்கள் இந்த அளவுக்கு என்னை உற்சாகப் படுத்தவில்லை என்றால் என்னால் எதுவுமே சாதித்திருக்க முடியாது. அம்மாவின் கவனிப்பும், அப்பாவின் அரவணைப்பும் இருப்பது உண்மையிலேயே கிடைப்பதற்கு அரிய பாக்கியம்தான்."

சவ்விமதன் வாங்கியுள்ள கோப்பைகளும், பதக்கங்களும் ஒரு பெரிய மேஜையை அடைத்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றின் விவரங்களையும் அவன் கூறும் போது பிரமிப்பாக இருக்கிறது.

சவ்வி மதனின் அப்பா லெப்டினென்ட் கர்னல் மதன். இராணுவ டாக்டர். மகனின் முன்னேற்றத்தில் அளவில்லாத ஆர்வம் உடையவர். அம்மாவின் கவனிப்பும் இருக்கிறது. கை தேர்ந்த பயிற்சியாளர் இருக்கிறார். நண்பர்கள் ஆசிரியர்களின் அரவணைப்பு, எல்லாவற்றிற்கும் மேல், சவ்வி மதனிடம் நிறைந்துள்ள அளவில்லாத ஈடுபாடு என்று எல்லாம் இருக்கும் போது சவ்வி மதன் உலக சாதனையாளர் பட்டியலில் இடம் பெறுவது பெரிய காரியமாக இருக்காது. இந்த வருங்கால கின்னஸ் சாதனையாளரை, இப்போதே அட்வான்சாகப் பாராட்டி வாழ்த்திவைக்கலாம்.

கோகுலம் வாசகர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள் என்று அவன் எழுதித் தமிழிலும் கையெழுத்திட்டுக் காட்டிய போது முகத்தில் பெருமை ஒளிர்ந்தது.

அட்டை வண்ணப்படம்,
புகைப்படங்கள் : **ராஜு நாராயண்.**

பொருத்துங்கள் – போட்டி முடிவு

அப்பாடியோவ்! எத்தனை பேர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது. கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொட்டு விட்டது! இதில் பாதிக்கு மேல் சரியான விடை எழுதியவர்கள். சரி பார்த்துப் பிரிப்பதற்குள் படாத பாடுபட்டோம்! கடைசியில் குலுக்கல் முறைதான் பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுக்கக் கை கொடுத்தது.

ரூபாய் பதினைந்து
பரிசாகப் பெறுவோர் :

1. எம். முகமது அர்ஷா, காரைக்கால்.
2. பி.ஆர். சரவணன், கொத்தமங்கலம்.
3. மேகா நமருஜன், நாகபுரி, மகாராஷ்டிரா.
4. ஆர். பால்பாண்டி, மதுரை – 14.
5. த. மதன்ராஜ், நெடுங்காடு, காரைக்கால்.
6. ம. மலர்விழி, கரட்டுப்பாளையம், பொள்ளாச்சி.
7. இ. அன்பழகன், ரெட்டியார் பாளையம், புதுவை – 10.
8. எம். கோதை, காஞ்சிபுரம்.
9. B. கிருஷ்ணகுமார், லால்குடி.
10. எஸ். பட்டு சேஷாத்ரி, பூனா – 18. மகாராஷ்ட்ரா.
11. ஜெ. காயத்ரி, மேலூர்.
12. ஜெ. ராணி, செம்பதானிருப்பு போஸ்ட்.
13. என். ராமநாராயணன், சிறுமுகை அஞ்சல்.
14. ச. வெங்கு சங்கரி, திருநெல்வேலி - 11.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

சரியான விடை :

வண்டி – வடி
குழவி – குவி
குதிரை – குரை
தவலை – தலை
தட்டு – தடு
கடல் – கல்
சட்டை – சடை
கிள்ளை – கிளை
(கிளி)

ஒன்றைத் தேடிய புதையல்

புவனாவைக் காணவில்லை என்பதை அறிந்தவுடன் பெரிதும் கலவரமடைந்தவர்கள் டாக்டரும், ரவியும்தான். அவன் என்ன சூழ்நிலையில் இருந்தான் என்பது அவர்

7. அதிர்ச்சி

களுக்குத் தானே தெரியும்? டாக்டரின் மனைவியின் துயரமும், டாக்டரின் பெண் தீபாவின் கவலையும் வேறு கோணத்தில் இருந்தன.

"ஐயோ, என் பெண் எங்கே? உங்களை நம்பித் தானே அவளை அனுப்பினேன் என்று ஈஸ்வரும், ரமாவும் என்னைக் கேட்டால் என்ன பதில் சொல்லுவேன்?" என்று டாக்டரின் மனைவி அழ ஆரம்பித்து விட்டாள்.

"அம்மா, எல்லோரும் உன்னையே பார்க்கிறார்கள். கொஞ்சம் அழுகையை நிறுத்துங்கம்மா. அப்பத்தான் புவனாவைக் கண்டுபிடிக்க ஏதாவது உருப்படியா, யோசனை தோன்றும்" என்று அம்மாவை சமாதானப்படுத்தினாள் தீபா.

"புவனா! புவனா!" என்று தீபா நான்கு பக்கமும் பலமாகக் குரல் கொடுத்தாள்.

இதற்குள், மொழி புரியாவிட்டாலும் என்னவோ அசம்பாவிதம் நடந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டுவிட்ட கூட்டத்தினர், ஆளுக்கு ஒரு மொழியில் அவர்களைக் கேள்வி கேட்க ஆரம்பித்தனர். யோசனை கூறத் தொடங்கினர்.

ரவிதான், பல சுற்றுகள் கொண்ட அந்த மிகப் பெரிய அரண்மனையின் பல



மதிஒளி

பகுதிகளிலும், அத்தனை கூட்டத்திற்கு இடையிலேயும் அதிகப் பதற்றம் இன்றி புகுந்து புகுந்து தேடிவந்தார். புவனாவை எங்கும் காணவில்லை.

உள்ளூர்வாசிகள் சிலர் டாக்டரிடம் வந்து ஆங்கிலத்தில் பேசி விவரம் அறிந்து கொண்டு உதவ முன்வந்தனர்.

"இந்த மாளிகைக்குப் பின்னால் பாதுகாப்பு கண்ட்ரோல் அறை இருக்கிறது. இந்த மாளிகைகளின் எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அவர்களால்தான் கவனிக்கப்பட்டு வருகிறது. உடனே அவர்களிடம் தெரிவியுங்கள். அவர்களால் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும். தாமதிக்காமல் உடனே போங்கள்" என்று அவர்கள் அறிவுரை கூறினார்கள்.

அது சிறந்த யோசனையாகத் தோன்றவே, நால்வரும் பாதுகாப்பு கண்ட்ரோல் அறை இருந்த இடத்துக்கு விரைந்தனர்.



கண்ட்ரோல் அறையில் இருந்த மூத்த அதிகாரி அவர்களை அன்புடன் வரவேற்று விசாரித்தார். டாக்டரின் மனைவியால் எதுவுமே கூற முடியவில்லை. அந்த அளவுக்கு அவர் கவலையால் கலங்கிப் போயிருந்தார். டாக்டரும், ரவியும், தீபாவும்தான் மாறி மாறி அதிகாரிக்கு விஷயத்தைப் புரிய வைத்தனர்.

"என்ன உடை போட்டிருந்தாள்?"

"நான் போட்டிருப்பது போன்ற பாவாடையும் சட்டையும்தான். இரட்டைப் பின்னல்" என்று தீபா விளக்கினாள். அதோடு, ஜெய்ப்பூரில் எடுத்த புகைப் படங்களை எடுத்து, புவனாவை அடையாளமும் காட்டினாள்.

"இந்தக் காலத்தில் பெரியவர்களை விடச் சிறுமிகள்தான் தெளிவாக இருக்கிறார்கள்," என்று தீபாவைப் பாராட்டிய அதிகாரி, "நானும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்தான். இங்கே போட்டிருக்கிறார்கள். இங்கே பயப்பட அவசியமே இல்லை. காரணம் அந்த அளவுக்குப் பக்காவாக



பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறோம். கையில் புகைப்படம் வேற இருக்கு. கவலையே வேண்டாம். எங்களை மீறி இங்கே எதுவும் நடந்து விடாது. இன்னும் அரைமணியில் புவனாவை உங்கள் முன் கொண்டு வந்து நிற்க வைக் கிறேன்" என்று சிரித்தார்.

ஒயர்லெஸ் படபடத்தது. செய்திகள் பறந்தன. பதில் செய்திகள் வர ஆரம்பித் தன.

நால்வருக்கும் ஆரஞ்சு கிரஷ் வந்தது. தங்கள் சுமையைப் பொறுப்பான ஓர் அதி காரியிடம் ஒப்படைத்து விட்டோம் என்ற நினைப்பும், பெரிய அதிகாரி தமிழில் பேசி ஆறுதல் கூறியதும் நால்வருக்கும் இதமாக இருந்தது.

அந்த மாளிகையை வேடிக்கை பார்க்க வந்து வழிதவறி பிரிந்து வந்திருந்த பல முதியோர், குழந்தைகளை காவல் பணி யாளர்கள் அழைத்து வந்து ஒப்படைத் ததையும், குழந்தைகள் பெற்றோர்களைத் தவறவிட்டுக் கவலையோடு வந்தவர்



''இனிமே சூரியகிரகணம் எப்ப வரும்?''

''எதுக்குக் கேக்கறே?''

''இன்னொரு நாள் 'லீவு' கிடைக்குமே!'

— பாளை பசும்பொன்

களையும் வேடிக்கை பார்த்தபடி நால்வரும் தங்கள் கவலையை மறந்து இருந்தனர்.

நேரம் ஓடியது.

ஒரு போலீஸ் வேன் வந்து வேகமாக நின்றது. அதிலிருந்து நான்கு போலீஸ் அதிகாரிகள் இறங்கினார்கள். கூடவே இரண்டு முரடர்களை விலங்கிட்டு இழுத்துக் கொண்டு வந்தார்கள். கடைசியாக, இவர்கள் வந்த டாக்ஸி டிரைவரும், அழுது களைத்துப் போன முகத்தோடு புவனாவும் இறங்கினார்கள். உயிரே திரும்ப வந்தது போலப் பாய்ந்து ஓடி வாரி அணைத்தாள் டாக்டரின் மனைவி.

வந்திருந்த போலீஸ் அதிகாரிகளில் ஒருவர் தங்கள் மேலதிகாரிக்குச் சொன்னார் : ''இந்தச் சிறுமியைக் காப்பாற்றிக் கொண்டு வர ரொம்பவும் உதவியாக இருந்தது இந்த டாக்ஸி டிரைவர்தான் சார்... இவருடைய டாக்ஸியிலேதான் இந்த ஃபேமிலி காலையில் வந்திருப்பாங்க போலிருக்கு.. இந்த இரண்டு முரடர்களும் இந்தச் சிறுமியைக் கடத்திக்கிட்டு வெளியே வந்தப்ப இந்த டிரைவர்தான் பார்த்திருக்கார்... சிறுமியை அடையாளம் தெரிஞ்சதினாலே சந்தேகப்பட்டு, உடனே ஓடிவந்து எங்ககிட்டே சொன்னதாலே தான் எங்களால இவனுங்களைப் பிடிக்க முடிஞ்சுது. சிறுமியையும் மீட்க முடிஞ்சுது...''

எல்லோரும் கண்ணீர் மல்க டிரைவருக்கு நன்றி சொன்னார்கள்.

''இங்கே எங்களுடன்தானே க்யூவில் நின்னுக்கிட்டு இருந்தே! எப்படி இவங்களோட போனே?'' என்று கேட்டார் டாக்டர்.

''இங்கேயேதான் இருந்தேன். அந்த சோபா ஊஞ்சலை மறுபடி பார்க்கணும் போல இருந்தது. அதனால அங்கே போனேன். அப்படியே அதைச் சுத்திச் சுத்தி வந்து பார்த்துக் கொண்டிருந்தேன். சட்டென்று வழிதவறிப் போச்சு. நீங்கள் இருந்த இடத்துக்கு வரதுக்குப் பதில், எதிராகப் போக ஆரம்பிச்சேன். அப்பத்தான் இந்த இருவரும் வந்து, ''இங்கே யாரும்மா புவனா?'' என்று கேட்டார்கள். நான்தான்னு சொன்னேன். உங்கப்பாவிடம் இருந்து போன் வந்திருக்கு. உடனே உன்னோடு பேசணுமாம். வா'' என்று கூப்பிட்டார்கள். அவர்கள் தமிழில் பேசியதும், என் பெயரைக் கூறியதும் நான் நம்பிவிட்டேன். இருந்தும் என்னோட வந்தவங்க எல்லாம் எங்கே இருக்காங்கன்னு கேட்டேன். எங்ககிட்டதான் இருக்காங்க. வந்தாப் பார்க்கலாம். உன்னைக் காணாம அவங்க தவிச்சுக்கிட்டு இருக்காங்க'' என்றார்கள். எனக்கு ஏற்பட்ட கொஞ்சநஞ்ச சந்தேகமும் போய் விட்டது. உடனே அவங்களோடு கிளம்பிப் போய்விட்டேன். பாதி தூரம் போனதும்தான் எனக்குப் பயம் ஏற்பட்டது. சந்தேகமும் ஏற்பட்டது. எப்படியோ என் பெயரும் மற்ற விவரங்களும் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் என்னை ஏமாற்றுகிறார்கள். அவர்கள் கூறுவது பொய். எதற்காகவோ என்னைக் கடத்திச் செல்ல பொய் கூறுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். மனதுக்குள் இருந்த பயத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. போலீஸ்காரர்கள் யாராவது தென்படு



இறார்களா என்று கவனித்துக் கொண்டே அவர்களுடன் நடந்தேன். அப்போதான் டாக்ஸி டிரைவரும் என்னைப் பார்த்தார். பிறகு நடந்ததுதான் உங்களுக்கே தெரியுமே?'' என்றாள் புவனா.

எல்லோருமே, அந்த முரடர்கள் புவனாவைக் கடத்திச் சென்றதற்கு, அவள் கழுத்தில் கிடந்த தங்கச் சங்கிலியும் காதில் போட்டிருந்த கம்மலும்தான் காரணமாக இருக்கலாம்... அல்லது குழந்தை பிடிக்கும் எண்ணமாக இருக்கலாம் என்றுதான் ஊகித்தார்கள். ஆனால் ரவிக்கும் டாக்டருக்கும் மட்டும் அந்த இருமுரடர்களையும் எங்கேயோ ஏற்கெனவே பார்த்தது போல் இருந்தது. திரும்பத் திரும்ப யோசித்தனர்.

சட்டென்று ரவிக்கு நினைப்பு வந்தது. ஆம்... அவர்களை சென்னையில் டாக்டரின் கிளினிக்கில் பார்த்தது அவரது நினைவுக்கு வந்துவிட்டது! தங்களைத் தொடர்ந்து வந்து புவனாவை அவர்கள் கடத்த முயன்றதற்கு நகைகள் காரணமில்லை. வேறு ஏதோ மர்மமான காரணம் இருக்க வேண்டும் என்பதைச் சரியாக ஊகித்தார் அவர்.

தனது சந்தேகத்தை டாக்டரிடமும், இரகசியமாகக் கூறினார் ரவி. டாக்டர் உடனே சுறுசுறுப்பானார். தீபாவையும், தன் மனைவியையும் புவனாவையும் பாதுகாப்பு அறைக்கு ஓய்வெடுக்க அனுப்பி வைத்தார்.

இதற்குள் அதிகாரிகள் முரடர்களிடம் தீவிரமான விசாரணையைத் துவக்கினார்கள். வெகு நேர முயற்சிக்குப் பிறகு அந்த முரடர்களில் ஒருவன் வாய் திறந்து பேச ஆரம்பித்தான்...

"இந்தச் சிறுமி புவனா, அம்மா அப்பா இல்லாத அனாதை."

டாக்டரும், ரவியும் அதிர்ந்து போய் நின்றனர்!

(தொடரும்)




Photo : RAJU

கமலம் போட்ட சபதம்!

அமைப்பு: ரே

ஓவியம்: கரோ






வயல் வெளிகளில் ...
நாற்று நட்டு ஏலேலோ...
களை எடுத்து ஏலேலோ ...
காவலர்கள் வந்து ...
பாட்டா பாடுகிறீர்கள்? கட்டுங்க வரியை ....
வேலையின் களைப்புத் தெரியாமல் இருக்கப் பாடுகிறோம். இதுக்கும் வரியா?
இதுவும் பாட்டுத்தானே? ...
வரி கட்டிட்டுப் பாடுங்க. இல்லே, பாடாம வேலை பண்ணுங்க ...
ரெண்டும் முடியாது. வேற இராஜ்ஜியம் போகலாம் ...
கையில உழைப்பு இருக்கு. எங்கேயும் பிழைக்கலாம். இந்தக் கோமாளி அரசை விட எதுவும் மேல் ...
கிளம்புங்க!
உழுவோர் இன்றி நிலம் வறண்டது. விளைச்சல் குறைந்தது ...


சிங்கபுரியில் மாந்தோப்பில் ஒரு சுட்டிப் பெண். பெயர் கமலம்...
கமலம் அதிபுத்திசாலி. மிக மிக அழகானவள்...
அவள் தந்தை வேலு, ஏழை விறகு வெட்டி...
கமலம் அருமையாகப் பாடுவாள்...
கடல் கடைந்த மாயன் கண்ணன் உண்ட வெண்ணெய்....
ஒரு நாள் தயிர் கடையும் போது கமலம் பாடினாள்...
அந்த வழியாக வந்த கோமாளி ராஜா...
ரதத்தை நிறுத்து. பாடறவங்களைக் கைது பண்ணிக்-கிட்டு வாங்க...
காவலர்கள் கமலத்தை இழுத்து வர...
நீயா பாடினே? வரி கட்டி இருக்கியா?...




இல்லே...
அப்போ இனிமே பாடாதே, போ! இந்தமுறை மன்னிச்சிடறேன். போ, போ...
என்னால பாடாம இருக்க முடியாது. வரி கட்டவும் வசதி இல்லே...
அப்ப ஜெயில்ல தள்ளிடுவாங்களோ!...
பாடாம வெளில இருப்பதும், சிறைக்குள் இருப்பதும் ஒண்ணுதான்...
உன் பெயர் என்ன பெண்ணே?...
கமலம்!
அழகுக்கு ஏத்த பெயர். புத்திசாலி!
நீ மனசு வைச்சா இந்த வரியை எடுத்துடலாம்!
புரியலையே!...
உனக்கா புரியாது? என்னை மணந்தா வரியையே விலக்கிடறேன். பட்டத்து ராணியா வாழலாம்!...
ஒரு கோமாளிக்கு பட்டத்து ராணியாவதை விட எருமையை மணக்கலாம்!...
இரு, இரு. உன்னை எருமைக்கே கல்யாணம் பண்ணி வைக்கிறேன்...



ஒரு நாள் சரியான அடைமழை...
மழைக்கு ஒதுங்க இடம் தேடி வேலு ஓடி வந்தான்...
மரத்தடியில் அரசரின் காலிப் பல்லக்கு...
...செப்பனிட வந்திருந்தது...
ஓடிவந்த வேலு...
!
...பல்லக்கில் உட்கார்ந்து கொண்டான்...
காவலர்கள் ஓடிவந்து பிடித்துக் கொண்டனர்...
டேய்...
ராஜாவிடம் கொண்டு போனார்கள்...
மன்னனின் பல்லக்கில் ஏறுவது கடுமையான குற்றம் தெரியுமா?...
...கொலைத் தண்டனை தரக் கூடிய குற்றம்!...
மன்னியுங்கள் அரசே! தெரியாது செய்து விட்டேன்...



மன்னவா, இவர்வேறு யாருமில்லை. அந்த மாங்-தோப்புப் பெண்ணின் அப்பா-தான்!
அப்படியா? அந்த மகா வாயாடி கமலத்தின் அப்பாவா?...
...அப்போ இன்னும் கடுமையான தண்டனை தரலாம்...
ராஜாவே, கருணை காட்டுங்கள்...
சரி, கருணை காட்டுகிறேன். ஒரு நிபந்தனை...
சொல்லுங்கள் அரசே!
உன் வீட்டுக்கு வருவேன். எதைத் தொடுகி-றேனோ...
...அது எனக்கே சொந்தம். கையோடு கொண்டு வந்து விடுவேன். சம்மதமா?...
என் வீடு பரம ஏழை வீடு. ராஜாவான நீங்கள் தொடும்படி அங்கே உயர்ந்த பொருள் எதுவும் இருக்காதே மன்னவா?...
இந்த சாக்கு-போக்கு வேண்டாம். என்ன கூறுகிறாய்?
எனக்குப் பூரண சம்மதம் அரசே...




சரி, இதை அப்படியே எழுதிக் கொடு! ...
வேலு எழுதிக் கையெழுத்திட்டான்...
சரி, வீட்டுக்குப் போங்கள். இன்னும் சிறிது நேரத்தில் நான் வருகிறேன்...
வேலு, கமலத்திடம் நடந்ததைக் கூறினான்...
மோசம் போய் விட்டீர்களே அப்பா!
ஏம்மா! என்ன மோசம்?
"கோமாளிக்கு பட்டத்து ராணியாவதை விட எருமையை மணக்கலாம்"னு சொன்னேன்... உன்னை எருமைக்கே கல்யாணம் பண்ணி வைக்கறேன்னு ராஜா சொன்னார்...
அந்த முட்டாள் ராஜாவுக்கு என்னை மணக்க ஆசை... என்னிடமே கேட்டார்...
அதுக்கும் இதுக்கும் என்னம்மா சம்பந்தம்?
முட்டாள் ராஜாவா இருந்தாலும் புத்திசாலித்தனமா இப்போ உங்ககிட்டே எழுதி வாங்கியிருக்கார்...
இருக்கட்டுமே! அவரால் என்ன பண்ண முடியும்?...



நேராக வீட்டுக்குள் வரப் போகிறார். என் கையைத் தொடப் போகிறார், கூட்டிக் கொண்டு போகப் போகிறார்...
ஐயையோ... இது எனக்குத் தோணற-வில்லையே! இப்போ என்னம்மா பண்றது?...
... நானே உனக்கு சதிகாரனா ஆயிட்டே-னேம்மா...!
இப்போ கூட ராஜாவை முட்டாளாக்க முடியும்! ஆனால் நீங்க மிகவும் கவனமா நடந்துக்-கணும்...
சொல்லும்மா, பண்றேன்!
நம்ம வீட்டுப் பரண் மேலே ஏறிக்கறேன். தோட்டத்துல இருக்கிற தேஞ்ச ஏணியைக் கொண்டு வந்து பரண் மேல சாத்தி வையுங்க...
அந்த ஏணியையா? தொட்டா ஒடிஞ்சு சாயுமே?
ஆமாம்! நான் பரண்ல ஏறிக் கொண்ட-தும், அதைக் கொண்டு வந்து சாத்தி வையுங்க, அது போதும்!...


சரிம்மா... அப்படியே செய்யறேன்!...
ராஜா அமர்க்களமாக வந்தார்...
வாங்க, மகாராஜா!....
...ஏழையின் வீட்டுக்கு நீங்க வர நாங்க கொடுத்து வைச்சிருக்-கணும்...
எங்கே, அந்த வாயாடி கமலம்?
ராஜாவே, நான் பரண் மேல இருக்கேன்!...
நான் தொட்டுப்போவது உன்னைத்தான்னு புரிஞ்சு, ஒளிஞ்சுக்-கிட்டயா, பயந்தாங் கொள்ளி......
நான் ஏன் பயப்பட-ணும்?...



... பயப்படற-வளா இருந்தா இப்படி பதில் சொல்ல மாட்டேன் ...
இரு, ஏணியில் ஏறி உன்னைத் தொட்டு, என்னோட கூட்டிக்கிட்டுப் போய், எருமைக்குக் கல்யாணம் பண்ணி வைக்கப் போறேன் ...
ஐயோ, பாவம்!
ராஜா ஏற...
ஏணி உடைய...
படீர்...
ராஜா நிலைகுலைந்து ...
... ஏணியைப் பிடித்து விட்டார்...



நாடோடிக் கதையின் தழுவல்.

முற்றும்.

பிருந்தாவனக் கவியரங்கம்



காந்தி சொல்கிறார்!

கண்ணா இங்கே வந்துபார்
காந்தித் தா த்தா நிற்கிறார்.
கனிவு பொங்கப் பார்க்கிறார்
கள்ளம் இன்றச் சிரிக்கிறார்.

உன்னை என்னைப் பார்த்ததும்
உண்மை பேசு என்கிறார்.
என்றும் வாழ்வில் உயரவே
எளிமை வேண்டும் என்கிறார்.

நெஞ்சில் நேர்மை இருந்திடில்
நடக்கும் நல்லது என்கிறார்.
அஞ்சத் தேவை இல்லையே
அறிவீர் இதனை என்கிறார்.

— சு. கண்ணகி, மிட்டூர்.

கைவீசம்மா!

கை வீசம்மா கைவீசு
கல்வி கற்போம் கைவீசு.

ஒன்றாய் படிப்போம் கைவீசு.
ஒன்றே தேசம் கைவீசு.

சங்கத் தமிழே கைவீசு
சிரித்து வாழ்வோம் கைவீசு

அழகுச் சிலையே கைவீசு
அன்பை விதைப்போம் கைவீசு.

நந்த வனமே கைவீசு
நந்தா விளக்கே கைவீசு!

— வி.ஆர். பாலசங்கர், வரம்பியம்





புத்தகம் அழகுப் புத்தகம்
புதுமை நிறைந்த புத்தகம்

சிறுவர் விரும்பும் புத்தகம்
சிரித்து மகிழும் புத்தகம்

அன்பை வளர்க்கும் புத்தகம்
அறிவை ஊட்டும் புத்தகம்

படிக்கத் தூண்டும் புத்தகம்
படங்கள் நிறைந்த புத்தகம்

கண்ணைக் கவரும் புத்தகம்
கருத்துக் களஞ்சியம் புத்தகம்

எனக்குப் பிடித்த புத்தகம்
எல்லாம் நிறைந்த புத்தகம்!

— இர. சிவராஜ், அனந்தபுரம்

பிருந்தாவனக் கவியரங்கம்

தமிழ்நாடு

எங்கள் நாடு தமிழ்நாடு
என்றும் உயரப் பாடுபடு.

புஞ்செய் நஞ்செய் பயிர்விளையும்
புகழுக் குரியது தமழ்நாடு.


சேர சோழ பாண்டியர்கள்
சிறப்புடன் ஆண்டது தமிழ்நாடு.

பண்டை காலக் கோயில்கள்
பலவும் இருப்பது தமிழ்நாடு.

இந்திய நாட்டின் திருவடியாய்
இருப்பது எங்கள் தமிழ்நாடு.

— எம். முகம்மது உசேன்,
மேல்கரைப்பட்டி





ஆசான்

எங்கள் வகுப்பு ஆசிரியர்
என்றும் மாறா அன்புடையார்.

சிரித்து வைத்தே மகிழ்வித்து
சிறப்பாய் பாடம் நடத்திடுவார்.

கலைகள் எல்லாம் கற்பிப்பார்
கதைகள் கூறி மகிழ்விப்பார்.

ஐயம் எத்தனை கேட்டாலும்
அன்பாய் புரிய வைத்திடுவார்.

வாய்மை கடமை மறவாது
வாழ்ந்திடத் தூண்டும் பண்பாளர்.

இரக்கம் எளிமை கடைப்பிடித்து
எங்களை உயர்த்தும் குருநாதர்.

— பி. சரவணமுத்து, பொன்புதுப்பட்டி

வாழ்ந்திடு!

எறும்பைப் போல உழைத்திடு
குணத்தில்
கரும்பைப் போல இனித்திடு.

மானைப் போலத் துள்ளிடு - வாழ்வில்
மலையைப் போல உயர்ந்திடு.

முயலைப் போலக் குதித்திடு - உழைப்பில்
முயற்சி கொண்டு நடந்திடு.


குயிலைப் போலக் கூவிடு - செயலில்
குற்றம் இன்றி வாழ்ந்திடு

— என்.ஜி. கிருஷ்ணன், தூத்துக்குடி



பிருந்தாவனக் கவியரங்கம்

எங்கள் பாப்பா!



எங்கள் சின்னப் பாப்பா
என்னைப் பார்த்தா சிரிப்பா.

கடவுள் தந்த பாப்பா
கட்டித் தங்க பாப்பா.

தத்தித் தத்தி நடப்பாள்
தடுக்கி விழுந்து எழுவாள்.


பசி எடுத்தா அழுவாள்
பால் கொடுத்தா சிரிப்பாள்.

பாப்பா செய்யும் குறும்பு
பார்க்கப் பார்க்க சிரிப்பு

எனக்கு மிகவும் பிடிக்கும்
எங்கள் தங்கப் பாப்பா.

ஆர். முகம்மது மியான்தத்,
சென்னை - 40.

பிருந்தாவனக் கவியரங்கம்



நாட்காட்டி


நாளைக் காட்டும் நாட்காட்டி
நமக்கு நல்ல வழிகாட்டி
நாளும் கூடும் வயதினையே
நினைவு படுத்தும் நாட்காட்டி!

நல்ல கெட்ட நேரங்களை
நன்கு சொல்லும் நாட்காட்டி
எல்லாப் பண்டிகை நாட்களையும்
எடுத்துக் காட்டும் நாட்காட்டி.

தினமும் செய்யும் பணிகளையே
தெளிவாய் எழுதத் தூண்டிடுமாம்
வீணே கழித்த காலத்தை
விளக்கி மாற்றிட வைத்திடுமாம்!

பொன். குமார், சேலம் - 6

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டியில் வெளியிடத்
தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டிக் கதை — 5



சிறுவர் இலக்கியத்தில் கற்பனை என்பது உயிரோட்டமுள்ள, இன்றியமையாத பகுதி. நடக்காத ஒன்றை, நடப்பதாகக் கற்பனை செய்வது எத்தனை சுவையானது! அறிவியல் வளர்ச்சி காரணமாக, இன்று நடக்க இயலாதவை என்று கருதப்படுபவை நாளைக்கு நடக்கக் கூடியவையாக மாறிவிடுகின்றன! அப்படிப் பட்ட ஒரு கற்பனைக் கதைதான் இது. படிக்க எவ்வளவு சுவையாக இருக்கிறது!

கி.பி. 2265. பூமியெங்கும் இயந்திரமயம். எங்கு பார்த்தாலும் ஒரே கம்ப்யூட்டர் மயம். ஆனாலும் அமைதியான யுகம்; பரபரப்பில்லாத யுகம்.

2266 ஜூலை 14. பாகிஸ்தான்.

இது நடந்தால்!

நிசப்தமான இரவு. மக்கள் அனைவரும் இன்னும் சற்று நேரத்தில் அழியப் போகிறோம் என்ற நினைப்பில்லாமல் ஆழ்ந்து, அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தனர். நேரம் 1.50. திடீரென்று கொடூரமான பயங்கரமான இரைச்சல்! அது படிப்படியாக சற்று நேரத்தில் அடங்கியது. அதைத் தொடர்ந்து ஊரெங்கும் தீப்பற்றி எரிந்தது! மக்கள் அழுகுரல். அதுவும் சில வினாடிகளில் குறைய அங்குள்ள கட்டடங்கள் யாவும் ஆடி ஆடி நொறுங்கின. ஊரே சலனமின்றி ஒரு பயிர் பூண்டு மரம் கூட மிச்சம் இன்றி கூண்டோடு அழிந்தது. இவையெல்லாமே பத்தே வினாடிகளில் நிகழ்ந்து முடிந்து விட்டன!

ஒருசில மணி நேரத்தில் இந்தச் செய்தி உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. சர்வதேச நாட்டு விஞ்ஞானிகள் விரைந்து வந்து ஒன்றுகூடி அழிந்து போன இடங்களைப் பார்வையிட்டனர். பின் உயிர்ச்சேதம் பொருட்சேதம் போன்ற வழக்கமான விவரங்கள் எடுக்கப்பட்டன. எல்லாமே இப்படி ஒரு சில வினாடிகளில் அழிந்து மறைய என்ன காரணம் என்பதை அறியப் படாதபாடுபட்டனர். அவர்களால் எந்த ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. எல்லாமே படுகுழப்பம்! ஏதோ பூகம்பம் ஏற்பட்டுத்தான் அழிந்து விட்டது என்று சொல்லி ஓர் அறிக்கையைத் தயாரித்துக் கையெழுத்திட்டனர், தலைமை அலுவலகத்தில் சேர்த்தனர். அதுவும்கூட ஒரு மூலையில் வழக்கப்படி வைக்கப்பட்டது. சில நாட்களிலேயே விஷயம் மெல்ல மெல்ல மறந்து போனது.

ஆர். புஷ்பராஜ்

2267. ஏப்ரல் 11. இடம் ருஷ்யா (மாஸ்கோ). மீண்டும் இதே போல் நிகழ்ந்தது. விஞ்ஞானிகள் மீண்டும் திரண்டு வந்து ஆராய்ந்தனர். பூகம்பம்தான்

ஏற்பட்டு விட்டது என்று முடிவு செய்து முன்செய்தது போலவே அறிக்கை, புகைப் படங்கள் ஆகியவற்றைத் தயாரித்தனர். அதுவும் கூட வழக்கப்படியே ஒரு மூலையில் வைக்கப்பட்டது.



2267. ஆகஸ்டு 15. சீனா. மீண்டும் இதே போன்ற பேரழிவு. சீனாவும் அழிந்தது. உலகமெல்லாம் பீதி பரவியது. அமைதியாக வாழ்ந்த மக்கள் மனத்தில் பயம் குடி கொண்டது. எந்த நேரத்தில் எந்த நாடு அழியுமோ என்ற அச்சம், எல்லோர் மனத்திலும் கலக்கத்தை ஏற்படுத்தியது.

மக்களிடம் இருந்த பீதியும் கலக்கமும் விஞ்ஞானிகளுக்குப் பெரிய சவாலாக இருந்தது. அவர்கள் அனைவரும் 2267 ஆகஸ்டு 20 ஆம் நாள் ஒன்றுகூடி விவாதித்தனர். இது பூகம்பம்தானா? இல்லை வேறு தீயசக்திகள் காரணமா என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அவர்களிடம் இருந்த நவீன கருவிகள் எல்லாம் முன்னுக்குப் பின் முரணான தகவல்களைத் தந்தன! விஞ்ஞானிகளுக்குப் பைத்தியம் பிடிக்காத குறைதான்!

கடைசியாக ஒருவர், "இப் பிரச்னைக்குத் தீர்வு காண்பது நம் கையில் இல்லை. ராஜ்சாஜ் சகோதரர்களின் ஒத்துழைப்பு இருந்தால் இதில் ஏதாவது கண்டுபிடிக்க முடியும். அவர்களால் மட்டுமே இப் பிரச்னையைத் தீர்த்து வைக்க முடியும்" என்று கூறினார். எல்லோருக்குமே இந்த எண்ணம் இருந்தாலும் வெளிப்படையாகக் கூறத் தயங்கினர். ஒருவர் துணிந்து கூறவே எல்லோரும் வரவேற்றனர்.

அன்றுதான் தங்கள் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு ராஜ், சாஜ் பூமிக்குத் திரும்பியிருந்தார்கள். வியாழன் கிரகத்தை ஆய்வு செய்து முடிவுகளைக் கொண்டு வந்திருந்தனர். துடிப்பு மிக்க இளம் விஞ்ஞானிகளான இருவரும்

சகோதரர்கள். அறிவியல் துறையில் பல சாதனைகளைப் புரிந்திருந்தனர்.

"என்ன ராஜ், அதென்ன கையில்? ஏன் சோகமா இருக்கே?" என்று கேட்டான் சாஜ்.


ராஜ் பதில் சொல்லாமல் கடிதத்தை அவனிடம் நீட்ட சாஜ் அதை வாங்கிப் படித்தான்; திடுக்கிட்டான்.

"என்னடா இது! இதுவரை மூன்று நாடுகள் அழிந்துள்ளனவா! இந்த விஞ்ஞானிகள் என்ன பண்ணினார்கள்? அதற்கான காரணம் என்னன்னு இன்னுமா கண்டுபிடிக்கவில்லை? வெட்கக்கேடு!" என்றான் சாஜ்.

"அதைக் கண்டுபிடிக்கறதுக்காகத்தான் நம்மை வரச் சொல்லித் தலைமை அலுவலகத்திலிருந்து தகவல் வந்திருக்கு."

''ஏற்கெனவே ஒரு தொல்லையை முடிச்சிட்டு இப்பத்தான் பூமியில் காலை வைச்சிருக்கோம். வந்து முழுசா நாலு நாள் கூட ஆகலை. அதுக்குள்ளே இன்னொரு வேலையா?'' என்று சலித்துக் கொண்டான் சாஜ்.

இருப்பினும், இது உலகப் பிரச்னை என்பதால் பொறுப்பை ஏற்று இருவரும் ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.



தலைமைச் செயலகம். இருவரும் மூலையில் கிடந்த பழைய அறிக்கைகளை தூசு தட்டி எடுத்துப் பார்த்தனர். விஞ்ஞானிகள் அணி அவர்களுக்குத் தாங்கள் எடுத்த பல புகைப்படங்களைப் போட்டுக் காட்டினர். அவைகளைப் பார்த்துக் கொண்ட வந்த போது, ஒரு படம் ராஜின் கவனத்தைக் கவர்ந்தது. மறுபடி போடப் பணித்தான். உற்றுப் பார்த்தான். அவன் மூளையில் பொறிதட்டியது. படத்தை குளோசப்பில் காட்டுமாறு சொன்னான். குளோசப்பில் பெரிய பெரிய கால் தடங்கள் இலேசாகத் தெரிந்தன! தங்கள் கண்களுக்கு எப்படி அவை தப்பின என்று விஞ்ஞானிகள் திகைத்தனர். ஒருவேளை இதற்கும் இந்த அழிவிற்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று எண்ணினான் ராஜ். இருவரும் ஆராய்ச்சியில் இறங்கினர்.

2267 செப்டெம்பர் 20. கனடா இதே போல நொடிக்கணக்கில் அழிந்து போனது. ராஜ் சாஜ் இருவருக்கும் கூட மனத்தில் கலக்கம் ஏற்பட்டது. உடனடியாக முயன்று ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவர்கள் பரபரத்தனர். கானடா சென்று அழிந்து போன இடத்தைப் பார்வையிட்டனர். சாஜ் திடீரென்று நின்றான்.

“ஹேய் ராஜ்! இங்கே வாயேன்” என்றான். ராஜ் போனான்.

“இங்கே பார்,” என்று ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டினான் சாஜ். அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் இருந்த பொருளை ராஜ் எடுத்துப் பார்த்தான். அது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் தெரிந்தது, அது ஏதோ ஓர் உருவத்தின் ஒரு உடல் பகுதி என்று.

“சரி, கம்ப்யூட்டரில் கொடுத்து உருவத்தை வரைவதற்கு ஏற்பாடு பண்ணுவோம்” என்றான் ராஜ்.

கம்ப்யூட்டர் வரைந்த உருவத்தைப் பார்த்து அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். ஏனெனில் அது கொடூர முகத் தோற்றம் கொண்ட தலையில் இரண்டு கொம்புகளுடைய ஓர் இயந்திர மனிதன்!

''பார்த்தா பூலோகவாசி மாதிரி இல்லை. ஏதோ வேற்றுகிரகவாசி மாதிரி தெரியுது. ஒருவேளை இவனுக்கும் இந்த அழிவுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோன்னு நெனைக்கிறேன்'' என்றான் ராஜ்.

இருவரும் மீண்டும் ஆராய்ச்சியில் ஆழ்ந்தனர்.

தகவல்களைத் திரட்டிக் கொண்டு மேலும் ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்தத் தங்கள் தாய்நாடான இந்தியாவிற்கு இருவரும் திரும்பினர். அப்படியே ராஜஸ்தானுக்கும் சென்றனர்.

இரவு மணி 01.50. ஏதோ இரைச்சல் கேட்க, கண் விழித்த ராஜ் வெளியில வந்து பார்த்தான். தூரத்தில் ஊர் தீப்பற்றி எரிவது தெரிந்தது. சில நொடிகளில் கட்டிடங்கள் எல்லாம் தரைமட்டமாயின! வெலவெலத்துப் போன ராஜ் உறங்கிக் கொண்டிருந்த சாஜை எழுப்பி விஷயத்தைச் சொல்ல இருவரும் அரக்கப் பரக்க வெளியில் வந்து பார்த்தனர். அதற்குள் ஊரே அழிந்து போயிருந்தது.

எத்தேசையாக வானத்தைப் பார்த்த சாஜ் “ஹேய் ராஜ், அதோ வானத்தைப் பாரேன்” என்றான். ராஜ் பார்த்தான்.

வானவெளியில் சில உருவங்கள் பறந்து விரைந்து கொண்டிருந்தன. அவை... சந்தேகமே இல்லை. கம்ப்யூட்டர் வரைந்து கொடுத்த அதே உருவங்களே!

“இந்த அழிவுகளுக்கெல்லாம் காரணம் இவர்கள்தான். இவர்கள் வெள்ளி கிரகத்தைச் சார்ந்தவர்கள்” என்றான் ராஜ்.

இருவரும் ஜப்பானுக்குத் தகவல் தெரிவித்தார்கள். உலக விஞ்ஞானிகள் அங்கேதான் குழுமியிருந்தனர். அவர்கள் உடனுக்குடன் இவர்களுக்குத் தேவையான விண்



''என்ஜின் இல்லாத லாரி எந்த லாரி?''

''தெரியலையே?''

''பல்'லாரி'. ''

– எம். எம். தேவதாசன்,
சொக்கம்பட்டி.

"கொடுக்கு இல்லாம கொட்டும், என்ன தெரியுமா?"

"தெரியாது. நீயே சொல்லு!"

"மழைதான்!"

– எஸ். தட்சணாமூர்த்தி.



வெளிக்கலம், லேசர் துப்பாக்கிகள் மற்றும் தகவல் தொடர்புக் கருவிகளைத் தயாரித்தனர். உடனே கிளம்பும்படி இருவரையும் வேண்டினர். விஞ்ஞானிகள் அனைவரும் வாழ்த்தினார்கள்.

விஞ்ஞானிகளின் தலைவர், "ராஜ் சாஜ். உங்கள் பணியை வெற்றிகரமாக முடித்து உலகிற்கு ஏற்பட இருக்கும் அபாயத்தைப் போக்குவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்" என்றார். 'பெஸ்ட் ஆஃப் லக்' என்று மற்றவர்கள் வாழ்த்த விண்வெளிக்கலம் வெள்ளி கிரகத்தை நோக்கிப் பறந்தது.

அதே நேரம் வெள்ளி கிரகவாசிகள் தங்கள் திட்டம் நிறைவேறிய மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். தலைவன் அவர்கள் மொழியில் "ஜஹோ! ஜஹோ. அச் ஹை ஆம் கர்த்தா ஆஜ் ஜுந்து காம்." (வெற்றி! வெற்றி. நம் திட்டம் பலித்துவிட்டது) என்று மகிழ்ச்சியில் கத்தினான்.

அப்பொழுது இயந்திர மனிதர்களும் டிராகன்களும் பரபரப்போடு வந்தன. அவைகளுள் ஒன்று "ஜிந்தா ஹை! ஆஜ் கம் பச்சோ அத்தா ஆம் கடி, மேரா ஆவ் ஜுடி!" (வணக்கம். நாங்கள் இந்த நாட்டை அழித்து விட்டுத் திரும்பும் போது நம்மைச் சுற்றியிருந்த போர்வை அகன்று விட்டது) என்றது.

தலைவனின் முகம் சிவந்தது. "ஜடாக், "குஷ் கா ஆபி ஆத்தாகூம்" (முட்டாள், இதைச் சொல்லவா இங்கு வந்தாய்? என்று ஆத்திரத்துடன் கத்தினான்.

"கடாக், ஏக் அபி போஷா அஜாக் கம் ஜோதா கம் கபி ஆத்தா!" என்றான் (நம்மைச் சுற்றியிருந்த போர்வை விலகி விட்டதால் எங்களைத் துரத்திக் கொண்டு மானிடர்கள் வருகிறார்கள்) என்றது இன்னொன்று.

தலைவன் சற்று நேரம் யோசித்தான். பிறகு, "ஜுகடி ஹை காம் கர்த்தா மோதா ஆஷ்குஷ்" (அப்படியா. அவர்கள் வரட்டும். நம் வாயில் கதவுகளைத் திறந்து விடுங்கள். தாராளமாக உள்ளே நுழையட்டும் எந்தத் தொந்தரவும் செய்யாதீர்கள்) என்றான்.

சற்று நேரத்தில் –

ராஜ் சாஜ் இருவரும் வெள்ளிக் கோளை அடைந்தார்கள். டிராகன் கோட்டை, திறந்தே காணப்பட்டது. அவர்கள் கலத்தை உள்ளே செலுத்தினார்கள்.

"சாஜ், துப்பாக்கியை எடுத்துக் கொள். நாம் தரை இறங்கப் போகிறோம்" என்றான் ராஜ்.

இருவரும் இறங்கியவுடன் திடீரென்று ஒரு குரல் கேட்டது.

மரியாதையாக துப்பாக்கியைக் கீழே போட்டு எதிரே உள்ள அறைக்கு வாருங்கள். இல்லையெனில் லேசர் துப்பாக்கி உங்கள் உயிரைக் குடிக்கும்" என்றது குரல்.

இருவரும் துப்பாக்கியைக் கீழே போட்டவுடன் ரோபோக்கள் வந்து அவர்களை இழுத்துக் கொண்டு சென்றன.

"ராஜ். நாம இப்படி வந்து மாட்டிக் கிட்டோமே! உயிருடன் திரும்புவோமா? வழியில் டிராகனைப் பார்த்தேன். ஒரு வேளை அதுகளுக்கு நம்மையே உணவாகப் போட்டு விடுவான்களோ" என்று புலம்பினான் சாஜ்.

"வீணா புலம்பாதே. நடப்பது நடந்தே தீரும். நம்பிக்கையை அழித்துக் கொள்ளாதே. எப்படியும் தப்பித்துவிடலாம்" என்றான் ராஜ். அவர்கள் அறையை அடைந்தார்கள்.

அறையின் மையம் திடீரெனப் பிளந்தது. அங்கு தலைவன் காணப்பட்டான். அவர்களைப் பார்த்து, "உட்காருங்க, என்ன திகைக்கிறீங்களா! எப்படிடா இவனுக்கு நம்ம மொழி தெரியுன்னு பார்க்கிறீங்களா? அது அப்படித்தான். எனக்கு எல்லா மொழிகளும் தெரியும். அது இருக்கட்டும். நீங்க எதுக்கு இங்கே வந்தீங்க?" என்றான்.

"உங்க கொட்டத்தை அடக்க. எதுக்கு அமைதியா வாழும் பூமியை, நாடு நாடாக

அழிக்கிறீங்க? இதனால உனக்கு என்ன லாபம்?'' என்றான் ராஜ்.

"இந்த அண்டத்தையே ஆள வேண்டும். மானிடர்களின் அறிவாற்றல் பெருகி வருகிறது. அதற்கு ஓர் முடிவு கட்ட மானிட இனத்தையே அழிக்க வேண்டும். இதுதான் என் இலட்சியம். அதனால்தான் ஒவ்வொரு நாடாக உங்க பூமியை அழிக்கிறோம். ஏற்கெனவே பாதி பூமியை அழித்து விட்டோம். இன்னும் சில நாட்களில் மீதி உலகத்தையும் அழித்து விடுவோம்.''

தலைவன் மேலும் தொடர்ந்து சொன்னான்.

"உங்களை எப்படித் தெரியுமா நாங்கள் அழிக்கிறோம்? இராட்சத ரோபோக்களையும் டிராகன்களையும் பூமிக்கு ஒரு குறிப்பிட்ட நாட்டுக்கு அனுப்புவோம். டிராகன்கள் தீயை உமிழ்ந்து நகரை எரிக்கும். ரோபோக்கள் கட்டிடங்களைத் தட்டித் தரைமட்டமாக்கும். அந்த டிராகன்களைப் பார்க்க வேண்டாமா? அதனால் தான் உங்களை அவைகளிடம் அனுப்பப் போகிறேன்.''

"இவர்களைக் கொண்டு போய், டிராகன் பார்க்ினுள் விடுங்கள்.''

"என்னது! டிராகன் பார்க்கா? ஜுராசிக் பார்க்னுதான் படம் பார்த்திருக்கோம்!'' என்றான் சாஜ்.

"உன் கிண்டலுக்கு நேரங்காலமே கிடையாதா! சும்மா இருக்க மாட்டே? நான், இங்கே இருந்து எப்படித் தப்பிக்கலாம்னு பார்க்கிறேன். நீ வேற'' என்றான் ராஜ்.

இருவரையும் டிராகன் பார்க்கினுள் தூணில் கைகளைப் பின்புறமாக வைத்துக் கட்டிவிட்டுச் சென்று விட்டனர். டிராகன்களை அவிழ்த்துவிடப் போகிறார்கள்.

எப்படித் தப்புவது என்று ராஜ் யோசித்துக் கொண்டிருக்கையில் சாஜ் கீழே குனிந்து தன் பூட்சில் உள்ள சிறிய கத்தியின் உதவியால் கயிற்றை அறுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டான். ராஜையும் விடுவித்தான். இருவரும் அந்தத் தூணின் வழியாகவே ஏறி கிரகத்தின் கட்டுப்பாட்டு மையத்திற்கு வந்தனர்.

இருவரும் ஸ்டோர் ரூமை அடைந்தனர். அங்கு இருந்த துப்பாக்கிகளில் இருந்து இரண்டை எடுத்துக் கொண்டு குண்டுகளை லோட் செய்து கொண்டனர். பின், டைம் பாம்களை செட் செய்து பொருத்தி அதை முடுக்கி விட்டனர். இதற்குள் அவர்கள் தப்பித்து விட்டது தலைவனுக்குத் தெரிந்து விட்டது. அபாய சங்கொலி முழக்கம் காதுகளைத் துளைத்தது. எல்லோரும் ஸ்டோர் ரூமை நோக்கி ஓடி வந்தனர்.

இவர்களைக் கண்ட ராஜ், சாஜ் தங்கள் விண்வெளிக் கலத்தை நோக்கி ஓடி அதில் ஏறிக் கொண்டனர். சாஜ் கலத்தைக் கிளப்ப, ராஜ் இயந்திர மனிதர்களை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தான். இருவரும் அந்தக் கோளை விட்டு வெளியேறினார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து இயந்திர மனிதர்களும், விண்வெளி கலத்தை இயக்கித் துரத்த, வெளியே வந்த போது ராஜ் முடுக்கிவிட்ட 'டைம் பாம்' வெடித்தது. அந்தக் கோள் முழுவதும் சிதறியது.

விண்வெளிக் கலத்தில் துரத்திய இயந்திர மனிதர்கள் இவர்களின் மீது ஏவுகணைத் தாக்குதலை ஆரம்பித்தனர். ராஜின் விண்வெளிக்கலமும், இயந்திர மனிதர்களின் விண்வெளிக் கலமும் நேர் எதிராக வந்த போது, சாஜ் ஏவுகணை ஒன்றை விட, இயந்திர மனிதர்களின் விமானம் சுக்கு நூறாகச் சிதறி உடைந்தது. ராஜ், சாஜ் இருவரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். இருவர் முகத்திலும் பூமியைக் காப்பாற்றி விட்ட மகிழ்ச்சி தெரிந்தது. விண்வெளிக் கலம் அவர்களைச் சுமந்து கொண்டு பூமியை நோக்கி விரைந்து சென்றது.



''நம்ம ராமு கொடுத்து வெச்சவன்னு சொல்றியே, ஏன்?''

''அவனுக்கு ரெண்டு தாத்தா ரெண்டு பாட்டியாச்சே? அவங்க பேரைச் சொல்லி லீவு போடலாமே!''

- பாட்ஷா, தக்கோலம்.

கால் சம்பளம் போதும்!

பூவை அமுதன்

தெரு வழியே போய்க் கொண்டிருந்தான் சிவராமன். அழுது அழுது அவன் கண்கள் சிவந்திருந்தன. முகம் கூட வீங்கியிருந்தது.

வழியிலே ஒரு சிறு அட்டைப் பெட்டி வாயைப் பிளந்து கொண்டிருந்தது. அவனுக்குள்ளே கொதித்துக் கொண்டிருந்த கோபத்தை அதன் மீது காட்டினான். தெரு நடுவிலே விழுந்து கிடந்த அதை எட்டி உதைத்தான். அது ஓர் ஓரமாகப் போய் விழுந்தது.

பக்கத்திலே ஒரு குப்பைத் தொட்டியிருந்தது. அதன் பக்கத்திலே இரண்டு தென்னங்கீற்றுகள் விழுந்து காய்ந்து கொண்டிருந்தன.

"குப்பைத் தொட்டியிருக்க, பக்கத்திலேயே கொட்டியிருக்கிறார்களே காகிதமும் கந்தலுமாக!" என்று முணுமுணுத்துக் கொண்டே அந்தக் காட்சியை வெறுப்போடு பார்த்தான். எல்லாமே அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

யாரோ இரண்டு பேர் சைக்கிளில் பேசிக் கொண்டு போனார்கள்.

"பாரப்பா! படிக்க வேண்டிய வயதிலே தெருச் சுற்றியா திரியற பையன்களை!" என்றார் ஒருவர்.

அவர் தன்னைப் பார்த்துத் தான் சொல்கிறார் என்பது புரிந்தது சிவராமனுக்கு. அவனுடைய கோபம் அதிகமானது.

''என்ன பண்ணுவான் பாவம்? ஏழைப்பையன் போல இருக்கு. குப்பையிலே இருக்கிற காகிதம், பிளாஸ்டிக், ஆணி, பாட்டில் அது இதுன்னு பொறுக்கி வித்துப் பொழைக்கிறானோ, என்னவோ?'' என்றார் மற்றவர்.

அவர் பரிதாபப்படுகிறாரா, பரிகாசம் செய்கிறாரா என்பது, சிவராமனுக்கிருந்த கோபத்தில் புரியவில்லை. என்றாலும் அவன் தன்னையே நொந்து கொண்டு அங்கேயே நின்று கொண்டிருந்தான்.

"படிக்க வேண்டிய வயசு" அவன் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்வதைப் போல முணுமுணுப்பாகச் சொல்லிக் கொண்டான். அவன் பார்வை, காய்ந்து போன தென்னை ஓலைகளிலேயே கவிந்திருந்தது. தன் தலையில் கை வைத்துப் பார்த்தான். தன் தலையும் காய்ந்து, கொண்டிருப்பதாகவே தெரிந்தது.

அரைமணி நேரத்துக்கு முன்புதான் அவன் அப்பா அவன் கன்னத்தில் அறைந்தார். அந்த அடி அவனுக்கு இன்னமும் வலித்தது. அவர் பேசியதும் ஏசியதும் அவன் காதுகளை விட்டுப் போகவே இல்லை.

"என்னடா உனக்கு இன்னும் படிப்பு? ஆறாவது வரைக்கும் படிச்சிக் கிழிச்சிருக்கே இல்லே? அதுவே போதும். ஏதாவது வேலை செஞ்சி பொழைக்கிற வழியைப் பாரு" என்று ஆத்திரத்தைக் கொட்டினார் அப்பா.

"அப்பா! எனக்கு ஆசையாயிருக்குப்பா. நெறையப் படிக்கணும். பெரிய அறிவாளின்னு பேர் எடுக்கணும். நான் நல்லாப் படிப்பேம்பா. இதுவரைக்கும் பெயிலே ஆகலியேப்பா!" என்று கெஞ்சினான் சிவராமன்.

"எனக்கு என்னடா ஆஸ்தியிருக்கு உன்னை இந்தப் பட்டணத்திலே படிக்க வைக்க? ஊரிலே நிலத்தை குத்தகைக்கு எடுத்து உழுது பயிர் பண்ணி வாழ்ந்து கிட்டிருந்தோம். அந்தப் பணக்காரன்தான் பயிரிடற தன் நிலத்தை வீட்டுமனைங்களா பிளாட் போட்டு வித்திட்டானே? வேற வழி? பொழைப்பைத் தேடிப் பட்டணம் வந்தா...., எனக்கு எங்கே வேலை கிடைக்குது...? ஏதோ..... அப்பப்போ கிடைக்கிற கூலி வேலையைச் செஞ்சிக்கிட்டு அரை வயிறாவது சாப்பிட்டுக் கிட்டு வர்றோம். இதிலே நீ வேற படிப்பு படிப்புன்னு குதிக்கறே! இதெல்லாம் நடக்கிற காரியமா?"

எரிந்து விழுந்தார் சிவராமனின் தந்தை. பயந்து கொண்டே சொன்னான் சிவராமன், "அரசாங்கப்

பள்ளிக் கூடத்திலே சேர்த்திடுங்கப்பா. நகரசபை பள்ளியிலும் ஏழைப்புள்ளைகளைச் சேர்த்துப்பாங்களாமே? மத்தியானத்திலே சாப்பாடு வேற அங்கேயே கிடைக்குமே....! எப்படியோ, படிக்கிறேனே!"

"டேய் பயலே! நீ சாப்பாட்டுக்கு ஏங்கறியா, படிக்கிறதுக்கு ஏங்கறியா? எப்படியிருந்தாலும் சரி. படிக்கணும்கற எண்ணத்தை விட்டிரு. நான் ஒரு ஆளு இங்கே சம்பாதிச்சி ஆறு வயிறை நிரப்ப முடியாது. மூத்த பையன் நீ....! நீயும் உன்னாலே முடிஞ்சதைச் சம்பாதி. சைகிள் ஷாப், பெட்ரோல் பங்க், விறகுக் கடை.... அங்கே இங்கேன்னு போய்ப்பாரு. ஏதாவது வேலை கொடுப்பாங்க. முதல்லே உசிரோடு இருக்கிறதுக்குச் சாப்பிடுவோம்.... பொழைச்சிருந்தா அப்புறம் படிப்பு.... அது இது எல்லாம் பார்க்கலாம்...."

சிவராமனின் தந்தை கண்டிப்பாகச் சொல்லி விட்டுக் குடிசையை விட்டு வெளியே வந்தார். சிவராமனும் அவரைப் பின்தொடர்ந்தான் சிணுங்கிக் கொண்டே.

"அப்பா அப்பா. எப்படியாவது நான் படிக்கணும்....! படிக்கிறதுக்காகப் பிச்சை எடுத்தாலும் தப்பில்லேப்பா. நான் புத்தகத்திலே படிச்சிருக்கேன். இப்பத்தானே பள்ளிக்கூடம் திறந்தாங்க?"

"பிச்சையா எடுக்கப் போறே....? போ.... போ! பிச்சை எடுத்துக்கிட்டு அப்படியே போயிரு. அப்புறம் நீ படிப்பியோ, பாழாவியோ....! மறுபடியும் திரும்பி வராதே!" என்று கூறிக் கொண்டே 'பளார்' என்று அறைந்து விட்டார் அவர். சுருண்டு விழுந்து விட்டான் சிவராமன். திரும்பிப் பாராமல் போய்விட்டார் அவன் தந்தை.

அந்த நினைவிலிருந்து சிவராமன் மீளும் போது, அவன் எதிரே ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவனுக்கும் சிவராமனின் வயதுதான் இருக்கும். ஆனால் அவன் கிழிந்த சட்டையோடும், எண்ணெய் படியாத தலையோடும் இருக்கவில்லை. நல்ல வசதியான தோற்றம்.

தன்னைப் போல் இல்லாமல், அந்தப் பையன், எங்காவது படித்துக் கொண்டுதான் இருக்க வேண்டும் என்று தோன்றியது சிவராமனுக்கு.

சிறுவன் சிவராமனையே பார்த்துக் கொண்டு, வீட்டுக் 'கேட்' அருகே நின்று கொண்டிருந்தான்.

சிவராமன் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு, "அண்ணா! நீ படிக்கிறாயா!" என்று கேட்டான் அவனை.

"படிக்கிறேன்தான். இன்னைக்கு ஒரு தலைவர் இறந்திட்டாரில்லே. அதனாலே பள்ளிக்கு லீவ் விட்டுட்டாங்க. ஆமா... நீ என்ன... என்னைப் போய் அண்ணாங்கிறே?" என்று கேட்டான் அந்தச் சிறுவன்.

"நீ என்னை விடச் சின்னவனாத்தான் இருப்பே. இருந்தாலும், பார்த்தா உன்னைத் தம்பின்னு கூப்பிடத் தோணலே எனக்கு" என்றான் சிவராமன்.

"நீயும் படிக்கிறேதானே? உன் ஸ்கூலும் லீவுதானே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் அவன்.

"எனக்கு என்னைக்குமே லீவுதான். கிராமத்திலே படிச்சிக்கிட்டிருந்தேன். பட்டணம் வந்தோம். என்னாலே படிக்க முடியல்லே."

சொல்லும்போதே சிவராமனின் கண்களில் நீர் சுரந்தது. பாவமாக இருந்தது அந்தப் பையனுக்கு.

"படிக்கலியா....? என்ன பண்றே! இங்கே ஏன் நிற்கிறே?" என்று கேட்டான் அவன்.


"உன் பேரு என்ன? தம்பியும் வேணாம் அண்ணனும் வேணாம்.... பேரைச் சொல்லியே கூப்பிடறேன்?"" என்றான் சிவராமன்.

"என் பேர் தர்மக்கண். உன் பேரு....?"

"சிவராமன்! நான் இங்கே ஏதாவது வேலை கிடைக்குமான்னு தேடிக்கிட்டு வந்தேன்!"

"நீ என்ன வேலை செய்வே?"

"சொல்ற வேலை



எல்லாம் செய்வேன். இதோ பாரு தர்மக்கண்ணு... இந்தத் தென்னை ஓலைகளைக் கூட எனக்கு முடையத் தெரியும். கீற்றுகளை கிழிச்சிக் குச்சிகளைச் சேர்த்து துடைப்ப மாக்கலாம். அப்புறம்.... செடிகளுக்குத் தண்ணி ஊத்தறது... மண்ணை வெட்டிப் பாத்தி கட்டறது... ஏன்... கிராமத்திலே நான் ஏர் கூட உழுவேன். இது மாதிரி ஏதாவது வேலை...."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது உள்ளேயிருந்து ஒரு கார் வந்தது. கேட் அருகே வந்ததும், காருக்குள்ளிருந்து ஒரு குரல் ஒலித்தது.


"தர்மக்கண்! இங்கே என்ன பண்றே... ஏறு ஏறு காரிலே! சிக்கிரம் போகணும்!"

"என் அப்பா கூப்பிடறார்!" என்றான் அவன், சிவராமனைப் பார்த்து.

"இந்த ஓலைகளை நான் எடுத்துக்கலாமா?" என்று கெஞ்சும் பாவனையில் கேட்டான் சிவராமன்.

"எங்களுக்கு வேண்டாமின்னு தானே வீதியிலே போடச் சொன்னோம். தாராளமா எடுத்துக் கோயேன். இதை வைச்சு நீ என்ன பண்ணுவே?"

"இது போல பல ஓலை



களை முடைஞ்சி விற்றால் குடிசை போட றவங்க காசு கொடுத்து வாங்கிப்பாங்க. ஒழிச்சித் துடைப்பமாகவும் சேர்த்து விக் கலாமே? உங்களுக்கு உதவாதது எனக்கு உதவும். கொஞ்சம் காசு சேர்ந்தால் நானும் படிப்பேன். இனிமே, நீங்க வெளியே போடாதீங்க. நானே வந்து எடுத்துக்கறேன். உங்களுக்கு வேணுமின்னாலும் முடைஞ்சி தர்றேன்."

சிவராமன் மூச்சு விடாமல் பேசிக் கொண்டிருக்கும் போதே, காரை விட்டு இறங்கினார் தர்மக் கண்ணின் தந்தை. சிவராமனை வைத்தகண் வாங்காமல் பார்த்தார்.

"அப்பா... பாவம்பா... இவன். படிக்க ஆசைப்படறான். ஆனால் முடியல்லே..." என்று இரக்கத்தோடு கூறினான் தர்மக் கண்.

"அவன் பேசினது என் காதிலேயும் விழுந்தது" என்று தர்மக் கண்ணின் தந்தை சிவராமனைத் தன் அருகே அழைத்தார். அவனைப் பற்றியும் அவன் பெற்றோர் களைப் பற்றியும் விசாரித்தார்.

சிவராமன் கண்ணீரோடு தன் நிலை யைத் தயங்கித் தயங்கிச் சொன்னான்.

"என் வீட்டில் வேலையிருக்கு. ஆனால் நீ படிக்கணுங்கறியே....? படிக்கிற ஆசையை விட்டுடு. மாதம் நானூறு ரூபாய் சம்பளம் தரேன். இருக்க இடம், சட்டை டிராயர், சாப்பாடு, டிபன் எல்லாம் இலவசம். என்ன சொல்றே?" என்றார் அவர்.

"பள்ளிக் கூடம் போயிட்டு வந்து, மீதி நேரமெல்லாம் நீங்க சொல்ற வேலையைச் செய்யறேங்க. தயவு பண்ணி படிக்க அனுமதிங்க. இதிலே கால் சம்பளம் தந்தால் கூடப் போதும்" என்று கெஞ்சி னான் சிவராமன்.

"அப்பா! என் ஸ்கூல்லயே சேர்த்தி டலாம்பா. ஷிப்ட் ஸ்கூல்தானே! காலை யிலே எட்டு மணியிலிருந்து ஒரு மணி வரைக்கும் தானே பள்ளிக்கூடம்? அத னாலே...." என்று தர்மக்கண் சொல்லி முடிப்பதற்குள் சிவராமன் அவருடைய கால்களைக் கட்டிக் கொண்டான்.

"ஐயா! தயவு பண்ணுங்க. உங்களைப் பார்த்தால் இரக்கமனமுடையவராத் தெரியுது. யாரும் எந்தப் பொருளையும் இலவசமா கொடுத்தாலும் நான் ஏத்துக்க மாட்டேன். உழைக்கணும்..... அதை வைச்சிப் பிழைக்கணும் எங்கப்பாவும் இப்படித்தான் சொல்வார். பள்ளிக் கூடத் திலே சேர்த்துவிடுங்க. படிப்புச் செலவுக்கு நான், இங்கே உங்க வீட்டிலே சொல்ற வேலையைச் செய்யறேன்... ஓசியிலே எதுவும் வேண்டாம். அது உடம்பிலே ஒட்டாது. படிச்சிக் கிட்டே காசும் சம் பாதிக்க முடிஞ்சால் எங்கப்பாவும் சந் தோஷப்படுவார்!" என்று பாதித் தெம்பு வந்தவன் போல் பேசினான் சிவராமன்.

அவனது அறிவையும், படிப்பதில் அவனுக்கு இருந்த மட்டற்ற ஆவலையும் கண்டு வியந்து அவனைப் பாராட்டினார் அவர்.

"நாளைக்கே உன் வீட்டில் சொல்லி விட்டுவா. எனக்குத் தெரிந்த பள்ளிக்கூடம் தான்; உன்னைச் சேர்த்து விடுகிறேன். உன் சர்டிபிகேட்டெல்லாம் எடுத்துக்கிட்டு உன் அப்பாவையும் கூட்டிக்கிட்டு வா!" என்று சொல்லிவிட்டுக் காரில் ஏறினார் அவர்.

சிவராமன் துள்ளிக் குதித்துக் கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் தன் குடிசையை நோக்கி ஓடினான்.



''பிள்ளையாரப்பா! நாளைக்கு பரீட்சை ரீசல்ட் வருது. என்னை பாஸ் பண்ண வச்சிடு. உனக்கு கொழுக்கட்டை செய்துக்கிட்டு வந்து ஊட்டுறேன்...''

''ஐயோ! வேண்டாம்பா! நிறைய பச்சைப்பால் குடிச்சதால ஏற்பட்ட வயித் துப் பிரச்சனை இன்னும் தீரலை...''

– ஜோ. செல்வராஜ்

காட்டில் நடந்த கண்தான விழா!

சிங்கராஜாவின் அரசவை கூடியிருந்தது. சிங்கராஜா தமது சிங்காசனத்தில் கம்பீரமாக வீற்றிருக்க, அமைச்சர் புலியாரும் மற்ற பிரதானிகளும் அவரவர்க்கு உரிய ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

"அரசே, கண் மருத்துவர் கரடியார் தங்களைக் காண அனுமதி கேட்டுக் காத்திருக்கிறார்" என்று அமைச்சர் தகவல் கூறினார்.

"வரச் சொல்லுங்கள்" என்று உத்தரவு பிறப்பித்தார் சிங்கராஜா.

கரடியார் சிங்கராஜாவை வந்து பணிந்தார்.

"அரசே, நான் அமெரிக்கா சென்று கண் மருத்துவத்தில் சிறப்பான தேர்ச்சி பெற்றுத் திரும்பியிருக்கிறேன். கரிய மலை அடிவாரத்தில், பெரிய கண் மருத்துவமனையைக் கட்டியிருக்கிறேன். ஒரே சமயத்தில் ஐம்பது பேர்களுக்குக் கண் ஆபரேஷன் பண்ணும் அளவுக்கு எல்லா நவீன வசதிகளுடன் கூடிய ஆபரேஷன் தியேட்டரை அமைத்திருக்கிறேன். எல்லாம் நமது காட்டு விலங்குகளின் நலனுக்காகத்தான்."

"மிகவும் மகிழ்ச்சி கரடியாரே. நீங்கள் அமெரிக்கா சென்று கண் வைத்தியம் படித்தவர். பணம் சம்பாதிக்கும் இலாப நோக்கம் மட்டுமே உங்களுக்கு இருந்திருந்தால் மருத்துவமனையைக் காட்டில்



கட்டியிருக்க மாட்டீர்கள். நகரத்தில் கட்டியிருப்பீர்கள். நம் காட்டு விலங்குகளுக்கு, நாம் படித்த கண் வைத்தியம் பயன்பட வேண்டும் என்ற மிக உயர்ந்த நோக்கம் உங்களுக்கு இருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. உங்கள் மருத்துவமனைக்கு என்ன வசதி வேண்டுமோ, கேளுங்கள். கண்டிப்பாகச் செய்து கொடுக்க உத்தரவிடுகிறேன்," என்றார் சிங்கராஜா.

"என்னுடைய நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று தெரியவில்லை," என்று தலைவணங்கி நன்றி கூறினார் கரடியார்.



"ஓர் உதவி செய்ய வேண்டும்..."

சிங்கராஜா, கண் டாக்டர் கரடியாரை நிமிர்ந்து நோக்கினார்.

"தானத்தில் சிறந்தது அன்னதானம் என்று ஒரு காலத்தில் எண்ணி வந்திருக்கிறோம். இப்பொழுது காலம் மாறிவிட்டது. தானத்தின் சிறப்பும் மாறிவிட்டது."

"கரடியாரே, நீங்கள் கூற விரும்புவதைச் சுற்றி வளைக்காமல் கூறுங்கள். புரியவில்லை. இப்பொழுதெல்லாம் தானத்தில் சிறந்தது அன்னதானம் இல்லையா!"

"இல்லை மகாராஜா. அதைவிட மிகச் சிறந்த இரண்டு தானங்கள் கண்டுபிடிக்கப்பட்டு விட்டன. வசதி படைத்தவர்களால் மட்டுமே அன்னதானத்தைச் செய்ய இயலும். ஆனால், இந்தப் புதிய இரண்டு தானங்களையும் நல்ல மனம் படைத்த எவர் வேண்டுமானாலும் பண்ணலாம்!"

"அப்படியா! என்ன தானங்கள் அவை?"

"இரத்த தானம், கண் தானம்."

"பெயரைக் கேட்கும்போதே கலக்கமாக இருக்கிறதே! இரத்தத்தையும் கண்களையும் உண்மையாகவே தானம் செய்ய முடியுமா கரடியாரே?"

"கண்டிப்பாக மகாராஜா. நம் காட்டில் அடிபடும் பெரும்பாலான விலங்குகளும் பறவைகளும், ஏராளமாக இரத்தம் வெளியேறிவிடும் அபாயத்தால்தான் இறக்கின்றன. தேவையானபோது இப்படிக் காயமேற்படும் விலங்கு, பறவைகளுக்குப் புது இரத்தம் தந்து காக்க, எனது மருத்துவமனையில் ஓர் இரத்ததான வங்கியை ஏற்படுத்தப் போகிறேன்."

"மிகவும் அதிசயமாக இருக்கிறதே!"

"இதேபோல், நமது விலங்குகளும்

பறவைகளும் அடிக்கடி மனிதர்களின் தாக்குதல்களால் கண்களில் அடிபட்டு, நாளடைவில் பார்வை இழந்து, பரிதாபமாக இறக்கின்றன. இவைகளுக்கு உதவ கண் வங்கி ஒன்றையும் எனது மருத்துவமனையில் ஏற்படுத்த இருக்கிறேன்."

"எல்லாமே புதுமை!"

"நமக்கு வேண்டுமானால் புதியது. ஆனால், இந்த இரண்டும் ஏற்கெனவே நாட்டில் மனிதர்களால் செய்து காட்டப்பட்டு வெற்றிகரமாகப் பல நகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றவை."

"சரி, இந்த இரண்டையும் நீங்கள் உங்கள் கண் மருத்துவமனையில் ஏற்படுத்தப் போகிறீர்கள். அப்படித்தானே? எனது மனமார்ந்த வாழ்த்துகள். உங்கள் முயற்சி வெற்றி பெற்று அதன் பயன் இந்தக் காட்டு மிருகங்களுக்குக் கிடைக்குமானால், முதலில் பெருமகிழ்ச்சி அடைபவன் நானே!"

''வெறும் வாழ்த்து மட்டும் போதாது மகாராஜா. உங்கள் ஆதரவு தேவை."

''என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்?"

''ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நீங்களும் அரசியாரும் இரத்த தானம் செய்ய முன்வர வேண்டும். பெரிய மகாராஜா படுத்த படுக்கையாக இருக்கிறார் அல்லவா? தான் இறந்ததும், தனது கண்களைத் தானமளிக்க அவர் இசைய வேண்டும். நீங்களும் அரசியாரும் அரச குடும்பத்தினரும் தங்கள் கண்களைத் தானமாக அளிக்க ஒப்புதல் தரவேண்டும். இரத்த தானத்திற்கும் கண்தானத்திற்கும் அரச குடும்பத்தினர் முன்மாதிரியாக இருந்தால்தான், மற்ற விலங்குக் குடிமக்கள் தானம் செய்ய முன்வருவார்கள். இதன்





''அதோ போறாரே அவரோட பிறந்த நாளை உலகமே கொண்டாடும்.''

''அவ்வளவு பெரிய ஆளா?''

''இல்லை. அன்னிக்குத்தான் தீபாவளி!''

–நா. சாந்தி

நோக்கம் முழு வெற்றிபெறும்."

சிங்கராஜாவின் கண்கள் சிவந்தன. கோபம் தலைக்கேறியது. பற்களைக் கடித்தார்.

"கரடியாரே, எத்தனை துணிவு இருந்தால், இரத்த தானமும் கண் தானமும் பண்ண அரச குடும்பத்தாரை முன் உதாரணமாக இருக்க வேண்டும் என்று கேட்பீர்கள்! இது நடக்காது. இந்த இரண்டுக்கும் மட்டும் என்னுடைய ஒத்துழைப்புக் கிடைக்காது" என்று கர்ஜித்தார்.

சபையோர் நடுநடுங்கினர்.

"மகாராஜா, உங்கள் ஒத்துழைப்புக் கிடைத்தால், நான் தொடங்கியுள்ள பணி விரைவாக வளர்ந்து இந்தக்காட்டு விலங்குகளுக்கு இதன் முழுமையான பலன் கிடைக்கும். உங்கள் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்பதற்காக நான் இவைகளைக் கைவிடப்போவதில்லை. ஏனென்றால் இவை இந்தக் காட்டு விலங்குகளுக்கு நன்மை தரக்கூடியவை. இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள், இரத்ததானம், கண்தானத்தின் அவசியத்தை நீங்களும் உணர்வீர்கள். நான் வருகிறேன்" என்று பணிவாகக் கூறி வெளியேறினார் கண் டாக்டர் கரடியார்.

நாட்கள் ஓடின. சிங்கராஜா ஒத்துழைப்புக் கொடுக்காமையால், கண் டாக்டர் கரடியார் தொடங்கியிருந்த இரத்ததான, கண்தான வங்கிகளுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அதற்காகக் கரடியார் தனது முயற்சிகளைத் தளரவிடவில்லை.

ஒருநாள், காடு அமர்க்களப்பட்டது. வேட்டைக்காரர்கள் புகுந்து விட்டார்கள். சிங்க இளவரசனும், அரசியாரும் எக்கச்சக்கமாக அவர்கள் பார்வையில் சிக்கிக் கொண்டுவிட்டனர். துப்பாக்கி துரத்தியது. இளவரசனின் வலது கண்ணில் ஒரு குண்டு பாய்ந்துவிட்டது. அரசியாருக்குப் பின்காலில் பலத்த காயம். இரத்தப் பெருக்கு நிற்கவே இல்லை. உயிர் தப்புவதே பெரிய காரியமாகிவிட்டது. அமைச்சர் புலியார் தெரிவித்த கருத்தின்படி, டாக்டர் கரடியார் வரவழைக்கப்பட்டார்.

கரடியார் இருவரையும் பரிசோதித்தார்.

''அரசியாருக்கு ஏராள இரத்தம் வெளியேறிவிட்டது. உடனடியாக இரத்தம் செலுத்த வேண்டும். இளவரசருடைய வலது கண் முழுமையாகப் பாதிக்கப்பட்டுவிட்டது. உடனே ஆபரேஷன் செய்து துப்பாக்கி ரவைத் துண்டுகளை நீக்க வேண்டும். சிங்கராஜாவின் குடும்பத்தில் இருந்து யாராவது மனம் வைத்தால், இளவரசருக்கு ஒரு கண்ணை தானம் செய்யலாம்" என்று கூறினார் டாக்டர் கரடியார்.

சிங்கராஜா தனது இரத்தத்தையே தானம் கொடுத்து அரசியாரைக் காப்பாற்ற உதவினார். மரணப் படுக்கையில் கிடந்து போராடிக் கொண்டிருந்த சிங்க மகாராஜாவின் கண்களை அவர் இறந்த பிறகு தானமாக எடுத்துக் கொள்ளவும், அவைகளில் ஒன்றை சிங்க இளவரசனுக்குப் பொருத்தவும் அனுமதியளித்தார்.

இப்பொழுது சிங்கராஜாவின் அரண்மனை நுழைவாயிலில் ஓர் அழகான பெரிய போர்டு காணப்படுகிறது. அதில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?

"இரத்த தானம் செய்யுங்கள். கண் தானம் புரியுங்கள். நம் காட்டு விலங்குகளின் நன்மைக்காக."

எழுத்துக் கூட்டி உரக்கப் படிக்க உலகக் கதை

மரகதக் கற்கள்



ஓங்குவான் நகரத்தில் ஒரு கோடீஸ்வரப் பணக்காரன் இருந்தான். அவன் தொட்டதெல்லாம் இலாபம். பணம் கொழித்தது. நகரில் அவனுடைய மாளிகைதான் மிகவும் பெரியது. அவனிடம்தான் அதிக அளவு தங்கக் கட்டி களும், விலைமதிப்பு மிக்க நகைகளும், நில புலன்களும் இருந்தன. அவனுடைய நிலங்களில்தான் இரண்டு போகம் விளைந்தது. கூடுதல் விளைச்சலும் கூட. இத்தனை செல்வம் இருந்தபோதும், கோடீஸ்வரன் பெரிய கஞ்சக்கருமி. வயறு நிரம்பச் சாப்பிடாதவன். மற்றவர் களுக்கு உதவிக்கரம் நீட்டாதவன். தானம், தருமம் எல்லாமே அவன் அறியாதவை. அவனுக்குத் திருமணம் ஆகியிருந்தது. ஆனால், வயறு நிரம்பச் சோறு கூடப் போட மனமில்லாத கணவனுடன் எந்தப் பெண்தான் குடித்தனம் நடத்துவாள்? எத்தனை நாள்தான் பட்டினி கிடக்க முடியும்? கொடுமை தாங்க முடியாமல் அவள் ஓடியே போய் விட்டாள்.


அவன் மனைவி போய்விட்டதற்காக வருத்தப்படவில்லை.



'இந்தவரை சனியன் ஒழிந்தது. சாப்பாடு மிச்சம்' என்று கணக்குப் போட்டான். அத்தனை பெரிய, மாளிகை போன்ற வீட்டில் கோடீஸ்வரக் கருமி மட்டும் தனியாக இருந்தான். ஒரு நாயைக் கூட வளர்க்கவில்லை. அதற்கு சாதம் போட்டாக வேண்டுமே? செலவுதானே? மாளிகை போன்ற அவன் வீட்டுக்கு அடுத்த வீடு, ஒரு குடிசை வீடு. அதுவும் ஓட்டக் குடிசை. மழை பெய்தால், தண்ணீர் ஒழுகித் தேங்கி விடும். அதில் ஒரு விவசாயி தன் குடும்பத்துடன் வசித்து வந்தான். அவன் கடுமையான உழைப்பாளி. இருந்தும் வரும்படி போதவில்லை. தினமுமே அரைப் பட்டினிதான். இருப்பினும் அந்த நிலையில் கூட அவன் தன்னால் இயன்ற அளவுக்கு மற்றவர்களுக்கு உதவி வந்தான்.

ஒருநாள் கோடீஸ்வரக் கஞ்சனுக்கு ஒரு கவலை தோன்றியது. தனக்குப் பிறகு தனது சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேரும்? கோடீஸ்வரக் கஞ்சன், மனதுக்குள் ஆயிரம் தயக்கத்துடன், கொஞ்சம் பணம் செலவு பண்ணி ஒரு ஜோஸ்யனை அழைத்து வரச் சொன்னான்.

"ஐயா, எனக்குப் பிறகு இந்தத் திரண்ட சொத்தெல்லாம் யாருக்குப் போய்ச் சேரும் என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள்?" என்று ஜோஸியனிடம் கேட்டான். ஜோசியன், என்னவெல்லாமோ கணக்குப் போட்டுப் பார்த்து விட்டு, "உங்களுடைய இத்தனை சொத்துக்களும், உங்களுக்குப் பிறகு



உங்கள் பக்கத்து வீட்டுக் குடிசைவாசிக்கே போய்ச் சேரும்" என்றான். கோடீஸ்வரனுக்குக் கவலை பிடித்துக் கொண்டது. ஏற்கெனவே குடிசைவாசியைக் கண்டால் அவனுக்குப் பிடிக்காது. தான் சாப்பிடாமல் சேர்த்து வைக்கும் அத்தனை சொத்தும் குடிசைவாசிக்குப் போவாதா? கோடீஸ்வரனால் ஜோஸ்யன்

டெஸ்ட் ஊசி ஏன் போட வேண்டும்?

● அ. கவிதா, தக்கோலம்

? என்னுடைய பாட்டிக்குக் கண்கள் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் பாட்டி கண் தானம் செய்ய ஆசைப்படுகிறார். அவர் கண்தானம் செய்தால் பாட்டியின் கண்களை ஏற்பவருக்குக் கண்கள் தெளிவாகத் தெரியுமா?


! உன்னுடைய பாட்டி தாரளமாகக் கண் தானம் செய்யலாம். அவருடைய கண்களை ஏற்பவருக்கு நிச்சயம் கண்கள் தெளிவாகத் தெரியும். காரணம் இதுதான்– கண் தானம் என்பது முழு கண்களையும் தோண்டி எடுப்பதில்லை. கண்களில் உள்ள கருவிழி (CORNEA)யை மட்டும் எடுத்து மற்றொருவருக்குப் பொருத்துவதே கண்தானம். உன்னுடைய பாட்டியின் பார்வை தெளிவாகத் தெரியாததற்குக் காரணம் பாட்டியின் கண்களில் உள்ள விழிலென்ஸில் 'புரை' (CATARACT) மூடியிருப்பதுதான். இதற்கும் கருவிழிக்கும் தொடர்பில்லை. ஆகையால், ஒருவருக்கு கருவிழியில் பழுது ஏற்படாத வரையில்– கண்களில் வேறு கோளாறுகள் இருந்தால் கூட– அவர் கண்தானம் செய்யலாம் என்பதுதான் கண்தான விதி. இது உங்கள் பாட்டிக்குப் பொருந்தும். சீக்கிரமே கண் தானத்திற்கு உங்கள் பாட்டியின் பெயரை கண் மருத்துவ மனை ஒன்றில் பதிவு செய்து கொள்ளவும்.

● எஸ். நாகராஜன், மேலப்பாதி.

? பெனிசிலின் ஊசி போடும் போது 'டெஸ்ட் ஊசி' என்று ஒன்று போடுகிறார்களே, அது என்ன? ஏன்?

! பெனிசிலின் ஊசி மருந்து பலருக்கு ஒவ்வாமையை (ALLERGY) ஏற்படுத்தக்கூடியது. இந்த ஊசி சேராதவர்களுக்கு முன்பரிசோதனை செய்யாமல் பெனிசிலின் ஊசியைப் போட்டுவிட்டால் மரணம் கூட நிகழலாம். ஆகவே, இந்த ஆபத்தைத் தவிர்க்க, ஒருவருக்கு பெனிசிலின் ஊசி சேருமா, இல்லையா என்பதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் அந்த ஊசியை மருத்துவர்கள் போடுவார்கள். இதற்கு 'டெஸ்ட் ஊசி' பயன்படுகிறது. டெஸ்ட் ஊசி என்பது தனி ஊசி இல்லை. பெனிசிலின் ஊசி மருந்தில் அரை மி.லி. அளவுக்கு எடுத்துக் கொண்டு அதை முன் கையில் தோலுக்கு அடியில் செலுத்து வார், மருத்துவர். அப்போது பெனிசிலின் ஊசி சேராதவர்களுக்கு அந்த இடத்தில் வீக்கம் தோன்றும்; அரிப்பு எடுக்கும். வாந்தி வரும்; மயக்கம் வரலாம். இந்த அறிகுறிகள் தெரிந்தால் அவருக்கு பெனி சிலின் ஊசி சேராது என்ற முடிவுக்கு மருத்துவர் வந்து விடுவார். உடனே அவருக்கு வீக்கம், அரிப்பு, மயக்கம், வாந்தி நீங்க மாற்று மருந்து கொடுப்பார். அரை மணி நேரத்திற்குள் இந்த அறிகுறிகள் அவருக்குத் தோன்றவில்லை என்றால் பெனிசிலின் ஊசி அவருக்கு சேரும் என்று அர்த்தம்.

● எஸ். கே. சரவணன், கூறைநாடு.



? சாம்பல் தேய்த்து பல் துலக்குவதால் பல்லுக்குக் கெடுதலா?

! இதிலென்ன சந்தேகம், சரவணன்? சாம்பல் பல் ஈறுகளுக்கு ஆகாது. இதைக் கொண்டு பல் தேய்த்தால் வெகு விரைவிலேயே பல் ஈறுகள் தேய்ந்து 'பயோரியா' நோய் வந்து வடும்; இளம் வயதிலேயே பற்கள் ஆடும். பின்பு ஒவ்வொன்றாக விழத் தொடங்கும். பல் இல்லையேல் சொல் இல்லை என்பதை உனக்குக் கூறத் தேவையில்லை.

● ஜி.கணேஷ், சீர்காழி.

? தலைமுடிக்கு எது சிறந்தது- தேங்காய் எண்ணெய்? சீயக்காய்? ஷாம்பு?

! மூன்றுமே சிறந்ததுதான்- அது தரமானதாக இருந்தால்!

● ஜி.சக்தியநந்தன், சென்னை - 83.

? காண்டாக்ட் லென்ஸ் அணிவதால் கண்ணுக்குக் கெடுதலா?

! இல்லை. காண்டாக்ட் லென்ஸ் அணிவதால் கண்களுக்குக் கெடுதல் எதுவும் ஏற்படாது. ஒரு சிலருக்கு இந்த லென்ஸ் ஒத் துக் கொள்ளாது. அப்படிப்பட்டவர்களுக்கு மருத்துவர்கள் காண்டாக்ட் லென்ஸைப் பொருத்த மாட்டார்கள்.

● டி.எம். பெருமாள், தாசனூர்.


? சிரங்கு எதனால் வருகிறது? விடுதியில் தங்கும் மாணவர்களுக்கு இது அவசியம் வந்து விடுகிறது. இதனைப் போக்கவும், வருமுன் காக்கவும் வழி கூறுங்கள், டாக்டர்!

! சிரங்கு ஒருவருடைய சுகாதாரக் குறைவால் வருவது. இது 'சார்க்கோப்டிஸ் ஸ்கேபி' (SARCOPTES SCABIEI) என்ற ஒட்டுண்ணியின் பாதிப்பால் வருகிறது. வீட்டிலோ அல்லது விடுதியிலோ ஒருவருக்கு சிரங்கு வந்து விட்டால் போதும், மற்றவர்களுக்கும் இது எளிதில் பரவி விடும். இது தொட்டால் ஒட்டிக் கொள்ளக்கூடியது. சிரங்கு உள்ள நபர் அடுத்தவரைத் தொட்டாலே போதும். அவருக்கும் சிரங்கு வந்து விடும். சிரங்கு உள்ளவர் உபயோகப்படுத்திய உடை, துண்டு, சோப், சீப்பு, முகப்பவுடர், கைக்குட்டை, உணவுப் பாத்திரம் ஆகியவற்றை மற்றவர்கள் பயன்படுத்தினால் அவர்களுக்கும் சிரங்கு வருவது உறுதி. இதனைப் போக்க சிரங்கு உள்ளவர் தினமும் வெந்நீரால் குளித்து மருத்துவர் யோசனைப்படி சிரங்குக் கொல்லி மருந்து ஒன்றை உடம்பு முழுவதும் தேய்க்க வேண்டும். அத்துடன் அவருடன் வசிக்கும் மற்றவர்களும் இந்த மருந்தைத் தேய்த்துக் கொள்ள வேண்டும். சிரங்கு உள்ளவர் பூரணமாகக் குணமாகும் வரையில் மற்றவர்களுடன் ஒட்டி உரசிப் பழகுவதைத் தவிர்க்க வேண்டும்; வகுப்பில் தனியாக அமர வேண்டும். சுமார் 15 நாட்களுக்கு தொடர்ந்து சிகிச்சை பெற்றால்தான் சிரங்கு முழுமையாகக் குணமாகும். இல்லையேல் மீண்டும் மீண்டும் அது படையெடுக்கும்; ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு, அவரிடமிருந்து மற்றொருவருக்கு என்று பரவிக் கொண்டே இருக்கும். இதைத் தவிர்க்க ஒவ்வொருவரும் தங்களையும் சுற்றுப் புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

● எஸ். சந்திரசேகர், மருபள்ளி.

? ஆண்களுக்கு மீசை வளருவதைப் போல பெண்களுக்கு மீசை வளராத காரணம் என்ன?

! ஆண்களுக்கு 'ஆன்ட்ரோஜன்' என்ற இயக்குநீர் (HORMONE) இயங்குவதால் மீசை முளைக்கிறது. பெண்களுக்கு இந்த இயக்குநீர் இயங்குவதில்லை. அதனால் அவர்களுக்கு மீசை முளைப்பதில்லை.



வெள்ளிக் கிழமை. மாலை ஐந்து மணி.

இன்னும் சற்று நேரத்தில் ஒரு அதிர்ச்சியான செய்தி காத்திருக்கிறது என்ற உண்மை தெரியாமல் ஆற்றை நோக்கி மெதுவாக நடந்து கொண்டிருந்தார் சரவணன்.

சரவணன் ஒன்பதாம் வகுப்பு 'ஏ'வின் வகுப்பாசிரியர். நல்லவர். திறமையாக பாடம் நடத்துவதால் எல்லா மாணவ மாணவிகளின் உள்ளங்களையும் கவர்ந்தவர்.

ஐந்து நிமிட நடைக்குப் பின் ஆற்றை அடைந்து விட்டார் சரவணன்.

ஆறு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றைச் சுற்றி பச்சை ஆடைகள் அணிந்திருந்த விதம்விதமான செடிகள். கொடிகள். ஓரங்களில் மரங்கள். அவைகளின் மேல் பலவித பறவைகள். அவைகளின் மெல்லிய "கீச் கீச்" சப்தம் கேட்பதற்கு இனிமையாக இருந்தது.

ஒரு பெரிய பாறைக்கு அருகில் அமைதியாக உட்கார்ந்து கொண்டு இயற்கைத் தாயின் அழகைத் தன் கண்களால் பருக ஆரம்பித்தார்.

காலம் கரைய ஆரம்பித்தது.

அப்பொழுது...

தொலைவில் இரு சிறுமிகள் மெதுவாக நடந்து வந்து கொண்டிருப்பது தெரிந்தது. யார் என்று உற்றுப் பார்த்தார். அவர்கள்...

ராதா! மாலா!

இருவருமே அவருடைய வகுப்பு. ஓரளவு நன்றாகப் படிக்கக்கூடியவர்கள்.

சரவணன் இருப்பது தெரியாமல், பாறையின் அந்தப்புறம் அந்த இரு சிறுமிகளும் அமர்ந்து கொண்டு மெதுவான குரலில் பேச ஆரம்பித்தார்கள்.

அவர்கள் பேசப் பேச...

சரவணனின் முகத்தை அதிர்ச்சி பெரிதாக ஆக்கிரமித்துக் கொள்ள ஆரம்பித்தது.

திங்கட் கிழமை. முதல் பாடவேளை.

வகுப்பறைக்குள் நுழைந்தார் சரவணன். முதலில் வருகைப் பதிவை முடித்தார். பிறகு...

"அன்பு மாணவர்களே, இன்றைக்கு ஆங்கிலப் பாடத்ல தேர்வு வக்கிறேன்னு சொல்லியிருந்தேன். ஆனா நம்ப தலைமை ஆசிரியர் சில அவசர எழுத்து வேலைகளை எனக்குக் கொடுத்து அதை உடனடியா முடிக்கச் சொல்லியிருக்கிறார். அதனால ஆங்கிலத் தேர்வு இன்றைக்கு இல்லை. வர்ற புதன் கிழமை காலை முதல் வகுப்புல வச்சுக்கலாம். தெரியுதா?"

பாதி மாணவ மாணவியர்கள் உற்சாகத்துடன் தலையாட்ட....

ராதா, மாலா இவர்களின் முகங்களை ஓரக் கண்களால் பார்த்தார் சரவணன்.

அவை திடீர் ஏமாற்றத்தால் பெரிதாக சுருங்கிக் கொண்டிருந்தன!

செவ்வாய் கிழமை. மதியம். நான்காவது பாடவேளை.



இரா. வசந்தன்

ஆசிரியர் அறையில் சரவணன் தனியாக அமர்ந்திருந்தார். மற்ற ஆசிரியர்கள் வகுப்புகளில் இருந்தார்கள்.

அப்பொழுது ஆசிரியர் அறைக்கு ஒரு மாணவன் வர...

"ஒன்பதாம் வகுப்பு ஏ பிரிவுல பாரதின்னு ஒரு சிறுமி இருக்கா. நான் வரச் சொன்னேன்னு சொல்லு."

"சரிங்க ஐயா."

ஐந்து நிமிடங்கள் கரைய...

அறைக்குள் நுழைந்தாள் பாரதி.

"வா... பாரதி. உன்கிட்ட சில விஷயங்கள் கேட்கணும். அதுக்காகத்தான் வரச் சொன்னேன்."

பாரதியின் முகத்தில் குழப்ப ரேகைகள்!

"கேளுங்க ஐயா... சொல்றேன்."

"இதுவரைக்கும் நடந்த எல்லாத் தேர்வுகளிலும் நீதானே முதல் மார்க் வாங்கியிருக்கே?"

"ஆமாங்க.. ஐயா."

"இந்தத் திங்கட் கிழமை முதல் பாட வேளை, நான் ஆங்கிலத் தேர்வு வைக்கப் போறதா போன வாரம் சொல்லியிருந்தேன். இதைப் பத்தி நீ, ராதா, மாலா ஆகிய மூணு பேரும் என்ன பேசனீங்க?"

பாரதியின் முகம் பயத்தில் கறுக்க ஆரம்பித்தது.

"அது வந்துங்க ஐயா..."

"பயப்படாம உண்மையைச் சொல்லும்மா."

"நீங்க திங்கட் கிழமைத் தேர்வுக்கு அதிகப் பாடங்கள், அதிகப் பாட்டுக்கள் உண்டுன்னு சொல்லியிருந்திங்க. பாடம் அதிகமா இருக்கறதால நம்மால இந்தத் தேர்வுக்கு ஒழுங்கா படிக்க முடியாது. அதனால நாம்ப மூணு பேருமே ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி திங்கள் கிழமை பள்ளிக்கு வராம இருந்திடலாம்ன்னு ராதாவும் மாலாவும் சொன்னாங்க. முதல்ல நான் அதுக்கு ஒத்துக்கலை. அப்புறம் தயக்கத்தோடு ஒத்துகிட்டேன். ஆனா நீங்கதான் தேர்வை புதன் கிழமைக்கு ஒத்தி வச்சிட்டீங்களே? இப்ப நிறைய நேரம் கிடைச்சிடுச்சி. அதனால தேர்வை நல்லா எழுதிடுவேன்."

"அது இருக்கட்டும். இந்தத் திங்கட் கிழமை நீங்க பேசினபடி நீ மட்டுமே பள்ளிக்கு வரலே. ஆனா ராதாவும் மாலாவும் பள்ளிக்கு வந்திருந்தாங்களே. அவங்க மட்டும் பேச்சை மீறி ஏன் பள்ளிக்கு வந்தாங்க?"

"அதைப் பத்திக் கேட்டேன். வீட்ல எல்லோரும் திடீர்னு வெளியூர் போகிற மாதிரி



ஆயிடுச்சாம். அதனால வீட்ல ஒண்டியா இருக்க பயமா இருக்குதுன்னு, ஸ்கூலுக்கு வந்துட்டதா அவங்க இரண்டு பேரும் வருத்தத்தோடு சொன்னாங்க."

"அதை நீ நம்பிட்டியா?"

"இதுல போய் அவங்க எதுக்கு ஐயா பொய் சொல்லணும்?" – குழப்பத்தோடு பாரதி கேட்க...

"பாரதி... நீ வெளுத்ததெல்லாம் பாலுன்னு நினைக்கிறே. அது தப்பு. போன வெள்ளிக் கிழமை சாயந்திரம் ஆற்றங்கரைக்கு நான் வாக்கிங் போயிருந்தேன். அப்ப நான் இருக்கிறது தெரியாம ராதாவும், மாலாவும் என்ன பேசிக்கிட்டாங்க தெரியுமா? 'எப்பவும் பாரதிதான் முதல் ரேங்க் எடுக்கறா. நாம்ப இரண்டாவது ரேங்க்கும் மூணாவது ரேங்க்கும்தான் எடுக்கறோம். நாம்ப முதல் ரேங்க் எடுக்கணும்ன்னா ஒரே வழி பாரதியைத் தேர்வு எழுத விடாம பண்ணணும். அதுக்கு என்ன செய்யணும் தெரியுமா?' அப்படின்னு கேட்டுகிட்டு நீ சொன்ன அதே திட்டத்தைச் சொன்னாங்க. நீ அவங்க சொன்னதை நம்பி பள்ளிக்கு வராம இருந்துட்டே. ஆனா அவங்க வந்துட்டாங்க. நான் திங்கட்கிழமை தேர்வு வச்சிருந்தா, நீ தேர்வுக்கு ஆப்சென்ட். அதனால உனக்கு ரேங்க் கிடைச்சிருக்காது. ஆனா அவங்களுக்கு ரேங்க் கிடைச்சிருக்கும். வழக்கமா முதல் ரேங்க் வாங்கற நீ, அநியாயமா ஏமாறக் கூடாதுன்னுதான், என் மனசாட்சிக்கு விரோதமா தேர்வை ஒத்தி வச்சேன். அந்த உறுத்தல் இப்பக் கூட எனக்கு இருக்குது."

உண்மை ஒரு வழியாக பாரதிக்குப் புரிய... அவள் முகத்தில் அதிர்ச்சிக் கோடுகள்.

"ஐயா... இந்த ஒரு தடவை என்னை மன்னிச்சிடுங்க," என்று பாரதி விசும்பி அழ ஆரம்பித்தாள்.

"பாரதி... அழாதே. ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்க. படிக்கிற சமயத்துல கூடப் படிக்கிற மாணவிகள் பல யோசனைகளை நமக்குச் சொல்லுவாங்க. அதுல நல்ல யோசனைகளைத்தான் நாம் கேட்கணும். தீய யோசனைகளைக் கேட்டு ஏமாறக் கூடாது. புரியுதா?"

"புரியுது ஐயா," என்றாள் பாரதி!

ரொட்டிக்காரர் டஜன்!



இங்கிலாந்து நாட்டு மன்னர் ஏழாவது ஹென்றி ஒரு கடினமான சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். கடைகளில் விற்கப்படும் ரொட்டியின் எடையும், அளவும் ஊருக்கு ஊர் வேறுபட்டது. மக்களை ஏமாற்ற ரொட்டிக்காரர்கள் எல்லாத் தந்திரங்களையும் கையாண்டனர். இதையெல்லாம்கவனித்த மன்னர், இதற்கு ஒரு முடிவு கட்டவே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி கடைகளிலே விற்கப்படும் ரொட்டிகள் ஒரு குறிப்பிட்ட எடை இருக்க வேண்டும் என்று சட்டமிடப்பட்டது. கொஞ்சம் குறைந்தால் கூடக் கொலைத் தண்டனை அந்தக் கடைக்காரனுக்கு விதிக்கப்பட்டது.

கடைக்காரர்கள் ஒரு டஜன் ரொட்டியை விற்கும் போது எங்கே எடை குறைந்து கொலைத் தீர்ப்பு வந்து விடுமோ என்ற பயத்தில் எப்பொழுதும், கூடவே ஒரு ரொட்டியையும் கொடுப்பார்கள். இதைத்தான் அந்நாட்டில் ரொட்டிக்காரன் டஜன் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்!

– ஜா.ர.

காக்கை குருவி குரங்கும்!

கொ.மா.கோதண்டம்



அடர்ந்த காட்டில் ஒற்றையடிப் பாதையில் அவர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர். பாதை ஓர மரங்களும் முட்புதர்களும் அடுத்து வன அடர்த்தியால் எதுவும் தெரியவில்லை. பாதையை ஒட்டியுள்ள சிறு சிறு பாதைகள் கூட ஏதோ விலங்குகள் போல ஒரு வித பயத்தையே தோற்றுவித்தன. அதனால் அவர்கள் பேசாமல் சென்றனர். அமுதன், இளங்கோ, கண்ணன், ராமன் ஆகியோர் பள்ளி விடுமுறை நாளில் மலை அடிவாரம் வந்து 'அடர் வனத்திலுள்ளே அழைத்துச் சென்று ஏதேனும் காட்டுமாறு' நீலனிடம் கேட்கவே, நீலன் அவர்களை உள் காட்டிற்கு அழைத்து வந்தான். குரங்குகள் கூட்டமாக மரங்களின் மேலே வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந்தன. திடீரென்று ஒரு குரங்கு 'காச் மூச்' சென்று சத்தமிட்டது. எல்லாக் குரங்குகளும் பரபரப்போடு கத்திக் கொண்டு ஓடி விட்டன. முதலில் சத்தமிட்ட கடுவன் குரங்கு இவர்களுக்கு நேர் எதிரில் தாழ்ந்த கிளையில் தாவி வந்து அமர்ந்து கொண்டு பயங்கரமாகச் சத்தமிட்டது.

நீலன் 'டக்'கென நின்றான். ஏதோ பரபரப்பு!

"சாமி உடனே எம் பின்னால வாங்க முதல்ல ஏதாச்சிம் ஒரு மரத்துல ஏறியாகணும்" என்றவாறே பாதையை விட்டு வனத்தில் உள் நுழைந்து ஒரு பாறையில் ஏறி மற்றவர்களையும் அழைத்து தாழ்ந்திருந்த கிளையைப் பிடித்து அதில் அவர்களை ஏறுமாறு கூறினான்.

அவர்கள் ஏறியதும் நீலனும் அதே கிளையில் ஏறி மரத்தின் மையத்திற்கு வந்து மேலே சிறிது ஏறி வாகான கிளையில் உட்கார்ந்து கொண்டான். மற்ற வர்களையும் அதில் உட்கார வைத்தான். பேசாமல் இருக்குமாறு சைகை செய்து விட்டு கீழே சுற்று முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று 'தட தட' வென்று சத்தத்தைத் தொடர்ந்து ஒரு மான் ஒற்றையடிப்பாதை வழியாக வேகமாக ஓடி வந்து கொண்டிருந்தது. மான் ஓடி மறைந்த சில

நிமிடங்களில் ஒரு புலியும் அந்த மானைத் துரத்திக் கொண்டு ஓடியது. அதைப் பார்த்ததும் மாணவர்களுக்கு மூச்சே நின்று விடும் போல் இருந்தது. பயத்தால் பேசுவதற்குக் கூட நா எழ வில்லை.

"பயப்படாமே இருங்கசாமி" என்று மெல்லச் சொன்ன நீலன் மேலும் கீழே பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரம் சென்றதும் எழுந்து மேல உள்ள கிளையில் தொங்கிக் கொண்டிருந்த ஏதோ காட்டுக் கனிகளைப் பறித்து அவர்களிடம் தந்தான். அவர்கள் பயம் விலகாம லேயே பழங்களை அமைதி யாகச் சாப்பிட்டனர்.



அப்போது குரங்குகள் ஏதோ புது வித ஒலிகளை எழுப்பின. ஒரு யானைக் கூட்டம் வந்து மரங்களின் கீழே தங்கியது. நான்கைந்து பெரிய யானைகளும் இரண்டு குட்டிகளும் அதில் இருந்தன.

பாதையோரம் இருந்த மரத்தின் கிளைகளை யானைகள் ஒடித்து அதன் பழங்களை எடுத்துத் தின்றன. குட்டிகள் சுற்றிச் சுற்றி வந்தன.

மரத்தில் இருந்த குரங்குகள் கனிகளைப் பறித்துக் குட்டிகளை நோக்கி வீசின. இரண்டு குட்டிகளும் தும்பிக்கையை நெற்றியில் ஒட்டி தூக்கி வைத்துக் கொண்டு வாயை ஆவென்று திறந்து கொண்டு மரத்தின் மேலே பார்த்தன. குரங்குகள், பறித்த பழங்களை யானைக் குட்டிகளின் வாயில் சரியாகப் போட்டன. வாயில் விழுந்த பழங்களைத் தின்று விட்டு மேலும் 'ஆ' வென்று வாயைத் திறந்து மேலே பார்த்தன யானைக் குட்டிகள்!


குரங்குக்குட்டிகள் மரங்களின் மீதிருந்து யானைகளின் முதுகில் குதிப்பதும் மறுபடியும் கிளைக்குத் தாவுவதுமாக விளையாடிக் கொண்டிருந்தன. சிறிது நேரத்தில் யானைகளும் குரங்குகளும் அந்த இடத்தை விட்டு அகன்றதும், நீலனும் மாணவர்களும் கீழே இறங்கினார்கள்.

"சாமி! பாத்தேகளா! குரங்குக வந்து கொடிய மிருகம் புலி வருது சாக்ரதையா இருந்துக் கோங்கன்னு காட்டுக்கே சத்தம் போட்டுச் சொல்லிட்டு நமக்கும் எச்சரிக்கை பண்ணினது. யானைகள் வந்ததும் பழங்களைப் பறிச்சிக் குட்டிகளுக்குப் போட்டதே! எவ்வளவு நல்ல குணம் பாருங்க அதுக்கு!" என்றான் நீலன்.

"ஆமாப்பா அதனால தான் நம்ம நாட்டிலேயே முக்கியமான இதிகாசத்துல முக்கிய கதா பாத்திரமா இத வச்சாங்க" என்றான் அமுதன்.

"ஆஞ்சநேயர் மகா பாரதத்துல கூட ஒரு இடத்துல வந்துட்டு போறாராமே!" என்றான் இளங்கோ.

"எப்படியோ சாமி, நம்ம பெரியவங்க எந்த உயிர்ப்பிராணியையும் கொல்ல வேண்டாமுன்னுதா சொல்லியிருக்காக இது நல்லதுக்குதான். இல்லேன்னா நம்ம மனுஷங்க எல்லாத்தையும் கொன்னு தின்னுருப்பாங்க" என்றான் நீலன்.



பேசிக் கொண்டே அவர்கள் நடந்து கொண்டிருந்தனர். அடர் வனம் வந்து புல் மேடும் பாறைகளுமான பகுதி வந்தது. பளிரென வெளிச்சம் வந்த பகுதிக்கு வந்ததும் அவர்கள் ''ஒஹோ'' என சத்தமிட்டவாறு புல்வெளி நோக்கி ஓடினார்கள. ஏதோ சத்தம் கேட்கவே நீலன் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் இவர்களைப் பார்த்துக் காட்டு எருமை ஒன்று ஓடி வந்து கொண்டிருந்தது.

"சாமி, காட்டெருமை வருது. எம் பின்னால ஓடியாங்க"- சத்தமிட்டவாறே நீலன் ஒரு மண் மேட்டை நோக்கி ஓடினான். எல்லோரும் அவன் பின்னால் ஓடினார்கள். அது ஒரு சின்ன மண்மேடு தான். வழு வழுப்பாக இருந்தது உச்சியில் ஒரு மரம் கிளைகளை அகன்று பரப்பி இருந்தது.

"சாமி, இந்த மேடு வழுக்கும். கால் வச்சா மண் சரியும். பாத்து ஏறனும் வேகமா ஊம்" நீலன் மட மடவென்று மேட்டில் ஏறினான்.

மண் சரிந்தாலும் வளர்ந்திருந்த புல்லைப் பிடித்துக் கொண்டு அவர்கள் மேட்டின் உச்சிக்கு சென்றார்க்ள். விரட்டி வந்த காட்டெருமை ஏற பயந்து மேட்டைச் சுற்றி ஓடி வந்தது.

என்ன நினைத்ததோ அதுவும், வேகமாக ஏறத் துவங்கியது. பாதி ஏறியதும் மண் சரியவே உருண்டு கீழே விழுந்தது. அதைப் பார்த்த மாணவர்கள் சிரித்து விட்டனர். "சாமி வாங்க இந்த மரத்துல ஏறிக்கிடலாம்'' என்ற நீலன் மேட்டில் இருந்த மரத்தில் ஏறினான். அவர்களும் ஏறி ஒரு கிளையைப் பிடித்து நின்றார்கள். விழுந்த எருமை எழுந்து மறுபடியும் சுற்றிச் சுற்றி வந்தது. பின்னர் பின் பக்கம் சென்று அங்கிருந்து வேகமாக ஓடி வந்து அதே வேகத்தில் மேட்டில் ஏறியது, ஏறிய வேகத்தில் மரத்தில் மோதியது. மரம் ஒரு பக்கம் சாயவே கிளை மேட்டின் பாதி உயர தரையைத் தொட்டு நின்றது. அந்த அதிர்ச்சியில் அவர்கள் கீழே விழுந்து உருண்டனர்.

நீலன் எழுந்து மேட்டில் உள்ள எருமையைப் பார்த்தான். அது கீழே இறங்க இடம் பார்த்துக் கொண்டிருந்தது. மற்றவர்களையும் தூக்கி விட்டு நீலன் ஓட அவர்களும் ஓடினார்கள். பின்னால் ஏதும் வர வில்லை என்று உணர்ந்த பின் மெதுவாகவே நடந்தனர். ஓடியதால் முச் சிறைத்து. அவர்கள் ஒரு மரத்தடி பாதை நோக்கிச் சென்றனர். திடீரென்று மரத்திலிருந்த இரண்டு காக்கைகளும் சில குருவிகளும் படபடவென சிறகையடித்துக் கொண்டு வினோத சத்தம் எழுப்பிக் கொண்டு மரத்தையும் இவர்களையும் சுற்றி வந்தன. இதனை உணர்ந்த நீலன்



பொறுமை மிக்க எருமை!

எருமை நல்ல எருமையாம்!
எங்கள் வீட்டு எருமையாம்!
அருமை யான மழையிலும்,
அசைந்து, அசைந்துநடக்குமாம்!

கன்றுக் குப்பால் இல்லாமல்,
கலத்தில் பாலைக் கறந்திடின்,
என்றும் கோபம் கொள்ளுமாம்!
எகிறி உதைத்துத் தள்ளுமாம்!

அளவு போலப் பாலையும்,
அழகாய் நாளும் அளிக்குமாம்!
பழகிப் பார்த்தால் தெரியுமாம்,
பரம சாது என்பதும்!

பொறுமை மிக்க எருமையைப்
போற்றின் செல்வம் பெருகுமாம்!
பொறுமை யாலே பெருமையைப்
புவியில் பெறலாம் உறுதியே!

— மா. சுப்பாராஜ்

பின்னால் திரும்பிப் பார்த்தான். தூரத்தில் காட்டெருமை ஓடி வந்து கொண்டிருந்தது.

இவர்களும் ஓடினார்கள். இடையில் சிற்றாறு ஒன்று குறுக்கிடவே அதன் கரையில் அவர்கள் வந்து நின்றனர். "சாமி இந்த ஆத்துல தண்ணி முழங்காலுக்குத் தான். இருந்தாலும், எறங்கி நடக்க வேண்டாம்" என்றவன் சிறிது தள்ளிச் சென்று பாலமாக விழுந்து கிடந்த மரத்தில் நடந்தான். அவர்களும் மரத்தின் வழி எதிர்க்கரையை அடைந்தனர். அந்தப் பக்கம் வந்து நின்ற எருமை மாடு ஆற்றில் இறங்கியது. "யே... ம்" என்று பயங்கரமாக ஓலமிட்டது. உடலை எப்படி எப்படியோ ஆட்டிப் பார்த்தது. அது இடத்தை விட்டு அசையவில்லை.

"மாடு புதை சேத்துல சிக்கிக் கிடிச்சி. இனி அது ஆயுசு அவ்வளவுதான்'' என்றான் நீலன். எருமையின் கால்கள் மறைந்து உடலும் புதைய ஆரம்பித்தது. அது பயங்கரமாக ஓல மிட்டது. "சாமி இதுக்கு நாம் எந்தக் கெடுதலும் செய்யல ஆனா நம்மைக் கொல்ல எம்புட்டு பாடு பட்டுச்சி! நம்ம மாமிசமும் அது திங்கப் போறதில்லே. கடைசியில பாருங்க எப்படியாச்சின்னு?"

''ஏய் பாவம்ப்பா அத காப்பாத் திருவம்பா'' என்றான் இளங்கோ.

"நம்மாலே அதைத் தூக்கவும் முடியாது. அப்படியே காப்பாத்துனாலும் மறுபடியும் நம்மை அது கொல்லத்தான் வரும். பாவம் விடுங்க."

நீலன் சொன்னதும் அவர்கள் அதைப் பார்த்தனர். முழு உருவமும் புதைந்து நீர்க் குமிழிகள் மேலே வந்தன. நீலன் ஏதோ ஒரு செடியை ஒடித்தான். ஒடித்த இடத்தில் பால் சொட்டுச் சொட்டாக விழுந்தது. அதைக் கையில் பிடித்து அந்த இடம் நோக்கி வீசிவிட்டு கையைக் கழுவி விட்டுப் புறப்பட்டான். "வன்முறையாளனுக்கு கடைசியில ஆபத்துதான்னு இது நிரூபிச் சிடிச்சி" என்றான் அமுதன்.

கடைசியில நம்மைக் காப்பாத்தியது, "காக்காயும் குருவியும் குரங்குமாக்கும்." என்றான் ராமன்.

"அதனாலதான் பாரதியாரு, "காக்கை குருவி எங்கள் ஜாதி"ன்னு பாடுனாரு" என்றான் கண்ணன். பேசிக் கொண்டே கீழே இறங்கலானார்கள்.

ஊருக்கு ஒரு குற்றாலிங்கம்!

பீஷ்மன்



காலையில் எழுந்ததும் வயற்காட்டைச் சுற்றிப் பார்க்கச் சென்றுவிட்டுத் திரும்பிய சிதம்பரம், முற்றத்துத் தொட்டியிலிருந்து தண்ணீரை மொண்டு முகத்தையும் கைகால்களையும் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தான்.

"சிதம்பரம்....!" - உள்ளே சமையற்கட்டில் இருந்து அம்மாவின் குரல் கேட்டது. உள்ளே வந்தான்.

"குத்தாலிங்கம் கோயம்புத்தூரிலேருந்து வந்திருக்கானாமே! போய்ப் பார்த்தியா....?" என்று கேட்டாள் அம்மா.

"அவன் வெளியூர் போய் எத்தனை வருஷமாச்சு? ஒரு கடிதாசி போட்டானா? நான் என்ன? அஞ்சாம் வகுப்போட படிப்பை நிறுத்திட்டு நிக்கறவன். அவன் பெரிய படிப்புப் படிச்ச பட்டதாரி. என்னையெல்லாம் அவன் எங்கே மதிக்கப் போறான்!" என்று சுவாரசியமில்லாமல் பதில் சொன்னான் சிதம்பரம்.

"அப்படியில்லைடா! அவனுக்கு ஒம்மேலே கொள்ளைப் பிரியம் இல்லையா? பெரிய படிப்பானதால அவனுக்கு நேரம் இருந்திருக்காது. எதுக்கும் நீயே ஒரு நடை போய்ப் பார்த்திட்டு வந்திரு...." என்று அம்மா சொன்ன போது "போறேன்... போறேன்..." என்று பதில் சொல்லி வைத்தான் சிதம்பரம்.

முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை சிதம்பரமும் குத்தாலிங்கமும் கிராமப் பள்ளியில் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்தவர்கள்.

"படிச்சது போதும். விவசாயத்தைக் கவனிக்க உதவியா இரு!" என்று சொல்லி சிதம்பரத்தின் படிப்பை அவன் அப்பா நிறுத்தி விட்டார்.

அப்பாவுக்கு உதவியாக வயற்காட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்த சிதம்பரத்திடமே முழுப் பொறுப்பையும் ஒப்படைத்து விட்டு, அவனுக்குப் பதினைந்து வயதாகும் போது அவன் அப்பா கண்ணை மூடிவிட்டார்.

பக்கத்து நகரத்திலுள்ள ஹைஸ்கூலில் சேர்ந்து பஸ் ஏறிப் போய், படித்துக் கொண்டிருந்தான் குத்தாலிங்கம். ஆனாலும், சாயங்காலம் சிதம்பரத்தை வந்து பார்த்துக் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் போவான் அவன். ஆனால், கோயம்புத்தூர் போய், பட்டப் படிப்பு படிக்கத் தொடங்கிய பிறகு விடுமுறைக்கு வருவது கூட நின்று விட்டது. மாமா வீட்டிலேயே தங்கிப் படிக்கிறானாம். அதனால் தொடர்பு இல்லாமல் போய் விட்டது.

பட்டப் படிப்பு முடிந்து இந்த வருடம் குத்தாலிங்கம் ஊருக்கு வந்து விடுவான் என்பது சிதம்பரத்திற்கு ஏற்கெனவே தெரிந்த சங்கதிதான். அதனால்தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு தெருவில் அவன் அப்பாவைச் சந்தித்த போது



கோமாளி

கோணல் தொப்பி அணிந்திடும்
குண்டு மூக்கன் கோமாளி
நாணிக் கோணும் பெண்ணாக
நடந்து காட்டும் கோமாளி.

பல்லைக் காட்டி சிரித்திடும்
பல்டி யடிக்கும் கோமாளி.
சண்டை போட்டு விழுந்துடும்
சிரிக்க வைக்கும் கோமாளி.

ஊதி பலூனை உடைத்திடும்
உதை வாங்கும் கோமாளி.
வானில் தொப்பி வீசியே
விரைந்து பிடிக்கும் கோமாளி

வான வெளியில் ஆடியே
வலையில் விழுந்திடும் கோமாளி
கோடி வணக்கம் கூறியே
கும்பிடும் சர்க்கஸ் கோமாளி

— கு. காளிமுத்து

அவனைப் பற்றிச் சிதம்பரம் விசாரித்தான்.

குத்தாலிங்கத்தின் அப்பா ஊரிலேயே அதிக வசதி படைத்தவர். அதனால் கொஞ்சம் கர்வமுள்ளவர்.

“வருவான் வருவான். ஆனா, இந்த ஊரிலே எங்கே தங்கப் போறான்...? வேலை பார்க்க வேணாமா? வந்து கொஞ்ச நாள் இருந்துட்டுப் போயிடு வான்'' என்று ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டார் அவர்.

சிதம்பரத்தை மதித்துப் பதில் கூறுவது கூட, தன் கௌரவத்துக்குக் குறைச்சல் என்பது போலத் தோன்றியது அவர் நடந்து கொண்ட விதம்.

‘குத்தாலிங்கம் மட்டும் எப்படி இருப் பான்? அவனும் மாறித்தான் போயிருப் பான். பெரிய ஆபீஸரா ஆகப் போறவன். இந்த நாட்டுப்புற நண்பனோட எதற்குப் பழகப் போறான்!'' என்றுதான் சிதம்பரம் நினைக்கத் தொடங்கியிருந்தான்.

இருந்தாலும்... அவனைப் போய்ப் பார்த்து விட்டு வரவேண்டும் என்று மட்டும் மனதில் தோன்றிக் கொண்டுதான் இருந்தது. மத்தியானம் இவன் குத்தாலிங் கத்தைப் பார்க்கக் கிளம்பிக் கொண்டிருந்த போது, அவனே இவன் வீடு தேடி வந்து விட்டான்.

''எப்படியிருக்கே சிதம்பரம்....?'' செருப்பை வாசற்புறத்தில் கழற்றிப் போட்டு விட்டு, உள்ளே வந்தவனைப் பார்த்ததும் ஒரே சந்தோஷமாக இருந்தது சிதம்பரத்துக்கு.

“உன்னைப் பார்க்கத்தான் புறப்பட் டேன். நீயே வந்துட்டே!'' என்று சொல்லிக் கொண்டே மடக்கு நாற்காலியை விரித்துப் போட்டான் சிதம்பரம்.

குத்தாலிங்கம் கீழேயே உட்கார்ந்து கொண்டான்.

“வா தம்பி. நல்லா இருக்கியா? நாற்காலி யிலே உக்காரேன்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளேயிருந்து வந்து அவனை வரவேற்றாள் சிதம்பரத்தின் அம்மா.

''நல்லாயிருக்கேன் அம்மா. நீங்க எல்லாம் சுகம் தானே?”

குத்தாலிங்கத்திடம் பெரிய மாறுதல் ஏதும் இல்லை. வெளுத்து வந்திருந்த சட் டையும் வேட்டியும்தான் அணிந்திருந் தான். நல்ல உயரமாக, முன்னை விட சதைப் பிடிப்போடு இருந்தான். அவ்வளவு



தான்.

“நம்ம ஊரையும் எங்களையும் ஒரு வேளை மறந்தே போயிட்டயோன்னு நெனைச்சேன். நல்ல வேளை நீ மறக்கலை ஆமாம். நீ ஏன் ஒரு கடிதாசி கூடப் போடலை?” என்று கேட்டான் சிதம்பரம்.

“அது என்னமோ, கடிதாசி எழுதக் கை வரதில்லை. அப்பாவுக்குக் கூட நான் எழுதினதே இல்லை. மாமாதான் எழுதுவார்...” என்று சிரித்துக் கொண்டே சொன்னான் குத்தாலிங்கம்.

“மேலே என்ன செய்யறதா இருக்கே?” என்று கேட்டான் சிதம்பரம்.

“வேலை பார்க்க வேண்டியதுதான்!” என்று சொல்லி விட்டுக் குத்தாலிங்கம் சிரித்தான்.

“நீ மறுபடியும் வேலை பார்க்க வெளியூருக்குப் போயிடுவேன்னுதான் உங்க அப்பா சொன்னார். இங்கே ஒரு மாசமாவது இருப்பாய் இல்லையா?”

குத்தாலிங்கம் சற்று நேரம் மௌனமாக சிதம்பரத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஏன், நான் இங்கேயே இருக்கக் கூடாதா என்ன?”

“இருக்கலாம். ஆனா உன் படிப்புக்குத் தகுந்த வேலை நம்ம கிராமத்திலே ஏது? இங்கே இருக்கிற ஒரே தொழில் விவசாயம்தான். அதைக் கவனிக்கத்தான் என்னைப் போல அரைகுறைப் படிப்பாளிங்க எத்தனையோ பேர் இருக்கோமே!” என்று சலிப்போடு சொன்னான் சிதம்பரம்.

குத்தாலிங்கம் பேசாதிருந்தான்.

“என்ன குத்தாலிங்கம், என்ன யோசனை அப்படி....?”

“ஒண்ணுமில்லே. எங்கப்பா, நீ, ஏன் இந்த ஊரிலே இருக்கிற எல்லாருமே பட்டப் படிப்புப் படிச்சுட்டா எங்கேயாவது அரசாங்க ஆபீஸிலோ வங்கியிலோ வேலைக்குப் போகணும்னுதான் நினைக்கறீங்க இல்லையா? அது சரியில்லை சிதம்பரம். நான் படிச்ச படிப்பு என்ன தெரியுமா? விவசாயப் பட்டப் படிப்பு. கல்லூரியில சேர்ற போதே மனதிலே ஒரு தீர்மானத்தோடுதான் சேர்ந்தேன்” என்று சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தினான்.

பிறகு, “விவசாயத்தை விடச் சிறந்த தொழில் கிடையாது சிதம்பரம். ஆனா, இப்போ இருக்கிற விஞ்ஞான வசதிகளையெல்லாம் பயன்படுத்தி நாம அதை முறையா செய்யப் பழகிக்கலை. அதுதான் குறை. நல்ல வேளையா நான் அது பத்திப் படிச்சிருக்கேன். என் படிப்பை நம்ம நிலங்

களுக்கு உரமாக்கணும்னு நினைக்கிறேன் நான்." என்று குத்தாலிங்கம் சொன்னதைச் சிதம்பரத்தால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நீ என்ன சொல்லறேன்னே புரியலையே!" என்றான் அவன்.

"புரியும் படியா சொல்றேன்! நான் எந்த வேலைக்கும் போகப் போறதில்லை. இந்த ஊரிலேதான் இருக்கப் போறேன். விவசாயக் கல்வியில படிச்சுத் தெரிஞ்சுக் கிட்டதைப் பயன்படுத்தி நம்ம ஊரிலே விவசாயத்தை இன்னும் எப்படி மேம் படுத்த முடியுமோ அப்படியெல்லாம் செய் யணும்னு ஆசைப்படறேன். நானும் உன்னைப் போல விவசாயிதானே? இந்த மண்ணிலே பிறந்தவன்தானே? இதிலே உங்களுக்கிருக்கிற அக்கறை எனக்கும் இருக்கக் கூடாதா? இந்தியாவின் உயிர் நாடி விவசாயம்தான். அது கிராமத்தில்தான் மறைந்து கிடக்குன்னு காந்தி சொன்னதை நான் படிச்சிருக்கேன். மறக்கலே சிதம்பரம்!"

குத்தாலிங்கம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டு போனான். அவன் பேசுவதை ஆச்சரியத்துடனும் அதே நேரம் மிகுந்த மகிழ்ச்சியுடனும் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சிதம்பரம்.

"உங்கப்பா கிட்டப் பேசிட்டியா?" என்று கேட்டான் அவன்.

"வந்ததிலிருந்து அதுதான் வேலை. அவரை ஒரு வழியா என் விருப்பத்துக்கு ஒத்துக்க வச்சுட்டேன்."

"குத்தாலிங்கம்... நான் கூட உன்னைப் பத்தித் தப்பாத்தான் நினைச்சேன். நீ... நீ.... ரொம்ப உயர்ந்த மனுசனாயிட்டே!" என்று நாத்தழுதழுக்கக் கூறினான் சிதம்பரம்.

"பெரிய பேச்செல்லாம் பேசாதே நீ. அது சரி. இன்னும் என்னவெல்லாமோ நினைக்கிறேன் நான். இங்கே படிப்பறிவே இல்லாத வயசானவங்களுக்கெல்லாம் படிப்புச் சொல்லித்தர, ஒரு திட்டம் வேறே வச்சிருக்கேன்" என்று அவன் சொன்ன போது....

"இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் ஒரே ஓர் குத்தாலிங்கம் இருந்தால் கூடப் போதுமே...!" என்று பெருமையோடு நினைத்துக் கொண்டான் சிதம்பரம்.



உலகை வெல்வோம்!

அன்பால் உலகை வெல்வோம்;
அஹிம்சை வழியில் செல்வோம்;
துன்பம் செய்யும் கொடியோரைத்
திருத்திட நாளும் முனைவோம்.

அறிவை வளர்த்துக் கொள்வோம்;
அறிவியல் சாதனை புரிவோம்;
உரிமையைக் காத்திட நிற்போம்;
உயிரென நாட்டை மதிப்போம்.

மனிதரில் பேதம் காட்டும்
மடமையைக் கிள்ளி எறிவோம்;
புனிதர்கள் காட்டித் தந்த
புதுவழி தன்னில் செல்வோம்.

வயிரம் போலுடல் வளர்ப்போம்;
வியர்வை சிந்தி உழைப்போம்;
பயிர்களை எங்கும் வளர்ப்போம்;
பசிப்பிணி ஓட்டி நிற்போம்.

— சரணா கையூம்

(ஸ்ரீலங்கா. தொடர்பு முகவரி இல்லை)



ராபின்ஹூட் கற்பனையா?

ராபின் ஹூட்டைப் பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. நல்லவர்களுக்கு நல்லவன். பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவன். பணக்காரர்களிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவுவான். அநீதிகளைத் தட்டிக் கேட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கப் பண்ணுவான். கொடுங்கோலர்களைத் தண்டித்து ஏழைகளின் பாதுகாவலனாக விளங்குவான். ராபின் ஹூட்டின் குணங்கள் இவைதான். இவைகளை உணர்த்திக் காட்ட எண்ணிலடங்காக் கதைகள் உண்டு. ராபின் ஹூட்டும் அவனுடைய வில்-அம்பும் மயக்க வைக்கும் சாகசச் செயல்களைக் கூறும். உலகெங்கும் ராபின் ஹூட்டின் வீரசாகசங்கள் இன்றும் கூடக் குழந்தைகளால் மட்டுமல்ல, பெரியவர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. ராபின் ஹூட்டை மையமாக வைத்து ஏராளமான தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படங்கள் வந்து விட்டன. இந்த ராபின்ஹூட் கற்பனைப் படைப்பா? இல்லை உண்மையாக வாழ்ந்து மறைந்த வரலாற்றுக் கதாநாயகனா?

ராபின்ஹூட் கதைகள் முதன் முதலில் இசை நாடக வடிவில் மக்களிடையே பிரபலமாகியிருந்தன. 1495ஆம் ஆண்டு இதைப் புத்தகமாக அச்சிட்டிருக்கிறார்கள். ராபின் ஹூட்டை வைத்து வழங்கிவரும் கதைகளையும், வீர சாகசங்களையும் பார்த்தால், குறைந்தது ராபின் ஹூட் ஐந்நூறு வயதாவது வாழ்ந்திருக்க வேண்டும். அவ்வளவு வீரசாகசங்கள்.


எந்த ஒரு புத்திசாலித்தனமான செயலையும் எப்படித் தெனாலி ராமனின் பெருமையாக ஏற்றிக் கூறப்பட்டு


வருகிறதோ, அதே மாதிரியான சேர்ப்புச் சாக சங்கள்தான் இந்த ராபின் ஹூட் கதைகள் என்று எண்ணுவோர் உள்ளனர். தெனாலி ராமனுக்கு நேர்ந்துள்ள இதே நிலைதான் முல்லா கதைகளுக்கும். மக்களின் மனம் கவர்ந்த கதாநாயகன் என்ற நிலை வந்துவிட்டால் இப்படிச் சேர்ப்புக் கதைகள் நூற்றுக்கணக்கில் இணைக் கப்படுவது தவிர்க்க முடியாதது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் ராபின் ஹூட் ஒரு கற்பனைப் பாத்திரம்தானா என்ற கேள்வியும் எழுகிறது இல்லையா?

ராபின்ஹூட் வாழ்ந்தது நாட்டிங் ஹேம் என்ற சின்ன நகரம். இவன் சாகசங்கள் நிகழ்த்திய ஷெர்ஷட் காடு களும், நாட்டிங் ஹேமும் இங்கிலாந்தில் உள்ளன. ராபின் ஹூட்டின் வீரசாகசக் கதை களிலேயே இந்த விவரங்கள் வருகின்றன. அதோடு இரண்டாவது எட்வர்டு மன்னரின் படையில் (1322) ராபின் ஹூட் என்ற இளைஞன் இருந்ததாகவும், இவன் சட்டத்திற்கு மதிப்பளிக் காதவன் என்றும் வரலாறு கூறுகிறது. எனவே, ராபின்ஹூட் கற்பனையான வீரன் அல்ல என்று ராபின் ஹூட் ரசிகர்கள் கூறுகிறார்கள். எது எப்படியோ ராபின்ஹூட்டின் வீர சாகசங்களாக 140க்கு மேற்பட்ட கதைகள் கூறப்படுகின்றன என்பதும், இவை எல்லாத் தரப்பு மக்களாலும் நன்கு வரவேற்கப்படுகின்றன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இன்று நாட்டிங்ஹேம் பெரிய நகரமாக இருக்கிறது. இங்குதான் ராபின் ஹூட்டால் புகழ்பெற்ற நாட்டிங் ஹேம் மாளிகை இன்னமும் இருக்கிறது. "சட்டத்தை மதிக்காது வலிமையால் தன் கையில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு செயல்பட்ட ராபின் ஹூட்டை எங்கள் நகர வீரனாக ஏற்க சட்டத்திற்கு மதிப் பளிக்கும் எங்களால் இயலவில்லை" என்று ராபின் ஹூட்டுக்கு எதிராகக் கொடி காட்டும் மக்களும் நாட்டிங் ஹேம்மில் இருக்கிறார்கள்.

இருப்பினும் ராபின்ஹூட்





கதைகளைப் படித்துவிட்டு மனம் பறிகொடுத்த இலட்சக்கணக்கான ரசிகர்கள் இன்றும் இருக்கிறார்கள். இன்னமும் இருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் ராபின் ஹுட் வாழ்ந்த நாட்டிங் ஹேம் மாளிகை ஒரு புண்ணியத்தலமாக விளங்குகிறது. ராபின்ஹுட் ரசிகப் பெருமக்களின் நன்கொடையால் நாட்டிங்ஹேம் மாளிகையின் முன்பாக மிகப் பெரிய வெண்கலச் சிலை அமைத்திருக்கிறார்கள். இது ராபின் ஹுட் வில்லை வளைத்து அம்பெய்யும் கோலத்தில் உள்ளது. இதில் வைக்கப்பட்டிருந்த சிறகு அம்பை, நினைவுச் சின்னமாக அன்பர்கள் அடிக்கடி திருடிக் கொண்டு போய் விடவே சிலைக்கு அம்பைக் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்திக் கொண்டு விட்டார்கள்.

எப்படியிருந்தாலும் சுமார் 140 வீர சாகசக் கதைகளுக்கும் ஒரே கதாநாயகனாக விளங்கும் ராபின் ஹுட், கண்டிப்பாக அதிக அளவு 120 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்திருக்கும் வாய்ப்பு இல்லவே இல்லை. அதில் அவன் எதிர்க்கும் பல பிரபுக்களும் மன்னர்களும் ஒரே காலத்தவராக இல்லை என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை. எனவே, நம்ப ஊர் ஔவையார், அகத்தியர், இந்திரன் மாதிரி ராபின் ஹுட் என்ற பெயர் கொண்ட பலர், பல்வேறு காலங்களில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் இந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறார்கள்.

ஆனால், ராபின் ஹுட் மக்களிடையே ஏற்படுத்தியுள்ள மகத்தான வரவேற்பை யாராலும் எதாலும் குறைக்க முடியாது. இதை நாட்டிங் ஹேம் மாளிகைக்கு வரும் மக்கள் கூட்டத்தைப் பார்த்தே அறியலாம். இங்கு ஆண்டுதோறும், நம் திருவாரூர் தியாகராஜருக்கு நடக்கும் உற்சவம் போல் இரண்டு வார காலம் ராபின் ஹுட்டுக்கு திருவிழா நடைபெறுகிறது. அதிக அளவில் குழந்தைகளும், இளைஞர்களும் வருகிறார்கள். இசை நாடகம், கதை கூறல் பட்டிமன்றம் எல்லாம் நடக்கின்றன. ராபின்ஹுட்டின் பெருமைகள் பல கோணங்களில் நினைவு கொள்ளப்படுகின்றன.

சோமுவின் அப்பா மயில்சாமி, அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ப்யூனாக வேலை செய்து வந்தார். அதே பள்ளியில்தான் சோமு ஏழாம் வகுப்பில் படித்து வந்தான். சோமுவின் அப்பா மிகவும் நல்லவர். ஆனால் சோமுவோ தன் அப்பாவிற்கு எதிர்மாறானவன். யாருக்கும் கீழ்ப்படிய மாட்டான். யாரையும் மதிக்கவும் மாட்டான். அதிக சேட்டைகள் செய்வான். பெற்றோர் அவனைத் எவ்வளவு முயற்சி செய்தும் திருத்த முடியவில்லை.

சோமுவுக்கு காலாண்டுத் தேர்வு நடந்து கொண்டிருந்தது. அன்று அவனுக்கு ஆங்கிலப் பரீட்சை. அந்தப் பரீட்சையில் கண்டிப்பாக ஒரு பாடல் வரும் என்று நம்பினான். எனவே, அந்தப் பாடலை ஒரு துண்டுத் தாளில் எழுதி வைத்துக் கொண்டான்.

ஆங்கிலப் பரீட்சை தொடங்கிய போது சோமு தான் எழுதி வைத்திருந்த பாடல் வினாத்தாளில் கேட்கப்பட்டிருக்கிறதா என்பதை ஆவலுடன் பார்த்தான். அவன் எதிர்பார்த்தது போலவே அது கேட்கப்பட்டிருந்தது. எனவே அவன் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

ரகசியமாக துண்டுத் தாளை எடுத்து அந்தப் பாடலை எழுத ஆரம்பித்தான். அப்பொழுது அங்குத் தேர்வுக் கண்காணிப்பாளராய் இருந்த ஆசிரியர் முருகானந்தம், அவன் பிட் எழுதுவதைக் கவனித்து விட்டார். அவனிடம், ''ஏண்டா! என்கிட்டயா பிட் அடிக்கிறே? போடா, தலைமை ஆசிரியரிடம்'' என்று கோபத்துடன் கூறினார்.

தலைமை ஆசிரியர் விவரம் தெரிந்து




எப்படியாவது...

அவனை மிகவும் கடிந்து ஐம்பது ரூபாய் அபராதம் விதித்தார். அவனது அப்பா மயில்சாமிக்கும் இந்த விஷயம் தெரிவிக்கப்பட்டது. அவரும் சோமுவைக் கூப்பிட்டுக் கண்டித்தார்.

இத்தனைக்கும் காரணமாய் இருந்த ஆசிரியர் முருகானந்தத்தை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்று நினைத்தான் சோமு. தான் செய்தது தவறு என்பதை அவன் உணரவே இல்லை.

முருகானந்தம் எப்பொழுதும் சைக்கிளில் தான் பள்ளிக்கு வருவார். அந்த வண்டியின் பிரேக்கைக் கழற்றி விட்டால் அவர் ஏதாவது ஒரு விபத்தில் சிக்கிக் கொள்வார் என அவன் எண்ணினான்.

மதிய உணவுக்காக எல்லாரும் வெளியே சென்றிருந்தனர். யாருமில்லாத அந்த நேரத்தில் சோமு தான் நினைத்ததைச் சுலபமாகச் செய்து முடித்தான்.



அந்தப் பள்ளியின் ஆண்டு விழா நெருங்கிக் கொண்டிருந்தது. ஆசிரியர் முருகானந்தம்தான் அதற்குப் பொறுப்பேற்றிருந்தார்.

விழா மேடையை அலங்கரிக்க, காகிதத் தோரணங்கள் தேவையாக இருந்தன. அதை வாங்கி வர முருகானந்தம் புறப்பட்டார்.

அவரோடு நின்றிருந்த மயில்சாமி, "ஐயா, நீங்கள் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருங்கள். சைக்கிளை மட்டும் கொடுங்க. நான் போய் வாங்கி வருகிறேன்" எனக் கேட்டுக் கொண்டு கிளம்பினார்.

அ. உதயகுமார்

"சீக்கிரம் தோரணங்கள் வேண்டும், மயில்சாமி" என்று முருகானந்தம் சாவியைக் கொடுத்தார்.

மயில்சாமி சைக்கிளை வாங்கிக் கொண்டு புறப்பட்டார். வேகத்தை அதிகப் படுத்தியவர், சாலை இறக்கத்தில் லாரிக்கு வழி விட எண்ணி, பிரேக்கைப் பிடித்தார். அதிர்ந்தார். பிரேக்கே பிடிக்கவில்லை!

விபத்தைத் தவிர்க்க, வண்டியைத் திருப்பினார். பள்ளத்திற்கு முன் பெருங்கல்லில் மோத, எகிறி விழுந்தார்.

விபத்தில் அடிபட்டு அப்பா பலத்த காயங்களுடன் மருத்துவமனையிலிருக் கிறார் என்கிற செய்தி, வகுப்பிலிருந்த சோமுவுக்கு எட்டியது.


தன் பழிவாங்கும் திட்டத்திற்குத் தன் தந்தையே பலியாகி விட்டதை உணர்ந்து வருந்தினான். வெளிப்படையாகத் தன் தவறைக் கூறி மன்னிப்புப் பெற முடிவு செய்து பள்ளி விட்டதும் ஆஸ்பத்திரியை அடைந்தான்.

தந்தைக்கு ஆசிரியர் முருகானந்தம் மருந்து புகட்டுவதைக் கண்டதும் சோமுவின் கண் கலங்கியது. ஆசிரியரின் காலடியில் விழுந்து உண்மையைக் கூறிக் கதறினான்.


முருகானந்தம் அவனை எழுப்பினார். "தவறை உணர்ந்தால் திருந்தி விடுவாய் சோமு. இனி இப்படி நடந்து கொள்ளாதே. பிரேக்கைக் கழற்றியதை தற்செயலாக அந்தப் பக்கம் வந்த உன் அப்பா பார்த்து விட்டார். நீ செய்ததை என்னிடமும் உடனடியாகக் கூறி மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். உனக்குப் புத்தி கற்பிக்கவே, எதுவும் தெரியாதது போல் இருவரும் நடந்து கொண்டோம்" என்றார் ஆசிரியர்.

மயில்சாமியும், தன் போலிக் கட்டுகளை அவிழ்த்துப் போட்டு எழுந்து நின்றார். ஆசிரியரும் மயில்சாமியும் புன்னகைத்துக் கொண்டனர்.

"நான் இனிமேல் புது சோமு. நல்ல மாணவன்" என கம்பீரமாகக் கூறினான் சோமு.


1
3
5
6









தவறுகள் என்ன? போட்டி

நம்முடைய ஓவியர் அதிக வேலை காரணமாக இங்கே ஒவ்வொரு படத்திலும் ஒரு தவறைச் செய்திருக்கிறார். அவை என்ன என்பதைக் கண்டுபிடித்து, ஒரு தபால் கார்டில், படங்களுக்கு உரிய எண், எதிரே அதற்கு உரிய தவறைக் காரணத்துடன் குறிப்பிட்டு உங்கள் முழு முகவரியையும் எழுதி, முகவரிக் கூப்பனையும் தவறாது ஒட்டி அனுப்பி வையுங்கள். முடிவு தேதி 29.2.96. தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு அலுவலகம் பொறுப்பேற்காது. வெளிநாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியைத் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடை எழுதினால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்
கோகுலம்
47 ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை – 600 097


தங்கராணி, மு. வைத்தி லிங்கம், பக்.92. ரூ.15/- தேன் தமிழ்ப் பதிப்பகம், 5.123 அங்கம்மாள் நகர், சேலம் - 636009.

நீண்டகாலமாகச் சிறுவர் இலக்கியம் படைத்து வரும் ஆசிரியரின் சிறுகதைத் தொகுப்பு இது. சிறுவர்க்கான எல்லாக் கதைக் களன்களும் உள்ளன. சிறுவர் நூல் என்பதால் சில படங்களும் இருந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். ஆசிரியரின் தமிழார்வத்தை நூல் நெடுகக் காண முடிகிறது. நல்ல முயற்சி.

வீரச்சிறுவன் வைரமணி, எஸ்.ஆர்.ஜி. சுந்தரம், பக்.96, ரூ. 15/- பாற்கடல் பதிப்பகம், 12 ஆறுமுகம் சந்து, திருவல்லிக் கேணி, சென்னை - 5.

விலை மதிப்பில்லாத மரங்களைக் கடத்தும் நாசகரன் ஒருவனையும், அவனது உதவியாளர்களையும் வீரமணி என்ற சிறுவன் கண்டுபிடித்துக் கொடுப்பதுதான் நூலின் சுருக்கம். சுவையான உத்திகளுடன் கதை விறுவிறுப்பாக ஓடுவது ஆசிரியரின் திறமைக்கு எடுத்துக் காட்டு. ஏராளமான படங்கள். குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய எல்லப்பா ரங்கம்மாள் அறக்கட்டளைப் போட்டியில் 2-வது பரிசைப் பெற்றது என்பது இதன் தரத்தை உணர்த்தப் போதுமானது.

காந்திபொம்மை, ஜெ. எத்திராஜன், பக்.96, ரூ.25/ - குழந்தை இலக்கியக் கழகம், 72 கிருஷ்ணா நகர், சூளைமேடு அரசம்பட்டு எதிரில், சென்னை - 91.



எத்தனையோ தரமான எழுத்தாளர்கள் சிறுவர்க்காக எழுதத் தனது திறமைகளை ஏணியாகப் பயன்படுத்தியுள்ள படைப்பாளரின் தரமான சிறுகதைத் தொகுப்பு இது. ஒவ்வொன்றும் ஒரு வித்தியாசமான கதைக் களம். கதைகள் நிற்காது படிக்கத் தூண்டுகின்றன. படங்களும், அச்சும் நூலுக்குக் கூடுதல் சிறப்பு. சிறுவர் இலக்கியம் படைக்க விரும்புவோருக்கு பெரிதும் உதவும்.

போராட்டம், மு. வைத்தியலிங்கம், பக்.108 ரூ. 20/- தேன் தமிழ்ப் பதிப்பகம், 5-123. அங்கம்மாள் நகர், சேலம் - 636 009.

பழைய பண்பாடுகளில் ஊறிய ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்த கிராமத்துச் சிறுவன் ஒருவன், கட்டுக் குடுமியோடும், ருத்ராட்சத்தோடும் பூணுலோடும் நகருக்குப் படிக்க வருகிறான். மாணவர் விடுதிப் பிள்ளைகளின் நக்கல்களுக்கும் தாக்குதலுக்கும் இலக்காகிறான். அவனுக்கு ஏற்படும் இடர்கள், அவன் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு இறுதியில் தன்னை மாற்றிக் கொண்டு, பெற்றோரின் ஒப்புதலையும் பெறுவது தான் கதை. புதிய் கதைக் களத்தைக் காட்டும் ஆசிரியர் நாவலைத் திறமையாகக் கையாண்டிருக்கிறார். சிறுவனின் மனப் போராட்டம் மிக அழகாகத் தரப்பட்டுள்ளது. இடையிடையே பகுத்தறிவுக் கருத்துக்களும் இணைக்கப்பட்டுள்ளன. ஆசிரியருக்கு வெற்றியே. ஒருபடம் கூட இல்லையே!

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.

GOKULAM (Tamil) February '96 REGISTERED NO. TN MS (S) 281 Registered as Newspaper is Sri Lanka